# அரசியல் விஞ்ஞானம்

க.பொ.த. (உயர் தரம்)

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

2010 முதல் 13 ஆம் தரத்துக்கானது

சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

அரசியல் விஞ்ஞானம்
தரம் - 13
ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி
2010

© தேசிய கல்வி நிறுவகம்

ISBN 978-955-654-369-8

**சமூக, விஞ்ஞானத்துறை**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

**அச்சுப்பதிப்பு:**
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
பானலுவ, பாதுக்க.

# முன்னுரை

இவ்வாசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது 2010 முதல் தரம் 13 இற்கான கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கினைத் திட்டமிட்டுக்கொள்வதற்காக ஆசிரியர்களுக்குப் பயன்படும்.

இந்நூலை ஆக்குவதில் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட பாடத்திட்டம் இதுவரை இருந்த பாடத்திட்டத்திலிருந்து வேறுபட்டது. அம்மாற்றத்தை இனங்கண்டுகொள்ள முன்வரும் உங்களுக்கு அது ஒரு தேர்ச்சிமையப் பாடத்திட்டம் என்பதைப் புரிந்துகொள்ளலாம். இங்குள்ள ஒவ்வொரு தேர்ச்சியும் அதே வகுப்பில் அமையப்பெற வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதில்லை. சிலவேளை அதற்காக நீண்ட காலம் எடுக்கலாம். ஆயினும் தேர்ச்சி மட்டங்களில் கீழ் காட்டப்பட்டுள்ள கற்றற்பேறுகள் அவ்வத் தரத்தின்போது அடையப்பட வேண்டும். எனவே உங்கள் வகுப்பு தொடர்பில் பாடங்களைத் திட்டமிடும்போது இக்கற்றல் பேறுகளும் தேர்ச்சி மட்டங்களும் பெரிதும் பயனளிக்கும்.

இங்குள்ள செயற்பாடுகள் உங்களை ஓர் ஆக்கரீதியான ஆசிரியராக ஆக்கும் நோக்கில் எடுத்துக்காட்டாக முன்வைக்கப்பட்டுள்ளவை எனக் கருதவும். ஆசிரியர் மைய வகுப்பறைச் செயலொழுங்கை மாற்றி மாணவர் மைய நிலையொன்றை ஏற்படுத்துவதே பிரதான நோக்கமாகும். எனவே மாணவர்களையும் பல்வேறு நூல் உசாவுகையின் பாலும் இணையத்தளத்தைப் பயன்படுத்துவதிலும் வழிப்படுத்தும் கற்றல் வாய்ப்புகளை முடியுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உருவாக்க வேண்டும். கற்பித்தலின்போது மரபு ரீதியாக குறிப்புகளை வழங்குவதற்குப் பதிலாகக் கவர்ச்சிகரமான புதிய கற்றற் கோட்பாடுகள் போன்றவற்றை முன்வைத்தல் வேண்டும். அதற்காகத் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட தொடர்பாடல் உத்திகளைப் பயன்படுத்துவதற்கும் வகுப்பறையில் ஆர்வம் செலுத்த வேண்டும். அதற்காக முடியுமான அளவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் விதத்தில் ஆக்கரீதியாகச் செயற்படல் முக்கியமாகும்.

தரம் 13 இல் இப்பாடத்தை கற்பிக்க ஆரம்பிக்கும்போது முதலில் பாடத்திட்டத்தை நன்கு விளக்கவும். வருடம் முழுவதும் நீங்கள் மேற்கொள்ளும் கற்பித்தல் திட்டமிடலை அறிமுகப்படுத்துவதாயின் அது மாணவர்களுக்கு ஓர் ஊக்குவிப்பாக அமையும். பாடத்திட்டத்தை பூரணமாக நிறைவேற்றுவதால் மாணவர் பாடசாலையின் மீது ஆர்வம் கொள்வர். இக்கலைத்திட்டச் சீர்த்திருத்தத்தை நாட்டுக்கு விளக்கும் வகையிலான வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகக் குறிப்பிட்ட பாடத்திட்டம் மற்றும் உத்தேசச் செயலொழுங்கு ஊடாக உங்கள் ஆக்கத்திறன் ஆற்றலை மலரச் செய்யுமாறு வேண்டுகிறேன்.

இவ்வழிகாட்டற் கோவையைத் தயாரிப்பதில் பங்களிப்புச் செய்த அனைத்து அறிஞர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தேசிய கல்வி நிறுவக உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக. இப்பணிக்கான வழிகாட்டலை வழங்கிய பணிப்பாளர் நாயகம் கலாநிதி. உபாலி சேதர அவர்களுக்கும் அச்சுப் பதிவுகளை மேற்கொண்டு பாடசாலைகளுக்குப் பகிர்ந்தளிக்கும் பணியைப் பொறுப்பேற்ற கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் உட்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் எனது சிறப்பான நன்றிகள் உரித்தாகும். இதில் இடம்பெற்றுள்ள விடயங்கள் தொடர்பில் அபிவிருத்திக்கான ஆலோசனைகளை எனக்கு அனுப்புவீர்களாயின் நன்றியுடையவனாயிருப்பேன்.

**விமல் சியம்பலாகொட**

உதவிப் பணிப்பாளர் நாயகம்

மொழிகள், மானுடவியல், சமூகவிஞ்ஞான பீடம்

## கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

அரசினால் சகல பாடசாலை மாணவர்களுக்கும் பாடநூல்கள் இலவசமாக வழங்கப்படுவதுடன் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளும் வழங்கப்படுவதானது கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளை உச்சப் பயன்மிக்கதாக ஆக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டதாகும்.

பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்ச்சிகளை மாணவர்கள் அடையும் பொருட்டு வினைத்திறன் மிக்க கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளினூடாக மாணவர்களை வழிநடத்தும் நபர் ஆசிரியரேயாவார். எனவே, உங்கள் பொறுப்பை மிகத் தெளிவாக விளங்கிக் கொண்டு, இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியை உச்சப் பயனைப் பெறும் வகையில் பயன்படுத்துங்கள். அதன் மூலம் கற்பித்தல் செயற்பாடு தொடர்பில் நல்லறிவு பெறுவதனூடாக கற்றல் செயற்பாட்டிலிருந்து மாணவர்கள் உச்சப் பயனைப் பெற்றுத் தேர்ச்சி மட்டங்களை அடையும் பொருட்டு அவர்களுக்கு அறிவூட்டும் பொறுப்பு உங்களைச் சார்ந்ததே.

தற்கால உலகின் சவால்களை வெற்றி கொள்ளும் மாணவர் பரம்பரையொன்றை உருவாக்கும் பாரிய பணியில் ஈடுபட்டுள்ள உங்களுக்கு, இதன்மூலம் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பண்புத் தர மேம்பாட்டை ஏற்படுத்த முடியும் என நம்புகிறேன்.

**டபிள்யு.எம்.என்.ஜே.புஸ்பகுமார**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
‘இசுருபாய’
பத்தரமுல்ல
2009. 07. 21

# வளவாளர் பெயர்ப்பட்டியல்

## ஆலோசனை

| | | |
|---|---|---|
| பேராசிரியர் லால் பேரேரா | - | பணிப்பாளர் நாயகம், (முன்னாள்) தேசிய கல்வி நிறுவகம் |
| திரு.விமல் சியம்பளாகொட | - | உதவிப்பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம் |

## இணைப்பாளர்கள்

| | | |
|---|---|---|
| திருமதி. டபிள்யு.ஏ.குமுதேந்திரி சுதர்ஷினி | - | செயற்றிட்ட அதிகாரி - தேசிய கல்வி நிறுவகம் |
| திரு.எஸ்.கருணாகரன் | - | உதவிச் செயற்றிட்ட அதிகாரி - தேசிய கல்வி நிறுவகம் |

## கலைத்திட்ட ஆலோசனை

| | | |
|---|---|---|
| பேராசிரியர் எம்.ஓ.ஏ.த.சொய்சா | - | பேராதனைப் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் நவரட்ண பண்டார | - | பேராதனைப் பல்கலைக்கழகம் |
| திரு.என்.பீ.எம். சைப்தீன் | - | சிரேஷ்ட விரிவுரையாளர் - பேராதனைப் பல்கலைக்கழகம் |
| திரு.தம்ம திசாநாயக்க | - | சிரேஷ்ட விரிவுரையாளர் - கொழும்புப் பல்கலைக்கழகம் |
| திரு.மகேஸ் சேனநாயக்க | - | சிரேஷ்ட விரிவுரையாளர் - கொழும்புப் பல்கலைக்கழகம் |
| திரு.ரஞ்சித் திக்வெல்ல | - | விரிவுரையாளர் - பேராதனைப் பல்கலைக்கழகம் |

## செயற்றிட்ட குழு

| | | |
|---|---|---|
| திருமதி. டபிள்யு.ஏ.குமுதேந்திரி சுதர்ஷினி | - | செயற்றிட்ட அதிகாரி - தேசிய கல்வி நிறுவகம் |
| திரு.எஸ்.கருணாகரன் | - | உதவிச் செயற்றிட்ட அதிகாரி - தேசிய கல்வி நிறுவகம் |

## எழுத்தாளர் குழு

| | | |
|---|---|---|
| திருமதி.எம்.எம்.ஜீ.சீ.ரத்னாயக்க | - | உயர்தர மகளிர் பாடசாலை - கண்டி |
| திருமதி.எஸ்.பீ.பேமவதி | - | புனித தோமஸ் மகளிர் வித்தியாலயம் - மாத்தறை |
| திரு.கே.ஏ.என்.புஷ்பகுமார | - | பொலேகொட ம.வி. - மஹரகம |
| திரு.சுஜீவ மிரிஹாகல்ல | - | யாக்கரவத்த ம.வி. - கித்தலவ |
| திரு.பி.எம்.சுனில் விமலசிறி | - | ஸ்ரீ பாரதி வித்யாரத்ன பிரிவென - பெனிதெனிய |
| திரு. சரத் பேமகுமார தென்னகோன் | - | ஹெட்டிபொல மகா வித்தியாலயம் - ஹெட்டிபொல |
| திருமதி.டீ.எச்.பீ. லலன்திகா அபேரத்ன | - | குருதெனிய மகா வித்தியாலயம் - குருதெனிய |
| திருமதி. தமரா விஜேரத்ன | - | மஹிந்த ராஜபக்ஷ மகா வித்தியாலயம் - உக்வெல்ல |
| திரு.எம்.எச்.எம்.யாக்கூத் | - | (ஓய்வுபெற்ற) பிரதம செயற்றிட்ட அதிகாரி - தே.க.நி. |
| திருமதி.எஸ்.பாலசுந்தரம் | - | (ஓய்வுபெற்ற) பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர் |
| திரு.எம்.ஜே.எம்.அஸ்ஹர் | - | (ஓய்வுபெற்ற) கல்விப் பணிப்பாளர் |
| திருமதி. எஸ்.ஆர். ஹஸ்மி | - | பதியுத்தீன் ம.தேசியகல்லூரி, கண்டி |
| திரு.எஸ்.ஏ.சி.எம். கராமத் | - | ஒய்வு பெற்ற அதிபர், தரம்-1 |

**இணையத்தள முகவரி** - www.nie.lk

**கணினி வடிவமைப்பு** - திருமதி. சுபாஷினி டேவிட்

## முன் அட்டைப்படம்

| | | |
|---|---|---|
| செல்வி ஏ.எல்.எஸ்.பி.அத்தபத்து | - | சமூக, விஞ்ஞானத்துறை, தேசிய கல்வி நிறுவகம் |

## ஏனைய உதவிகள்

| | | |
|---|---|---|
| திருமதி.எம்.என்.எப்.றிஹானா | - | சமூக, விஞ்ஞானத்துறை, தேசிய கல்வி நிறுவகம் |
| திருமதி.ஷிரானி தீப்திகா சமரக்கொடி | - | சமூக, விஞ்ஞானத்துறை, தேசிய கல்வி நிறுவகம் |
| திரு.ஆர்.எம்.ரூபசிங்ஹ | - | சமூக, விஞ்ஞானத்துறை, தேசிய கல்வி நிறுவகம் |

# உள்ளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| அறிமுகம் | | | ii |
| முன்னுரை | | | iii |
| கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி | | | iv |
| வளவாளர் பட்டியல் | | | v |
| 01. | அலகு 09 | பொது நிர்வாகம், பொதுக்கொள்கை, முகாமைத்துவம் | 01 - 06 |
| 02. | அலகு 10 | மோதலும் மோதல் தீர்வும் | 07 - 18 |
| 03. | அலகு 11 | சர்வதேச அரசியல் | 19 - 27 |
| 04. | அலகு 12 | தெரிவு செய்யப்பட்ட அரசியலமைப்பு மாதிரிகள் | 28 - 48 |
| 05. | அலகு 13 | சுதந்திர இலங்கையின் அரசியலமைப்புக்களின் விசேட தாபனங்களும் ஏற்பாடுகளும் | 49 - 57 |
| 06. | அலகு 14 | இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதியின் அதிகாரங்களும் பணிகளும் | 58 - 66 |
| 07. | அலகு 15 | சமூகத்தில் செயற்படும் அரசியலின் இயல்பு | 67 - 70 |
| 08. | அலகு 16 | பூகோள மற்றும் பிராந்திய ரீதியான அரசியலில் இலங்கை | 71 - 101 |
| பாடசாலை மட்டக் கணிப்பீடு | | | 102 - 109 |

## அலகு 09 : பொதுநிருவாகம், பொதுக்கொள்கை, முகாமைத்துவம்

**தேர்ச்சி 9.0 :-** பொது நிருவாகம், பொதுக்கொள்கை, முகாமைத்துவம் தொடர்பான பகுப்பாய்வில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம் :-**
9.1 பொது நிருவாகம், பொதுக்கொள்கை மற்றும் முகாமைத்துவக் கோட்பாடுகளைப் பகுப்பாய்வார்.
9.2 பொதுமக்களின் நலனுக்காக, பொதுக்கொள்கை வகுத்தல், பொது நிருவாகம் மற்றும் முகாமைத்துவம் உதவும் விதத்தைப் பகுப்பாய்வார்.

### கற்றற் பேறுகள்

- பொது நிருவாகம் (அரசாங்க நிருவாகம்) என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.
- பொது நிருவாகத்தின் அடிப்படையான அம்சங்களையும் அதன் முக்கியத்துவத்தையும் விவரிப்பார்.
- பொதுக்கொள்கை (அரசாங்கக் கொள்கை) என்பது யாது எனக் கருத்துரையாடுவார்.
- பொதுக்கொள்கைக்கும் பொது நிருவாகத்துக்கும் இடையிலான தொடர்பை எடுத்துக்காட்டுவார்.
- பொதுக்கொள்கையை வகுப்பதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் பங்களிப்புச் செய்யும் நிருவாக நிறுவனங்களையும் நபர்களையும் இனங்காண்பார்.
- முகாமைத்துவம் என்பது யாது என வரைவிலக்கணப்படுத்துவார்.
- முகாமைத்துவச் செயன்முறையின் அடிப்படையான இயல்புகளை விபரிப்பார்.
- பொதுக்கொள்கைகளை நடைமுறைப்படுத்துகையில் முகாமைத்துவம் முக்கியத்துவம் பெறும் விதத்தை விபரிப்பார்.

### அறிமுகம்

- இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் இடம்பெற்ற நலனோம்பு (பொதுநல) ஆட்சிமுறை வளர்ச்சியுடன் அரசின் முக்கியமான பொறுப்புகளில் ஒன்றாக கொள்கை ஆக்கம் அமைந்தது. பொது நிருவாகம் என்பது அவ்வாறு தயாரித்த பொதுக்கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதாகும்.
- பொதுக்கொள்கை என்பதன் மூலம் அரசு தனக்குப் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ள பொது விடயப் பரப்புகளில் பின்பற்ற வேண்டிய உபாய ரீதியான (Strategy) வழிகாட்டலை விளக்குதலே கருதப்படுகிறது.

நலனோம்பும் அரசில் அதிகமதிகமானோருக்கு உச்ச மகிழ்ச்சி ஏற்படத்தக்க வகையிலேயே பொதுக்கொள்கைகள் வகுக்கப்படுதல் வேண்டும். அரசியற் போராட்டத்தின் சகல மோதல்களினதும் இறுதியிலும் கொள்கை வகுத்தல் மூலம் இறுதித் தீர்மானம் எடுக்கப்படுவதே அப்போது நிகழுகிறது. சமூகத்தில் மனிதரின் நலனோம்பல், செல்வம் பாதுகாக்கப்படல், அந்தஸ்து போன்ற பெறுமானங்கள் அதிகார ரீதியில் தீர்மானிக்கப்படுகிறது. யார், எதனை, எவ்வாறு, எச்சந்தர்ப்பத்தில் எடுப்பது என்பதைத் தீர்மானித்தலே பொதுக்கொள்கை தயாரித்தல் மூலம் செய்யப்படுவதாக பேராசிரியர் ஹரல்ட் லவெல் கூறுவதற்கான காரணமும் அதுவாகும். நலனோம்பல், பாதுகாப்பு, சொத்துக்கள், நற்பெயர், சமூக அந்தஸ்து போன்றவையே இப்பெறுமானங்களாகும். இவை சமூகத்தில் பகிரப்படும் விதம் பொதுக் கொள்கையினாலேயே தீர்மானிக்கப்படும். மனிதரிடையே அதிகார வளப்பகிர்வு பொதுக்கொள்கையினூடாகச் செய்யப்படுகின்றது என்பதே இதன் கருத்தாகும்.

அதன் விளைவாக, சமூகத்தில் காணப்படும் வகுப்பு முறை, அரசியல் அதிகாரம், உயர் குடிகள், உயர்குடியல்லாதோர் ஆகிய அதிகாரக் கட்டமைப்புக்கள் கொள்கை வகுத்தலின்போது செல்வாக்குச் செலுத்தும். கொள்கை வகுத்தலை விஞ்ஞான பூர்வமாகச் செய்யலாம். அதற்காக அறிவையும் (Knowledge) பகுத்தறிவையும் (Rationality) ஒன்றிணைத்தல் வேண்டும். அதிகமதிகமானோருக்கு உச்ச நன்மை கிடைக்கும் வகையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்போது தம் வசமுள்ள விஞ்ஞான அறிவையும் பகுத்தறிவையும் ஒன்றுசேர்த்து தீர்வு காண்பது அவசியமாகும். பொதுக்கொள்கைகள் மேற்படி இரண்டு அம்சங்களிலும் பயிலப்படும். முதலாம் அம்சத்தின்படி பொதுக்கொள்கை பற்றிப் பயிலப்படும். இரண்டாம் அம்சம், கொள்கை ஆக்கத்தில் அடங்கியுள்ள நுட்பச் செயன்முறையை விளக்குவதாக அமையும்.

கொள்கை வகுப்போர் எடுக்கும் தீர்மானங்களை வெற்றிகரமாக நெறிப்படுத்தும் கலையையும் அறிவியலையும் விளக்குவது முகாமைத்துவமாகும்.

வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தி, விளைதிறனுடைய வகையில் குறிக்கோள்களை அல்லது நோக்கங்களை அடைவதற்குரிய பணிகளை உள்ளடக்கிய செயன்முறையென அதனைக் குறிப்பிடலாம். எனினும் பொதுக்கொள்கைகளை நடைமுறைப்படுத்தும்போது பொது நிருவாகமானது முகாமைத்துவம் எனும் செயற்பாட்டுக்கு அப்பாலும் உள்ள பணிகளுடனும் தொடர்புறுகின்றது. பொது மக்கள், சமூகம், பிரதேசம் வரையில் அதாவது கள மட்டங்கள் வரையில் சென்று பிரச்சினைகளை இனங்கண்டு கொள்வதற்கும் அவற்றுக்கு தீர்வு காண்பதற்கும், சேவைகள் வழங்குவதற்கும் கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பதற்குமாக பொது நிருவாகம் செயற்படவேண்டியுள்ளது. எனவே எல்லா நிருவாகிகளும் முகாமையாளர்களல்ல. எல்லா முகாமையாளர்களும் நிருவாகிகளல்ல எனக் குறிப்பிடப்படுகின்றது.

## பாடவிடயங்களை விளங்கிக்கொள்வதற்கான வழிகாட்டல்

- பொது நிருவாகம்
- பொது நிருவாகம் என்பது அரசின் நிறைவேற்று அம்சமாகும்.
- அது நுட்பச் செயற்பாடுகளை ஆற்றும் பிரிவாகும்.
- அரசதுறை வசமுள்ள வளங்களைச் சிக்கனமாகவும் இலாபகரமான வகையிலும் பயன்படுத்தி செயல்படுத்துதல் வேண்டும். எனவே அது அரசின் தொழில் அந்தமும் ஆகும். (Business End if the Government).
- பொதுக்கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதையும் முறைப்படுத்துவதையும் நோக்காகக் கொண்ட எல்லாப் பணிகளையும் பொதுநிருவாகம் உள்ளடக்கியுள்ளது.
- பொது நலனோம்பலின் வளர்ச்சியானது பொதுநிருவாகத்தின் வளர்ச்சிக்குக் காரணமாகியுள்ளது.
- கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக அறிவுறுத்தல் வழங்கப்படுதல், அவற்றை நடைமுறைப்படுத்தல் மற்றும் அதற்கான பொறிமுறையைத் திட்டமிடுதல்.
- நிருவாக ஒழுங்கமைப்புச் செயன்முறையை நடத்திச் செல்வதற்காக பணிக்குழுவாட்சி (பணித்துறையாட்சி) எனும் ஒழுங்கு முறைமை கட்டியெழுப்பப்பட்டுள்ளது. மக்ஸ் வெபர் (Max Weber) எனும் சமூகவியலாளர் இது தொடர்பான ஒரு கோட்பாட்டை முன்வைத்துள்ளார்.

- நிருவாகத்தின்போது துறைசார் அறிவு, தொழில்களாகச் செயற்படுதல், உத்தியோகபூர்வ கடமைகள், பொறுப்புக்களை வகித்தல் ஆகிய நிலைமைகள் காணப்படும். இவை அரசியல் சாராது நடைபெறுதல் வேண்டும். பொதுநிருவாகத்தின் தந்தை எனக் கருதப்படும் பேராசிரியர் வுட்ரோ வில்சன் (Woodrow Wilson) 1887 இல் நிருவாகப் பிரச்சினைகள், அரசியற் பிரச்சினைகளல்ல எனக் குறிப்பிட்டதற்கான காரணம் அதுவாகும்.
- பொது நிருவாகத்துக்கான அரச இயந்திரம் (அரச பொறிமுறை ஆட்சியமைப்பு) தற்போதைய அரசுகளின் அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், அதிகார சபைகள் எனும் நிறுவனங்கள் ஊடாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

## பொதுக்கொள்கை

- தமக்குப் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள துறைகளில் அனுசரிக்க வேண்டிய உபாயங்கள் (Strategy) பொதுக்கொள்கைகளாலேயே அரசுக்கு முன்வைக்கப்படும்.
- கொள்கை என்பது அரசியல் மூலம் சமூகத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் பெறுமானத் தொகுதியாகும் என ஹரல்ட் லஸ்வேல் குறிப்பிட்டுள்ளார்.
- பொதுக்கொள்கை வகுத்தலானது பிரதானமாக அரசியல் நிறைவேற்றதிகாரத்தின் ஒரு பொறுப்பாகும். பொருளாதாரக் கொள்கை, நலனோம்பல் கொள்கை, சுகாதாரக் கொள்கை, வெளிநாட்டுக் கொள்கை என்றவாறாக அவ்வத் துறைக்குரிய அடிப்படையான வழிகாட்டல்களை வழங்கும் திறமுறைகள் (உபாயங்கள்) பொதுக்கொள்கையுடன் தொடர்புடையதாகும்.
- பொதுக்கொள்கையின் அடிப்படையான இயல்புகள்.
  - குறித்த குறிக்கோள்களுக்கு இலக்குகள் இருத்தல்.
  - பொது நன்மையளித்தலை நோக்காகக் கொண்ட பொதுக்கொள்கைகள், பொதுமக்களின் தேவைகளுக்கு அமைவாக வேண்டும்.
  - பொதுக்கொள்கைகள் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டவை. அவை நீதிமன்ற அவதானிப்புக்கு அமைவாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ளன.
  - கொள்கை விஞ்ஞானத்தின்படி பொதுக்கொள்கைகள் பிரதானமாக சில கட்டங்களைத் தாண்டிச் செல்வது அவசியமாகும்.

### 1. **கொள்கை முனைப்பு** (Policy Initiation)

இங்கு முன்னுரிமை அடிப்படையில் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை வியாக்கியானஞ் செய்தல், ஒழுங்குபடுத்தல் போன்ற பணிகளைச் செய்து, கொள்கை நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படும். இங்கு மாற்றுக்கொள்கைகள் இனங்காணப்படும்.

### 2. **கொள்கையை உருவாக்கல்** (Policy Formulation)

மேலே இனங்கண்ட பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மாற்றுக் கொள்கைகளுள் மிகச் சிறந்த மாற்றைத் தெரிவுசெய்துகொள்வது இச்சந்தர்ப்பத்தில் நிகழும். இந்த தெரிவுசெய்யப்பட்ட கொள்கையைத் திட்டமிடுதல், அதனை நடைமுறைப்படுத்தும் விதத்தையும் ஒழுங்கையும் திட்டமிடலையும் உள்ளடக்கி, கொள்கை வகுத்தல் செய்யப்படும் சந்தர்ப்பம் இதுவாகும்.

## 3. கொள்கையை நடைமுறைப்படுத்தல் (Policy Implementation)

இச்சந்தர்ப்பத்தில் கொள்கை நடைமுறைப்படுத்தப்படும். இது நிருவாகப் பணியாகும். பொதுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதலானது பொதுநிருவாகத்தினால் மாத்திரம் தனியாகச் செய்யக்கூடிய ஒன்றல்ல என்பது இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தனியார்துறை, அரசுசார்பற்ற நிறுவனங்கள் (தொண்டர் அமைப்புக்கள்) கணிசமான பங்கை வகிக்கின்றன. அவற்றுடன் கூட்டாகச் செயற்பாட்டை உருவாக்க வேண்டும்.

## 4. கொள்கைகளை மதிப்பிடல் (Policy Evaluation)

கொள்கை மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அடையப்பெற்றுள்ளதா என்பதை மதிப்பிடுவது இச்சந்தர்ப்பத்தில் நிகழும். கொள்கையை தொடர்ந்தும் முன்னெடுத்தல், அதனை மீண்டும் தயாரித்தல், கொள்கையை முடிவுறுத்தல் என்பன மதிப்பீட்டின் இறுதியில் நிகழும்.

நடைமுறைப்படுத்தும் அனுபவங்களை மதிப்பிடுதலும் பின்னூட்டல் செயன்முறையும் இதில் அடங்கும்.

### கொள்கை வாழ்க்கை வட்டம் (Policy Life Cycle)



## முகாமைத்துவம்

- பொதுக்கொள்கைகளை நடைமுறைப்படுத்துகையில் பயன்படுத்தப்படும் பௌதிக, மனித வளங்கள் மூலம் உச்ச பயனைப் பெறுவது அவசியமாகும். அதற்காகப் பயன்படுத்தும் முறைகள், உத்திகள், முகாமைத்துவத்தினால் முன்வைக்கப்படும். பௌதிக, மனித வளங்களை மேலும் கூடுதலான பயனுடையதாக, ஒழுங்காகக் கையாளுதல் முகாமை செயன்முறையினுள் நிகழுதல் வேண்டும்.

- முகாமைத்துவம் தொடர்பாக முதன் முதலில் ஆராய்ந்த பெட்ரிக் டேலர் என்பாரின் கருத்துப்படி பயனுறுதி, வினைத்திறன், பகுத்தறிவு, இலாபம் ஆகிய பெறுமானங்களை உச்சமாக்கும் மிகச் சிறந்த முறையை விஞ்ஞானச் சோதனை மூலம் கண்டறிதல் வேண்டும். அதற்கமைய வேலைசெய்யும் உண்மை விஞ்ஞானத்தைக் கண்டறிந்த பின்னர், மிகச்சிறந்த பணியணியினரைத் தெரிவுசெய்துகொள்ள வேண்டும். மேம்படுத்தல் வேண்டும். அவர்களது ஊக்கங்களை மேம்படுத்தும் ஒதுக்கீடுகளை வழங்குதல் வேண்டும். இதுதான் முகாமைத்துவம். அதன் மூலம் முகாமையாளருக்கும் பணியாளருக்கும் இடையே நல்ல பிணைப்பு ஏற்படும்.

- மற்றுமொரு பழம்பெரும் முகாமைத்துவ விஞ்ஞானியாகிய ஹென்றி பெயோல் (Hendry Fayol) முகாமைத்துவமானது திட்டமிடல், ஒழுங்கமைத்தல், கட்டளையிடல், இணைப்பாக்கம், கட்டுப்படுத்தல் எனும் பணிகளை உள்ளடக்கியது எனக் குறிப்பிட்டுள்ளார்.

- லூதர் குலிக் இதனை மேலும் மேம்படுத்தியுள்ளார். அதில்,

  - திட்டமிடல் - Planning
  - ஒழுங்கமைத்தல் - Organizing
  - ஆட்சேர்ப்பு - Staffing
  - நெறிப்படுத்தல் - Directing
  - இணைப்பாக்கம் - Coordination
  - பதிவுசெய்தல் - Recording
  - வரவுசெலவுப்படுத்தல் - Budgetting

  ஆகிய பணிகளை அடக்கியுள்ளார். இது 'POSDCORB' View Point எனும் பெயரில் பிரபல்யமடைந்துள்ளது. (போஸ்ட்கோப்)

  நவீன முகாமைத்துவமானது புதிய தொழினுட்பமும் மற்றும் விஞ்ஞானத்தின் புரட்சியும் இணைந்து உருவாகியுள்ளது. இன்று இது மின் ஆட்சி (E - Governance) வரை முன்சென்றுள்ளது. இணையம், முகாமைச் செயன்முறையில் பயன்படுத்தப்படுகின்றது.

- வர்த்தகத்தில் முகாமைத்துவத்தின்போது நுகர்வோருக்கே முதலிடம் கிடைக்கின்றது.

- இன்று பொது நிருவாகத்துக்குப் பதிலாக பொது முகாமைத்துவம் எனும் கலந்துரையாடல் முன்னிலையை அடைந்துள்ளது. வர்த்தக நிருவாகத்தின் மூலம் கற்றுக்கொள்ளல் அங்கு வலியுறுத்தப்படுகிறது.

- இங்கு நுகர்வோருக்கு - பிரஜைகளுக்கு துலங்கல் ரீதியான பொது முகாமைத்துவம் பற்றிய விடயங்கள் வழங்கப்படும். பெற்ற லீவின் பணப்பெறுமானத்தை அளத்தல், பணியின் விளைவை மதிப்பிடல், பணி விளைவின் அடிப்படையில் கொடுப்பனவு வழங்குதல் போன்ற விடயங்கள் இங்கு வலியுறுத்தப்படுகின்றன.

- அதற்கமைய பொது முகாமைத்துவமானது ஆட்சிசெய்தலை வலியுறுத்தவில்லை. மாறாக பயனுறுதி மிக்க பொது திறனாய்கையை அது வலியுறுத்துகின்றது. இவ்வாறானவற்றை வகுப்பதன் பெறுபேறாக நல்லாட்சி (Good Governance) சமூகத்தைச் சென்றடையும்.

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்

### 1. கருத்துக்களம்

வகுப்பு மாணவரைக் குழுக்களாகப் பிரித்து பொது நிருவாகம், கொள்கை வகுத்தல், முகாமைத்துவம் எனும் தலைப்பிற்கமைய பின்வரும் உப தலைப்புக்களின் கீழ் விடயங்களைச் சேகரிக்குமாறு அறிவுறுத்தல் வழங்குங்கள்.

- பொது நிருவாகம் - அறிமுகமும் அதன் அடிப்படையான அம்சங்களும்
- அரசியலுக்கும் நிருவாகத்துக்கும் இடையிலான தொடர்பு
- பொதுக்கொள்கைகள் மற்றும் கொள்கை வகுத்தல் செயன்முறை
- முகாமைத்துவத்தின் முக்கியத்துவமும் அதன் வளர்ச்சியும்.

மாணவர் திரட்டிய தகவல்களைக் கருத்துக்களத்தில் முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.

கருத்துக்களத்தைத் திட்டமிடல், உபதலைப்புக்களை ஒதுக்கிக் கொள்ளல், கருத்துக்களை ஒழுங்குபடுத்தி முன்வைத்தல் ஆகியன தொடர்பாக மாணவருக்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.

### 2. களப் பயணம்

1. பிரதேசச் செயலாளர் அலுவலகம் போன்ற அரச நிறுவனமொன்றின் திட்டத்தையும் நிருவாகக் கட்டமைப்பையும் ஆராய்தல்.

2. தனியார்துறை வணிக நிறுவனமொன்றின் திட்டத்தையும் நிருவாகக் கட்டமைப்பை ஆராய்தல்.

**உசாத்துணை**


1. Public Administration in theory and practice.
   M.P.Sharma
   Kitab Mahal – Alahabad – India – 1998

2. Public Administration conception theory Rumkaibasu
   Starling Publisher Pvt.Ltd.
   New Delhi – 2001

## அலகு 10.0 : மோதலும் மோதல் தீர்வும்

(Conflict and Conflict Resolution)

**தேர்ச்சி 10.1** :- மோதல் தீர்வுக்காக மிகவும் பொருத்தமான வகையில் தலையிடுவார்.

**தேர்ச்சி மட்டம்** :-
10.1 மோதல் என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.
10.2 மோதல் தீர்வுக்காகப் பயன்படுத்தப்படும் எண்ணக் கருக்களைப் பற்றிய அறிவூட்டத்தை வெளிக்காட்டுவார்.

### கற்றற் பேறுகள்

- மோதல் என்பது யாது என இனங்காண்பதற்காகக் காணப்படும் பல்வேறு வரைவிலக்கணங்களைக் கோவைப்படுத்துவார்.
- மோதல் மூலங்களை விளங்கிக் கொள்வார்.
- மோதல்கள் மற்றும் அதன் விளைவுகள் காரணிகள் பற்றி அறிவூட்டம் பெறுவார்.
- மோதல் தீர்வுடன் தொடர்புடைய பல்வேறு எண்ணக்கருக்களைப் பகுத்தாராய்வார்.

### அறிமுகம்

மோதல், சமூகத்தின் சகல படித்தரங்களிலும் காணப்படும் ஒரு சமூகத் தோற்றப்பாடாகும். சமூகத்தில் காணப்படும் இயல்பான ஒரு பண்பாகிய பல்வகைமையின் விளைவே மோதலாகும் எனவும் குறிப்பிடலாம். ஆட்களின் ஆசைகள், தேவைகள், குறிக்கோள்கள், பெறுமானங்கள், அங்கீகாரங்கள் என்பவற்றில் காணப்படும் பல்வகைமையே மோதல்களால் காட்டப்படுகின்றது. சமூக மட்டத்தில் மேலும் பல விடயங்களால் குழுப் பல்வகைமை உருவாகின்றது. மொழி, சமயம், சாதி, பிரதேசம் போன்ற தனித்துவ அம்சங்கள் பாரிய பங்களிப்பைச் செய்கின்றன. எனவே சமூக மட்டத்தில் பல்வகைத் தன்மை காணப்படுகின்றது. அப்பல்வகைமை காரணமாக சமூகத்தின் சகல படித்தரங்களிலும் காணப்படும் ஒரு தொழிற்பாடாக மோதலை இனங்காண முடிகின்றது. அது சமூகத்தில் காணப்படும் பல்வேறு கருத்துக்களையும் போட்டாப்போட்டி நிலைப்பாடுகளையும் வெளிக்காட்டும் ஓர் ஊடகமுமாகும். மோதல் எனும் எண்ணக்கரு சமூக நடத்தையின்போது ஆக்கபூர்வமானதாகவோ அழிவுபூர்வமானதாகவோ இருக்க இடமுண்டு. மேலும் மோதலானது சமூக இயக்கத்தன்மையின் ஒரு சக்தியுமாகும்.

மோதல் பற்றியும் மோதலை நேயமான முறையில் தீர்க்கும் விதம் தொடர்பாகவும் விளக்கமளிப்பது இந்த அலகின் பிரதான நோக்கமாகும். முதலாவதாக மோதல் என்பதால் கருதப்படுவது யாது, அதன் முதன்மையான இயல்புகள் யாவை, அதன் மூலங்கள் யாவை, அதன் தன்மை யாது, மோதல் ஏற்படுவதில் பங்களிக்கும் பிரதான காரணிகள் யாவை என்பன குறித்து கவனஞ் செலுத்தப்படுகின்றது. அடுத்ததாக மோதலை நேயமான வகையில் தீர்ப்பது தொடர்பாக கவனஞ்செலுத்தப்படுகின்து. மோதல் - தீர்த்தல் தொடர்பான எண்ணக்கருக்களாகிய மோதல் தவிர்த்தல், மோதல் இணக்கப்படுத்தல், மோதல் முகாமை, மோதல் தீர்த்தல், மோதல் நிலைமாற்றல் என்பன கலந்துரையாடப்படுகின்றது.

## பாடவிடயங்களை விளங்கிக்கொள்வதற்கான வழிகாட்டல்

### ◈ மோதல் - அறிமுகம்

பொதுப் பிரயோகத்தில் மோதல் (Conflict) எனும் பதம் மட்டுமன்றி பிணக்கு (Dispute), நெருக்கடி (Crisis), சண்டை (Fight), வன்முறை (Violence) போன்ற பதங்களும் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வர்த்தங்களை நோக்குகையில் மோதல் என்பதன் மூலம் பிணக்கு, நெருக்கடி, சண்டை, வன்முறை போன்றவை கருதப்படுகின்றன எனக் குறிப்பிடலாம். எனினும் மோதல் குறித்து பகுத்தறிவு ரீதியில் நோக்கும்போது இவற்றுக்கும் மோதலுக்கும் இடையே தெளிவான வேறுபாடு காணப்படுகிறது.

மோதல்கள் சமூகத்தில் எல்லாப் படித்தளங்களிலும் மனிதத் தொடர்புகளுடனும் பிணைந்து காணப்படுகின்றன. மோதல் என்பது இருவருக்கு இடையே அல்லது அதற்கு மேற்பட்டோரிடையே அல்லது இரண்டு தரப்பினருக்கிடையே அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தரப்பினருக்கிடையே அல்லது இரண்டு நாடுகளுக்கு இடையே அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நாடுகளுக்கு இடையே காணப்படும் இணக்கப்பாடற்ற கலவர நிலையாகும்.

### ◈ தெரிவுசெய்யப்பட்ட வரைவிலக்கணங்கள்

- போட்டா போட்டியான அபிலாஷைகள், பல்வேறுபட்ட தனித்துவங்கள் மற்றும் மனப்பாங்கு மாற்றங்கள் காரணமாக, ஆட்களுக்கு அல்லது குழுக்களுக்கு இடையே உருவாகும் எதிர்ப்பை மோதல் எனலாம்.

  \- James A. Schellenberg

  ஒன்றுக்கொன்று எதிரான குறிக்கோள்கள் - இலக்குகளை அடையும் முயற்சியின்போது சுயாதீனமான தனியாட்களுக்கு இடையில் நிகழும் இடைத்தொழிற்பாட்டை மோதல் எனக் குறிப்பிடலாம்.

  \- J.L.Hocker and W.W.Wilmot

- ஒன்றுடனொன்று பொருந்தாத குறிக்கோள்களைக் கொண்ட ஆட்கள் இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் அது தொடர்பாக கருத்து வெளியிடும்போது சமூக மோதல்கள் தோன்றும்.

  \- Louis Kriesourz

- வன்முறையான எதிர்ப்படுதல், போராட்டம் அல்லது உளரீதியில் நிகழும் போராட்டமே மோதல் ஆகும்.

  \- The Webster English Dictionary

- ஆட்குழுக்கள் அல்லது அரசுகள் பாரதூரமான இணக்கப்பாடின்மைகள் அல்லது விவாதத்துக்குள்ளாகியுள்ள நிலைமைகளில் மோதல்கள் உருவாகும்.

  \- The Oxford Dictionary

மோதல் என்றால் என்ன என நோக்குகையில் அண்மைக் காலத்தில் மோதல் பற்றிய கற்கையின் விருத்தியில் பாரியளவில் பங்களிப்பு செய்துள்ள பேராசிரியர் ஜொஹான் கல்டுங் (Johan Galtung) என்பவரால் முன்வைக்கப்பட்டுள்ள மோதல் பாகுபாட்டுக்கான மாதிரி முக்கியமானது. அது மோதல் முக்கோணி எனப்படும். அதன்மூலம் மோதலினால் காட்டப்படும் ஒன்றுடனொன்று தொடர்புடைய அமைப்புக்கள், மனப்பாங்குகள், நடத்தைகள் என்பன தொடர்பாக கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. அதனைப் பின்வரும் படத்தின் மூலம் விளங்கிக்கொள்ளலாம்.

### கல்டுங் என்பவரால் முன்வைக்கப்பட்ட மோதல் முக்கோணி




(மூலம் : Miall, 1999 : 14)

இக்காரணிகள் சில வேளைகளில் வெவ்வேறாகவும் சில வேளைகளில் ஒன்றுடனொன்று இணைந்தும் காணப்படலாம். இங்கு சூழமைவு என்பதனால் கருதப்படுவது மோதலுக்கு ஏதுவாகும் நிலைமையாகும். ரொபட் மிக்வெல் என்பவரின் கருத்துப்படி, இந்நிலைமையானது சமூகப் பெறுமானங்கள் மற்றும் சமூக அமைப்பின் ஒவ்வாப் பொருத்தப்பாடு காரணமாக உருவாகும் மற்றொரு அம்சமாகிய மனப்பாங்கு மூலம் மோதலை உருவாக்கும் உளவியல் காரணிகளின்பால் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. மோதலின் மற்றைய அம்சமாக நடத்தையைக் குறிப்பிடலாம். மோதலுடன் தொடர்புடைய குழுக்களால் ஒருவருக்கொருவர் அழிவு ஏற்படுத்தல் தொடங்கும்போது மோதலின் நடத்தைகள் தெளிவாகத் தெரியும். மோதல் தொடர்பான 'கல்டுங்' முக்கோணத்தின்படி மோதலொன்று மேற்குறிப்பிட்ட எந்தவோர் அம்சத்திலும் ஆரம்பிக்க இடமுண்டு. எனவே மோதலானது விகிதசமனற்ற இலக்குகள், மறுதலிக்கும் மனப்பாங்குகள், அழிவுபூர்வமான நடத்தைகள் காரணமாக உருவாக இடமுண்டு.

மோதல் என்பது இயல்பிலேயே கேடான ஒன்றல்ல. மனித வரலாறானது முதன்மையாக, வகுப்பு மோதல்களின் வரலாறும், வகுப்பு மோதல்களுடனானவற்றை முன்னோக்கிச் செலுத்தும் சக்தியுமாகும் என கால்மாக்ஸ் குறிப்பிட்டுள்ளார். பொதுவாக நோக்குமிடத்து, சமூகத்தில் காணப்படும் பல்வேறு கருத்துக்கள், போட்டா போட்டி, நிலைப்பாடுகளை வெளிப்படுத்தும் ஓர் ஊடகமாக மோதல் செயற்படுகின்றது என்பது தெரிகின்றது. தனியாட்கள் அல்லது சமூகக் குழுக்கள் அவ்வாறான பொருத்தப்பாடற்ற நிலைமைகளுடன் செயற்படும் விதத்தின்படி, மோதலானது ஆக்கபூர்வமானதாகவோ அழிவுபூர்வமானதாகவோ அமைய

இடமுண்டு. எனவே மோதலின் சக்தி சாதகமான ஒன்றாக அல்லது பாதகமான ஒன்றாக அமையலாம். சிலபோது மோதல் எனும் தோற்றப்பாடானது சமூக மாற்றங்களையும் புதுமைப்பாடுகளையும் இனங்காணத் துணையாக அமையும். எனினும் மோதலானது, மனித உயிர்களை அழிக்கத்தக்க ஒரு நெருக்கடியாகவோ ஆயுதமேந்திய அழிவுபூர்வமான போராட்டமாகவோ மாறுமாயின் நிச்சயமாக அது சமூகத்தின் முன்னேற்றத்துக்குப் பாரிய தடையாக அமையும். அதன் மூலம் ஏற்படும் பௌதிக, உள ரீதியான தாக்கம் மிக உயரிய மட்டத்தைக் கொண்டிருப்பதே அதற்கான காரணமாகும்.

மேற்படி விளக்கங்களின்படி எந்தவொரு மோதலிலும் பின்வரும் முதன்மையான இயல்புகள் காணப்படும்.

- எதிர்த்தரப்பினர் அதற்கு அல்லது எதிரான இருவர் அல்லது மேற்பட்டோர் காணப்படுதல்.
- அவர்கள் பரஸ்பரம் எதிரான வழிமுறைகளில் ஈடுபடுகின்றமை.
- அவர்களது பரஸ்பரத் எதிர்த்தொழிற்பாடானது வளத்தட்டுப்பாடு அல்லது நிலைமைகளின் விகித சமமின்மை காரணமாக உருவாகியுள்ளது.
- அவர்களது நடத்தையானது எதிர்த்தரப்பினருக்கும் பாதிப்பை ஏற்படுத்துதல், சேதம் விளைவித்தல் மற்றும் அழிவு ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டது.
- அவர்களது பரஸ்பரத் தொழிற்பாட்டை வெளிப்படையாகக் காணமுடியுமாகையால் வெளித்தரப்பினருக்கு அதனை மதிப்பிடவும் முடியும்.
- மோதலின் தன்மைக்கேற்ப அது ஆக்கபூர்வமானதாகவோ, அழிவுபூர்வமானதாகவோ அமைய இடமுண்டு.
- மோதல்களில் சாதகமான இயல்புகளும் பாதகமான இயல்புகளும் காணப்படும்.
- அவர்களது நடத்தைகள் மூலம் எதிர்த்தரப்பினருக்கு சேதம் விளைவிக்க, காயமேற்படுத்த அல்லது அவர்களை முற்றாக அழித்தொழிக்க எதிர்பார்த்தல்.

### ◈ மோதலின் மூலங்கள்

1. நலிவான அரசு, அரசின் உள்வாரி பாதுகாப்புப் பிரச்சினைகள், இன அடிப்படை, புவியியல் அடிப்படை போன்ற அமைப்பு சார்ந்த காரணிகள்.

2. பொருளாதார முறைமையில் இடம்பெறும் புறக்கணிப்புகள், நவீனமயமாக்கம் போன்ற பொருளாதார, சமூகக் காரணிகள்.

3. அரசியல் நிறுவனங்களில் நிகழும் மாற்றங்கள், தேசிய கருத்துக்கள், அபிப்பிராயங்களைப் புறக்கணித்தல், இடைக் குழுக்கள், அரசியல், உயர்குடி அரசியல் போன்ற அரசியல் காரணிகள்.

4. பண்பாட்டை மாற்றியமைக்கும் பிரச்சினைகளைக் கொண்ட குழுக்களின் வரலாறுகள்.

தற்போது காணப்படும் மோதல்களுள் பெரும்பாலானவை இனம், மொழி, வரலாறு, உரிமைகள் போன்ற விடயங்களை முதன்மையாகக் கொண்டு உருவாகியுள்ளன. இவ்வாறான மோதல்கள் நாட்டின் உள்வாரியான மோதல்களாகக் கருதப்படும். அவற்றுள் பெரும்பாலானவை நீண்டு சென்று சமூக நெருக்கடிகளாக உருவெடுக்கும். எட்வட் அஸார் (Edward Azar) என்பவரின் கருத்துப்படி நீடித்துச் சென்ற மோதல்களின் பாதகமான விளைவுகள், தேசிய மட்டம் தொடக்கம் சர்வதேச மட்டம் வரையில் பரந்து சென்றுள்ளமையைக் காணமுடிகின்றது.

- அடிப்படையில் மோதல்கள் உருவாவதில் செல்வாக்குச் செலுத்தும் சில காரணிகளை இனங்கண்டு கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| ➢ காரணிகள் | - | வரலாற்று ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவை, பண்டைக்கால, தற்கால நிபந்தனை பற்றிய நிலைமைகள். |
| ➢ தேவைகள், விருப்புகள் | - | பாதுகாப்பு மற்றும் கௌரவம் தொடர்பாகத் தோன்றும் தேவைகள் பற்றிய உணர்வு. |
| ➢ பெறுமானங்கள் | - | நீண்டகால நம்பிக்கைகளும் எடுகோள்களும். |
| ➢ நிலைமைகள் | - | விசேட தேவைகளையும் ஆசைகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்கான மிகச் சிறந்த முறையாகத் தெரிவுசெய்துகொள்ளல். |
| ➢ முறைகள் | - | குறிக்கோள்களை அடைவதற்காக மக்கள் கையாளும் முறைகள். |
| ➢ தொடர்பாடல் முறிவடைதல் | - | அந்தந்த மக்கள் பிரிவினர் அல்லது தரப்பினரிடையே காணப்படும் தொடர்பாடல் முறிவடைதல். |

➢ அதிகாரத்துவம் மற்றும் வளங்களுக்கான போட்டி.




மேலே தரப்பட்டுள்ள உருவில் காட்டப்பட்டுள்ளதற்கிணங்க மோதலைத் தோற்றுவிக்கும் காரணிகள் வெவ்வேறுபட்டவையாக காணப்படும். அக்காரணிகளின் செல்வாக்கு காரணமாக, தனியாள் மோதல்கள், தனியாள்களுக்கு இடையிலான மோதல்கள், நாடுகளுக்கிடையிலான மோதல்கள், மோதல்கள் என்பவை உருவாகலாம். எனினும் அரசறிவியல் பயிலும் நாம் குழு மட்ட, அரச மற்றும் அரசாங்கங்களுக்கு இடையிலான மோதல்கள் தொடர்பாகவே கவனஞ்செலுத்த வேண்டும்.

## ◈ மோதலில் தன்மையும் இனங்காணும் விதமும் அதனை வகைப்படுத்தலும் (Nature of Conflict and Classification)

### மோதலின் தன்மை

மோதலொன்றினை அதன் எதிர்பார்ப்புகளின்படி முறையாக எடுத்துக்காட்டலாம்.

1. ஆசைகள் தொடர்பான மோதல்கள்
2. பெறுமானங்கள் தொடர்பான மோதல்கள்
3. தொடர்பு தொடர்பான மோதல்கள்

நிலம் மற்றும் வளங்கள் தொடர்பான காரணிகள் காரணமாகத் தோன்றும் மோதல்கள் மூலம் ஆசைகள் தொடர்பாகத் தோன்றும் மோதல்களின் கோலம் எடுத்துக்காட்டப்படுகின்றது. சமய கருத்துக்கள், அபிப்பிராயங்கள் அல்லது இனத்துவம் காரணமாக ஏற்படும் மோதல்களில் பெறுமானங்கள் சார்ந்த காரணி முதன்மை பெறும். சிறுபான்மை - பெரும்பான்மை, ஆளும் வகுப்பு, குடியேற்றப் பிரசைகள், குடியேற்றவாத ஆளப்படும் வகுப்பும் அதிகாரம் போன்றவற்றுக்கு இடையிலான மோதல்கள், தொடர்புகள் சார்ந்த காரணங்களால் தோன்றும் மோதல்களாகும் என வியாக்கியானப்படுத்தலாம்.

இவை தவிர மோதல்களை பிரதானமாக இரண்டு பகுதிகளாகப் பிரித்துக் காட்டலாம்.

1. சமச்சீரான மோதல்கள் (Symmetric Conflicts)
2. சமச்சீரற்ற மோதல்கள் (Asymmetric Conflits)

சமமான தரப்பினருக்கிடையே உருவாகும் மோதல்கள் சமச்சீரான மோதல்கள் எனப்படும். சிறுபான்மை, பெரும்பான்மையினர், நிலை அரசாங்கம், போராட்டக்குழு, எசமான் - அவரது ஊழியர், சேவை வழங்குபவர் - சேவை செய்பவர் போன்ற சமனற்ற தரப்பினருக்கிடையே தோன்றும் மோதல்கள் சமச்சீரற்ற மோதல்களாகும் என வியாக்கியானஞ் செய்யலாம்.

மோதலொன்று மனித உயிர்களை அழிக்கும் ஒரு நெருக்கடியான அல்லது ஆயுதமேந்திய அழிவுபூர்வமான போராட்டமாக மாறுமாயின் நிச்சயமாக அது சமூகத்தின் முன்னேற்றத்துக்கு ஏற்படும் தடையாக அமையும். அதற்கமைய மனிதருக்கிடையே உருவாகும் அழிவுபூர்வமான மோதல்களை பிரதானமாக 03 மட்டங்களில் இனங்கண்டு முன்வைக்கலாம். அவையாவன:-

1. வீட்டு மோதல்கள் (Domestic Conflicts)
2. அரசக மோதல்கள் (Intra - State Conflicts)
3. அரசுகளுக்கு இடையேயான மோதல்கள் (Inter - State Conflicts)

இவற்றுள் இரண்டாம், மூன்றாம் வகையைச் சேர்ந்த மோதல்கள் மூலம் நிகழும் உயிர்ச் சேதங்கள், சொத்துச் சேதங்கள், சூழல் சேதங்கள் மற்றும் நீண்டகால அழிவுகளை, தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் அனுபவிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. தற்கால உலகில் காணப்படும் மோதல்களுள் பெரும்பாலானவை இனத்துவம், மொழி, வரலாறு, உரிமைகள் போன்ற விடயங்கள் சார்ந்தவையாகத் தோன்றியுள்ளன. இவ்வாறான மோதல்கள் அரசக மோதல்கள் எனக் கருதப்படுகின்றன. அவற்றுள் பெரும்பாலானவை நீடித்த சமூக நெருக்கடிகளாக உருவெடுத்துள்ளன. எட்வட் அஸார் எடுத்துக்காட்டுவதற்கமைய நீடித்த

சமூக மோதல்களில் பாதகமான விளைவுகள் தேசிய மட்டம் தொடக்கம் சர்வதேச மட்டம் வரை விரிவடைந்துள்ளது. இருபதாம் நூற்றாண்டின் பின்னணிப் பகுதியில் தோன்றிய அரசக மொதல்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் கெல்வி ஹொல்ஸ்ரி, இம்மோதல்களுள் பெரும்பாலானவை அரச நிருவாகம், நாடுகளின் பொறுப்புகள், நிலைமை போன்ற விடயங்களின் காரணமாக தோற்றுகின்றன எனக் குறிப்பிடுகின்றனர். மனித உயிர்களைப் பறிக்கத்தக்க மோதல்களைத் தவிர்ப்பது தொடர்பாக கார்னிஜி ஆணைக்குழு (Carnegie Commission) எடுத்துக் காட்டுவதற்கு இணங்க இருபதாம் நூற்றாண்டில் நூறு மில்லியனுக்கும் மேற்பட்டோர் யுத்தங்கள் காரணமாக மரணித்துள்ளனர்.

## ◈ மோதல் தீர்த்தல் பற்றிய எண்ணக்கரு

மனிதருக்கிடையே உருவாகும் மோதல்கள் வன்முறை மோதல்களாக உருவெடுப்பதால் அழிவுபூர்வமான விளைவுகளே ஏற்படும். எனவே அவ்வழிவுகளை இழிவளவாக்கி, மனிதருக்கிடையே உருவாகும் மோதல்களைத் தவிர்ப்பதற்குத் தேவையான உத்திகளை ஆயும் பணிகள் சமூக விஞ்ஞானங்களின் துணையுடன் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய மோதல் தீர்வு சார்ந்த எண்ணக்கருக்கள் சிலவற்றை இனங்காண்பது முக்கியமானது.

i. மோதல் தவிர்த்தல் (Cease fire)

ii. மோதல் இணக்கப்பாடு (Mediation)

iii. மோதல் முகாமை (Management)

iv. மோதல் தீர்வு (Resolution)

v. மோதல் நிலைமாற்றம் (Transformation)

## ◈ மோதல் தவிர்த்தல்

மோதல் தீர்வுக் கற்கையினுள் 1950 களின் பின்னரே மோதல் தீர்த்தல் எனும் விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகின்றது. மோதல் தவிர்த்தலானது ஒரு புறத்தே பல்வேறு நாடுகளினுள் தோன்றிய அழிவு ரீதியான மோதல்கள் காரணமாக ஏற்பட்ட அழிவுகளுக்கான ஒரு எதிர்வினையாகும். மறுபுறத்தே, அது ஆயுதமேந்திய ஏதாவது அழிவு ரீதியான மட்டம் வரையில் மோதல் விருத்தியடைந்து செல்ல இடமளிக்காத வகையில் அவற்றை இலகுவாகக் கையாளத்தக்க ஒரு வழிமுறையாகும். இதற்கமைய மோதல் தவிர்த்தலைப் பிரதானமாக மூன்று கட்டங்களில் மேற்கொள்ளலாம். அவையாவன:-

- எதிர்ப்பு வகையான மோதல் இல்லாத நிலைமையில் எதிர்காலத்தில் அவ்வாறானதொன்று தோன்றும் எனக் கருதி, அதனைத் தவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். அதாவது அதன் எளிமையான கருத்து, வன்முறை மோதல் ஏற்படத்தக்க சாத்தியங்களைத் தவிர்த்தலாகும்.

- தற்போது தோன்றியுள்ள மோதலொன்று எதிர்காலத்தில் அழிவுபூர்வமாக வன்முறை நிலைமையாக உருவெடுக்கும் எனக் கருதி அதனைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- ஆயுதமேந்திய மோதல் மீண்டும் ஏற்படுவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுத்தல். அதாவது மோதலொன்று தீர்க்கப்பட்டதன் பின்னர் மீண்டும் அம்மோதல் தலைதூக்கத்தக்க சாத்தியங்களை இல்லாது ஒழித்து ஆவன செய்தலே இதன் கருத்தாகும்.

மோதல் தொடர்பாக உடன்பாடான வகையில் தொழிற்படும்போது அழிவுபூர்வமான மோதல்களைத் தவிர்த்தல் முதன்மை பெறும். எனினும் அது எடுத்த எடுப்பில் ஒரேயடியாகச் செய்துவிட முடியாத சிக்கலற்ற ஒரு செயன்முறையாகும்.

## ◈ மோதல் இணக்கப்பாடு

மோதல் இணக்கப்படுத்தல் என்பது, மோதல் தவிர்ப்பிலும் பார்க்க வேறுபட்ட ஒரு செயன்முறையாகும். இணக்கப்படுத்தலின்போது நிகழுவது, வன்முறை மோதலின் வன்முறைத்தன்மையை தணித்தலாகும். மோதல் தணித்தலின்போது மோதலுக்கு ஏதுவாகவுள்ள விசேடமான மற்றும் ஒட்டுமொத்த காரணங்களின்பால் கணிசமான கவனஞ் செலுத்தப்படுவதில்லை. வன்முறை மோதுகையின் உக்கிரத்தன்மையை இழிவாக்குவதே அதன் நோக்கமாயிருத்தல் அதற்கான காரணமாகும்.

மியால் உட்பட்ட குழுவினர் இதனை ஓர் ஒப்பந்தம் மூலம் செய்யலாம் என எடுத்துக்காட்டுகின்றனர்.

உ-ம்: 1998 இல் வட அயர்லாந்தில் ஏப்ரல் 10 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட பெரிய வெள்ளி ஒப்பந்தமும் 2002 பெப்ரவரி 22 ஆந் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் அமைப்பிற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையும் இதற்கான சிறந்த உதாரணங்களாகும்.

இவ்வாறாக ஓர் ஒப்பந்தின் மூலம் மோதலை இணக்கப்படுத்துவதற்குத் தேவையானதாகக் கருதத்தக்க நிலைமை, மோதலுடன் தொடர்புடைய தரப்பின் மோதலில் சிறைப்பட்டிராத நிலைமையை அடைந்த நிலைமையாகும். மோதல் இணக்கப்படுத்தல் செயன்முறையின் மூலம் மோதலின் வன்முறைத்தன்மையைத் தணிப்பதே இறுதி நோக்கமாக இருந்தபோதிலும் அதனை மோதலின் முடிவாகக் கருதுவது இயலாததாகும். எவ்வாறாயினும் மோதல் இணக்கப்பாடு தொடர்பான செயன்முறையை நீண்டகால மோதல் தீர்வின் ஆரம்பக் கட்டமாகக் கருதலாம்.

## ◈ மோதல் முகாமை

மோதல்களைக் கையாளுவதற்கான ஓர் உத்தியாக 1980 களின் பின்னர் அறிமுகம் செய்யப்பட்ட ஒரு செயன்முறையாக 'மோதல் முகாமை' யைக் குறிப்பிடலாம். முதன்மையான மையவிடயம் மோதலுடன் தொடர்புடைய தரப்பினரிடத்தே உடன்பாடான (+) நடத்தை மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படத்தக்க வன்முறைகளை வரையறைப்படுத்தலும் தவிர்த்தலுமாகும். வன்முறை மோதலை வரையறைப்படுத்துவதற்கும் மோதல் பரவுவதைப் பகுத்தாய்வதற்குமாகவே மியாலும் அவரது குழுவினரும் மோதல் முகாமை எனும் பிரயோகத்தைப் பயன்படுத்துகின்றனர். உயிரோட்டமான மோதலொன்றுடன் தொடர்புறும் பின்வரும் குறிக்கோள்களை உச்ச அளவுக்கு அடைதலே எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மோதல் முகாமையின் எதிர்ப்பார்ப்பாக அமைகிறது.

i. மோதலின் வன்முறையையும் அழிவு மட்டத்தையும் இழிவளவாக்கல்.

ii. மோதலின் உக்கிரத்தன்மையையும் மக்களை அழிக்கும் வகையிலான ஆயுதங்களைப் பயன்படுத்தும் நிலைமை வரை பரவுவதையும் தவிர்த்தல்.

iii. வேறு திசைகளில் கிடையாக மோதல் பரவுவதைத் தவிர்த்தல்.

இதற்கமைய மோதல் முகாமை என்பதை இரண்டு துறைகளின் கீழ் வரைவிலக்கணப்படுத்தலாம். அவற்றுள் ஒன்று மோதல் முகாமையாகும். மோதல் முகாமை என்பது வன்முறை மோதலை ஒரு வரையறைக்குக் கட்டுப்படுத்தி வைத்திருத்தலாகும். மற்றையது மோதலுடன் தொடர்புடைய தரப்பினரை ஓர் இடைத் தொழிற்பாட்டு மாதிரியொன்றின்பால் கொண்டுவருதலாகும். இங்கு இத்தரப்பினரின் ஆசைகள், எதிர்பார்ப்புகள், பெறுமானங்களுக்கு இடையே காணப்படும் எதிரான தன்மைகளை வெளியிடுவது மோதலினூடாக நிகழுகின்றமையால் அவற்றை உடன்பாடான (+) வகையில் கையாண்டு செயற்படுதலாகும்.

## ◈ மோதல் தீர்வு

மோதல் தீர்வு எனும் பதம் மோதல் கல்வியில் மாத்திரமன்றி மோதலுடன் தொடர்புடைய செயன்முறைச் செயற்பாட்டுப் பரப்பிலும் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது. எனவே மோதல் தீர்வு என்பதால் கருதப்படுவது யாது என்பது தொடர்பான கருத்துக்களை விளங்கிக்கொள்ள முடிகின்றது. பெரும்பாலான கல்வியியலாளர்கள், செயற்பாட்டாளர்கள், யுத்தத்துறை சிறப்பறிஞர்கள், இராஜதந்திரிகள் போன்றோர் தாம் தொடர்புற்றிருக்கும் துறையில் மோதல் தீர்வு என்பதை வரைவிலக்கணப்படுத்த முயற்சி செய்துள்ளனர். யுத்தத்துறை சிறப்பறிஞர்கள் மோதல் தீர்வு எனும் பதத்தைப் பயன்படுத்தியுள்ளனர். இது, அச்சுறுத்துவதனூடாக வெற்றிகரமான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருதல் மூலம் அல்லது இராணுவ அதிகாரத்தை வெற்றிகரமாகப் பிரயோகித்தல் மூலம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருதல் அல்லது தவிர்த்தலைக் குறிக்கின்றது. இந்த இராணுவ மோதல் தீர்வு அணுகுமுறையை, (மோதல் தீர்வுச் சேர்ந்த பெரும்பாலான கோட்பாட்டாளர்கள்) அதிலடங்கியுள்ள வன்முறைத்தன்மை மற்றும் அழிவை ஏற்படுத்தும் தன்மை காரணமாக மறுதலித்துள்ளனர். எனினும் மோதல் தீர்விற்கு அதிகாரத்தைப் பிரயோகிப்பது அவசியம் எனும் அபிப்பிராயத்துக்கு சார்பாகவும் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது.

மோதல் தீர்வு தொடர்பாக கருத்து தெரிவிக்கும் மற்றுமொரு பிரிவினர் மேலே விபரிக்கப்பட்ட சகல எண்ணக்கருக்களுடன் மேலும் சில அம்சங்களும் அடங்கியுள்ளன எனக் கூறுகின்றனர். அக்கருத்தின்படி மோதல் தீர்வு என்பது மோதல் தவிர்த்தல், மோதல் இணக்கப்படுத்தல், மோதல் தீர்த்தல், மோதல் நிலைமாற்றல் ஆகிய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய பரந்ததோர் செயன்முறையொன்றாகும்.

ஆக்கபூர்வமாகவும் அகிம்சை முறையிலும் பிரச்சினைகளைத் தீர்த்து மோதல்களுடன் தொடர்புடைய சகல தரப்பினரதும் தனித்துவம் தொடர்பான பெறுமானங்களை இனங்கண்டு அவர்களது மானுடத் தேவைகளையும் ஆசைகளையும் இனங்கண்டு, தேவையான வழிவகைகளை மேற்கொள்ளல் மோதல் தீர்வில் அடங்கியுள்ளது என்பது அவர்களது அபிப்பிராயமாகும். மோதல் இணக்கப்படுத்தல் அல்லது மோதல் முகாமை என்பனவற்றில் இருந்து வேறுபட்ட செயல்களும் மோதல் தீர்வில் அடங்கியுள்ளது என்பது இக்கருத்தின் மூலம் தெளிவாகின்றது. மோதல் தீர்வு என்பது பல முக்கியமான இயல்புகளை உள்ளடக்கியுள்ளது என்பது மேற்படி கருத்துக்களை ஒட்டுமொத்தமாக நோக்கும்போது தெளிவாகின்றது.

அவையாவன :

i. மோதலுடன் தொடர்புடைய மற்றும் அதற்கு அடிப்படையாக அமைந்துள்ள காரணிகளை வேரோடு களையச் செயற்படுதல்.

ii. மோதல் தரப்பினரிடையே புதிய தொடர்புகளை உருவாக்குவதற்காகச் செயற்படுதல்.

iii. உடன்பாடான (Positive) மனப்பாங்குகளைப் பிறப்பித்தல்.

iv. வன்முறை மீண்டும் தலைதூக்குவதற்கான சாத்தியங்களை நீக்குதல்.

மோதல் தீர்வின்போது கவனஞ் செலுத்தப்படும் முக்கியமான ஓர் அம்சம், மோதலுக்கு ஏதுவாகிய காரணிகளை ஆழமாக ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதற்காக செயற்படுதலாகும். அதற்கமைய மோதல் தரப்பினருக்கிடையே துண்டிக்கப்பட்ட தொடர்புகளை மீள நிறுவுவதற்கும் மீண்டும் மோதல் உருவாதலுக்கான சாத்தியப்பாட்டைத் தவிர்ப்பதற்கும் செயற்படுதல் வேண்டும். எனவே மோதல் தீர்வு சிக்கலான நீண்டகாலச் செயன்முறையாகும் எனக் கருதலாம்.

## ◈ மோதல் நிலைமாற்றம்

சில பகுப்பாய்வாளர்கள் இதனை மோதல் தீர்வுக்கு அப்பால் சென்ற தெளிவான ஒரு படிமுறையாகக் குறிப்பிடுகின்றனர். மற்றும் சிலர் மோதல் தீர்வினது ஒரு விருத்திநிலை என இதனை விவரித்துள்ளனர். மோதல் தீர்விலும் பார்க்க விரிவான கட்டமைப்பு சார்ந்த அம்சங்களின்பால் அதிக கவனஞ் செலுத்தும் சந்தர்ப்பம் மோதல் நிலைமாற்றம் எனக் கூறுகின்றனர்.

மோதல் தீர்வு மூலம் மோதலுடன் தொடர்புடைய தரப்பினருக்கு இடையே காணப்படும் எதிர்ப்புத் தன்மைகளைத் தணித்து சகல தரப்பினரும் திருப்தியடையக் கூடியவாறான ஒரு நிலைமையை ஏற்படுத்துவதற்காக செயற்படுவதாகும். அதன் மூலம் மோதலுடன் தொடர்புடைய தரப்பினரின் மனப்பாங்குகள், நடத்தைகள் போன்ற அம்சங்கள் மாற்றத்துக்கு உள்ளாகுவதில் குறைந்த அளவு கவனமே செலுத்தப்படும். மோதல் நிலைமாற்றத்தின் ஊடாகவே இக்குறைப்பாட்டுக்கு பரிகாரம் காணப்படும்.

மோதல் நிலைமாற்றத்தை மூன்று விதமாக வரைவிலக்கணப்படுத்தலாம்.

- ஒட்டுமொத்த மோதல் சூழமைவை (Context) மாற்றியமைத்தல்.
- மோதல் தரப்பினரின் தொடர்புகளை மாற்றியமைத்தல்.
- வலுவூட்டலுக்கூடாக (Empowerment) மோதலுடன் தொடர்புடைய ஆட்களின் மட்டங்களை மாற்றியமைத்தல்.

இதற்கமைய, மோதல் நிலைமாற்றத்தின்போது மோதலுடன் தொடர்புடைய சமூக, அரசியல் மூலங்களின்பால் விரிவாகக் கவனஞ் செலுத்த வேண்டியேற்படும். அதன் மூலம் மோதல் தொடர்பான உடன்பாடற்ற (-) வேறுபாடுகள் உடன்பாடான (+) வேறுபாடுகளாக மாற்றியமைக்கப்படல்.

'பீட்டர் வொலன்ஸ்ரீன்' என்பவரின் கருத்துப்படி, வெற்றிகரமான மோதல் நிலைமாற்றச் செயல் என்பது மோதல் தரப்பினருக்கு இடையே மோதலுக்கு ஏதுவாக உள்ள காரணங்கள் மற்றும் மோதலின் குறிக்கோள்களை மாற்றியமைத்தலாகும். அதனூடாக தரப்பினருக்கு இடையிலான தொடர்புகள் மூலம் மோதலொன்று அல்லது யுத்தமொன்று உருவாகும் எனும் அச்சம் இனியும் ஏற்படுத்தப்படுவதில்லை.

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்

- கலந்துரையாடலொன்றை நடாத்துதல்
- மாணவர்களைக் குழுக்களாக ஒழுங்கமைத்து பின்வரும் தலைப்புகளுக்கேற்ப துறைகளைப் பிரித்து வழங்குக.
  - மோதலை வரைவிலக்கணப்படுத்தல்
  - மோதல் தீர்வு
  - மோதலை நிலைமாற்றத்திற்குட்படுத்தல்
  - மோதல் இணக்கப்பாடு
  - மோதலும் சமாதானக் கல்வியும்
- தகவல்களைச் சேகரிப்பதற்காக உரிய காலப்பகுதியை வழங்குக.
- ஒவ்வொரு குழுவினாலும் திரட்டப்படும் தகவல்களை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- கலந்துரையாடலின்போது முன்வைப்பின் உண்மைத்தன்மை, தர்க்கரீதியானதா என்பவை தொடர்பிலும் முறையான வழிகாட்டலை மேற்கொள்க.
- மாணவர்களைப் பொருத்தமான வகையில் மதிப்பிடுக.

## உசாத்துணை


- Lederach J. 1995 : Preparing for Peace : Conflict Transformation Across Cultures, New York : Syracuse University Press.

- Lund, M. 1996 : Preventing Violence Conflicts, Washington, DC : United States Institute of Peace.

1. Miall, Hugh, Oliver Ramsbotham and Tom Woodhouse 1999 : Contemporary Conflict Resolution, Cambridge : Polity Press.

2. Michael & Brown 1996 : The International Dimensions of International Conflict Cambridge, MIT Press.

3. Schellenberg, James A, 1996 : Conflicts Resolution : Theory, Research & Practice, New York : State University Press.

4. Uyangoda Jayawardana & N. Selvakkumaran 2000 : "Defining Negotiation" In Conflict Resolution & Peace Studies; An Introductory Handbook, University of Colombo, Center for Policy Research and Analysis (CEPRA)

5. Vayrynen, Raimo (ED) 1991 : "Conflict Resolution & Conflict Transformation "New Direction in Conflict Transformation" New Direction in conflict Theory, London : Saga Publishers.

## அலகு 11 : சர்வதேச அரசியல்

**தேர்ச்சி 11.0** :- சர்வதேச அரசியலின் தொடர்பான விளக்கத்தை இயல்பு வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- சர்வதேச அரசியலின் இயல்பு பற்றி விரிவாக ஆராய்வார்.

### கற்றற் பேறுகள்

- சர்வதேச அரசியலும் அதனுடன் இணைந்த முக்கிய பாத்திரங்களும் அவர்களின் வகிபாகங்களும் பற்றி தேடி அறிவார்.
- சர்வதேச அரசியலில் அரசுகள் தமது தேசிய அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்குப் பயன்படுத்தும் உத்திகள் பற்றி ஆராய்வார்.
- அரசுகள் தேசிய தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு பயன்படுத்தும் உத்திகளாக வெளிநாட்டுக் கொள்கைகள், தூதுவர் சேவைகள், பொருளாதாரப் பலம், உளவுச் சேவை, பிரச்சாரம், போர் நடவடிக்கை என்பன பற்றி நுணுகி ஆராய்வார்.
- சர்வதேச அரசுகளுடன் தொடர்பு கொள்வதினூடாக சர்வதேச சமூகத்தில் எழுகின்ற முரண்பாடுகள், பிரச்சினைகள் என்பவற்றுக்குத் தீர்வு காணுதலும் முகாமைத்துவம் செய்தலும் தொடர்பான அரசுகளின் உத்திகள் பற்றி ஆராய்வார்.
- அதிகாரச் சமநிலை, கூட்டுப் பாதுகாப்பு, சர்வதேசச் சட்டம், ஆயுதப் பரிகரணம், போர் ஆயுதங்களின் கட்டுப்பாடு, உலக அரசாங்கம் என்பவற்றை அவ் உத்திகளாக இனங்காண்பார்.

### அறிமுகம்

சர்வதேச அரசியலைக் கற்பதன் மூலம், சர்வதேச அரசியல் என்றால் என்ன, அதன் செயற்பாடுகளில் தொடர்புடைய முக்கிய பாத்திரங்கள் யாவர்? அவர்களின் நடத்தை, சர்வதேச சமூகத்தில் எவ்வாறு உள்ளது?

பாத்திரங்களின் நோக்கங்கள் யாவை? அந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அவர்கள் எவ்வாறு செயற்படுகிறார்கள்? அவ்வாறு செயற்படும்போது ஏற்படும் மோதல்களைத் தவிர்த்து உலக சமாதானம், பாதுகாப்பு என்பவற்றைப் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்லும் முறை யாது?

இதற்காகப் பயன்படுத்தக்கூடிய உத்திகள் யாவை என்பவை பற்றி ஆராய்ந்தறிதலே எதிர்பார்க்கப்படுகின்றது.

சர்வதேச சமூகத்தில் பங்கேற்கும் முக்கிய பாத்திரங்களாக அரசுகள், சர்வதேச அமைப்புகள், பல் தேசிய கம்பனிகள் என்பனவும் சர்வதேச சமூகச் செயற்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் விதமாக செல்வாக்கைச் செலுத்தும் முக்கிய நபர்கள் பகுதியினர் என நான்கு பகுதிகளை இனங்காண முடியும். இந்த அலகில் முக்கியமாக சர்வதேச சமூகத்தில் முக்கிய பாத்திரங்களாகக் கருதப்படும் சுதந்திர தேசிய அரசுகளிடையேயான தொடர்புகள் பற்றிக் கற்பதில் கவனம் செலுத்தப்படுகின்றது. சர்வதேச சமூகத்தில் தற்போது 200 இற்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலான அரசுகள் உள்ளன. இவை நிலப்பரப்பு, குடித்தொகை, வளங்கள், பொருளாதார வலு, இராணுவ பலம் ஆகிய விடயங்களில் ஒன்றுக்கொன்று வேறுபட்டனவாக உள்ளன.

எனினும் சர்வதேச அரசியலில் அனைத்து அரசுகளும் சமமான சட்ட அலகுகளாகக் கருதப்படும். இத்தொடர்புகளை அமைதிப்போக்கு தொடர்புகள், போர் ரீதியான

தொடர்புகள் என இரு பிரிவுகளாக வகுக்கலாம். இக்காரணங்களினால் சர்வதேச அரசியல் போரும் சமாதானமும் பற்றிய கற்றல் விடயம் என இனங்காணப்படுகிறது. வேறொரு விதத்தில் கூறுவதானால் அரசுகளுக்கிடையில் காணப்படும் அரசியலைக் கற்பதன் மூலம் சர்வதேச அரசியல் பாடம் உருவாக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சமூகத்தில் காணக்கூடிய சிறப்பு அம்சம் அவற்றில் காணப்படும் அதிகாரமின்மைத் தன்மையாகும். இதற்கு அரசுகளின் புறநடத்தைகளைக் கட்டுப்படுத்துவதற்கு சர்வதேச சமூகத்தினுள் ஓர் அரசாங்கமோ ஒழுக்கநெறிக் கோட்பாடுகளோ இல்லாமையே காரணமாகும். இதன் பெறுபேறாக அரசுகளின் நிலைத்திருக்கும் தன்மையும், அரசுகளின் வெளிவாரியான விருப்புகளை நிறைவேற்றுதலும் அரசுக்கு உரிய தனிப்பட்ட அதிகாரத்திலும் அதன் அளவிலுமே தங்கியுள்ளது. இதற்கேற்ப சர்வதேச அரசியலில் எல்லா அரசுகளும் முடியுமானவரை தமது அதிகாரத்தை விருத்திசெய்ய செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. இந்த அதிகாரப் போட்டி இறுதியில் அரசுகளுக்கிடையில் மோதல்கள் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்துவதுடன் அரசுகள் போரில் ஈடுபடுவதிலும் முக்கிய செல்வாக்கு செலுத்துவதைக் காணலாம். சர்வதேச சமூகம் அதிகாரமற்றதாக இருப்பதாலும் அதில் அரசுகள் சுதந்திரமாகச் செயற்பட முடியுமாதலாலும் விமர்சகர்கள் சிலர் சர்வதேச அரசியலை அரசாங்கம் இல்லாத அரசியல் (Politics Without Government) என்று இனங்காண்கின்றனர்.

அரசுகள் அதிகாரப் பிணக்குகளில் ஈடுபடுதல், தமது தேசிய விருப்புகள் அல்லது வெளிவாரி நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகும். அந்நோக்கங்கள் பின்வருமாறு அமையும்.

1. தேசிய பாதுகாப்பு
2. தேசிய பொருளாதாரத்தை உயர்நிலைப்படுத்தல்.
3. தேசிய நலன்களை மேனிலைப்படுத்தல்.
4. தேசிய புகழைப் பாதுகாத்து நிலைத்திருக்கச் செய்தல்.
5. தேசிய கொள்கைகளைப் பாதுகாத்து நிலைத்திருக்கச் செய்தல்.

இந்த நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு அரசுகள் பயன்படுத்தும் உத்திகளாவன:

1. வெளிநாட்டு கொள்கைக்கான இராஜ தந்திரங்கள்.
2. பொருளாதார அதிகாரம்.
3. வெளிப்படைத்தன்மையும் தலையிடுதலும்.
4. போர்.

## வெளிநாட்டுக் கொள்கை

ஒரு நாடு வெளிவாரியாக நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கும் நோக்கங்கள் யாவை? அவற்றின் முக்கியத்துவத்துக்கேற்ப அவை ஒழுங்கமைக்கப்பட்டிருப்பது எவ்வாறு? என்பனவே வெளிநாட்டுக் கொள்கை மூலம் வெளிப்படுகின்றன. வேறொரு முறையில் கூறுவதானால் சர்வதேச தொடர்புகளின் ஊடாக ஒரு நாடு நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கும் அரசியல், பொருளாதார, சமூகம் பற்றிய நோக்கங்கள் யாவை? என்பவற்றை வெளிநாட்டுக் கொள்கை எடுத்துக்காட்டும். வெளிநாட்டுக் கொள்கை இராஜதந்திர அதிகாரிகள் அல்லது தூதுவர்கள் மூலமாக செயலுரு பெறுகிறது. இங்கு பயன்படுத்தப்படும் முக்கிய உத்திப் கலந்துரையாடலாகும்.

## பொருளாதார அதிகாரம்

அரசுகள் ஏனைய அரசுகளில் செல்வாக்கு செலுத்தித் தமக்குத் தேவையான விதத்தில் யாதாயினும் ஒரு அரசினை வழிநடத்துவதற்கு அல்லது கீழ்ப்படியச் செய்வதற்கு பயன்படுத்தும் உத்தியாக பொருளாதார சக்தி காணப்படுகிறது.

வர்த்தக ஒப்பந்தம், மேலதிகமானவற்றை அழித்தல், பகை அரசுகளின் சொத்துக்களை தடைசெய்தல், பொருட்கள் வாங்குவதை நிறுத்துதல் ஆகியனவற்றை இதற்குப் பயன்படுத்தலாம்.

## ஊடுருவுதலும் தலையிடுதலும்

அரசுகள், பகைமை நாட்டின் உள் விடயங்களில் இரகசிய முறைகளினூடாக பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தி அந்த அரசை தமக்குத் தேவையான விதத்தில் வழிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஊடுருவல் ஆகும். பகைமை நாட்டின் அரசியல் செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்துவதன் மூலம் அரசின் நடத்தையை மாற்றியமைத்தல், தலையிடுதல் எனப்படும். இதன் பொருட்டு அரசுகள் வெளிப்படையற்ற முறைகளைப் பயன்படுத்துகின்றன. இரகசிய உளவுச் சேவை, வேறு மறைமுகமான உத்திகள்.

## போர்

மேலே காட்டப்பட்டுள்ள மூன்று வழிகளாலும் அரசுகள் தமது நோக்கங்களை நிறைவேற்ற முடியாதபோது இறுதியாகப் பயன்படுத்தும் கருவியே போர் ஆகும். ஆயுதங்கள் மூலம் பகைவரைத் தாக்கி ஒன்றில் முற்றிலும் அழிவேற்படுத்தல் அன்றேல் எதிரியை வலிமையிழக்கச் செய்து தமக்குத் தேவையான விதத்தில் கட்டுப்படுத்துதல்.

அரசுகள் தமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்குப் பயன்படுத்தும் உத்திகளில் அதிக செலவு கொண்டதும் அதிக அழிவை ஏற்படுத்துவதுமான உத்தியே போர் ஆகும்.

யாதாயினும் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் போரைப் பயன்படுத்துவதற்கு முன்னர் அரசுகள் முதலில் பின்பற்ற வேண்டிய முன் நடவடிக்கைகள் மூன்று உள்ளன.

1. எழுந்துள்ள பிரச்சினையை முதலில் இராஜதந்திர வழிமுறை மூலம் தீர்ப்பதற்கு முயற்சி மேற்கொள்ளல்.
2. இராஜதந்திர முறை தோல்வியுற்றால் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படுமென அச்சுறுத்தி, முன் அபாய அறிவிப்பு விடுத்தல்.
3. அச்சுறுத்தல் மூலம் பகைவர் கீழ்ப்படியாவிடில் எதிரிக்கு எதிராக வன்முறையை மேற்கொள்ளுதல்.

இம் முன்நடவடிக்கைகள் தோல்வியடைந்தால் மட்டுமே இறுதியாக ஆயுதங்களால் தாக்குதலை நடாத்தி போர் நிலைமையை அரசுகள் ஏற்படுத்தல் வேண்டும்.

யாதாயினும் ஒரு அரசு வேறொரு அரசுடன் நேரடியாகப் போர் தொடுக்க கருதினால் முதலாவதாகப் பின்வரும் நிபந்தனைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

1. தமது நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆபத்தான நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது என்பதை நாட்டு மக்களும் உலக மக்களும் விளங்கிக்கொள்ளச் செய்தல்.
2. போரில் ஈடுபட்டால் வெற்றி பெறும் வரை போர் செய்தலில் மிகுந்த மனவுறுதி கொண்டிருத்தல்.
3. அரசியல் நோக்கங்கள், இராணுவ நோக்கங்கள் என்பவற்றைத் தெளிவாகக் காட்டுதல்.
4. குறித்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு மட்டும் போதுமான அளவு இராணுவ பலத்தை ஈடுபடுத்தல்.
5. நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பூரணமாகப் பயன்படுத்துதல்.

மேலே காட்டப்பட்ட விடயங்கள் மூலம், சர்வதேச அரசியலில் அரசுகளின் நிலைத்திருத்தலும் செயற்பாடுகளும் தொடர்பாக அரசுகளுக்கு உரிய அதிகாரங்களின் அளவிற்கேற்ப பெருமளவு தீர்மானிக்கப்படுகிறது என்பது தெளிவாகிறது.

எனவே சர்வதேச அரசியலைக் கற்கும்போது தேசிய அதிகாரம் பற்றியும் கட்டாயம் கற்றல் வேண்டும்.

## தேசிய அதிகாரம்

ஹான்ஸ் ஜே மோர்கன்தோ குறிப்பிடுவதற்கு ஏற்ப ஒரு அரசுக்கு வேறொரு அரசின் எண்ணம், செயற்பாடு என்பவற்றைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் இருக்குமெனில், தேசிய அதிகாரம் எனக் கருதப்படுகிறது. வேறொரு முறையில் கூறுவதானால் யாதாயினும் அரசின் விருப்பை, வேறொரு அரசின் மீது படியச் செய்து, தமக்குத் தேவையான விதத்தில் கட்டுப்படுத்துவதற்கும் அதற்குக் கீழ்படியாதவிடத்து செல்வாக்கைப் பிரயோகித்தல் மூலம் கீழ்ப்படியச்செய்யவும் உள்ள ஆற்றல் தேசிய அதிகாரம் எனக் கருதப்படுகிறது. அரசின் தேசிய அதிகாரம், செயற்பாட்டு உருவாக்கம் பின்வரும் உத்திகள் மூலம் இடம்பெறும்.

1. செல்வாக்கைப் பிரயோகித்தல்.
2. கொடைகளை வழங்குதல்.
3. தண்டனை விதித்தல்.
4. பலப் பிரயோகம்/ அதிகாரப் பிரயோகம்

## செல்வாக்கைப் பிரயோகித்தல்

அதிகாரச் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு சர்வதேச அரசியலில் பெருமளவு உபயோகிக்கப்படுவது இம்முறையாகும். உதாரணமாக A என்னும் அரசுக்கு B என்ற அரசின் மீது செல்வாக்குச் செலுத்துவதற்குத் தேவையேற்படும்போது அது வாதப் பிரதிவாதங்கள் மூலம் அல்லது தர்க்க ரீதியான உத்திகள் மூலம் அல்லது குறித்த விடயத்தை முற்றாக மீண்டும் வியாக்கியானம் செய்வதன் மூலம் B அரசின் எண்ணம், செயற்பாடு என்பவற்றைக் கட்டுப்படுத்துவதை எடுத்துக்காட்ட முடியும். இராஜதந்திர முறை மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசுகள் இம் முறையைப் பயன்படுத்தும்.

## கொடை வழங்குதல்

பல்வேறு கொடைகளை வழங்குதல் மூலம் ஒரு நாடு வேறொரு நாட்டின் நடத்தையை தமக்குத் தேவையான விதத்தில் கட்டுப்படுத்த முயற்சி எடுப்பதே இதனால் கருதப்படுகிறது. உதாரணமாக பொருளாதார உதவி வழங்குதல், அரசியல் ரீதியில் செய்யும் உதவிகள், படை உதவிகள், பொருள் உதவிகள் என்பன இதற்காகப் பயன்படுத்தப்படும்.

## தண்டனை விதித்தல்

இதனால் கருதப்படுவது முதலீடுகளை வழங்குவதை நிறுத்துவதாகும். இதற்கேற்ப கொடைகளை வழங்குதலும் தண்டனை விதித்தலும் ஒன்றோடொன்று இணைந்து காணப்படும். இது தவிர எதிரிக்கு எதிராக பல்வேறு பிரசாரங்கள், கோபமூட்டும் செயற்பாடுகள், எதிரிக்கு எதிரான வேறு அரசுகளுக்கு வெளிப்படையான உதவி வழங்குதல் ஆகிய உத்திகள் பயன்படுத்தப்படும்.

## அதிகாரத்தைப் பயன்படுத்துதல்

உயிர்ப்புடன் அதிகாரச் செயற்பாட்டில் ஈடுபடுவதையே இது கருதுகின்றது. அதாவது போர் நடவடிக்கை மூலம் அதிகாரச் செயற்பாட்டில் ஈடுபடுதல். ஒரு அரசு தேசிய பலத்தை உருவாக்கிக் கொள்வதில் பல காரணிகள் இணைந்துள்ளன.

1. இயற்கையான காரணிகள் - நாட்டின் அமைவிடம், இயற்கை வளம், சனத்தொகை.
2. விஞ்ஞானம், தொழினுட்பம், கைத்தொழில் காரணிகள், தொழினுட்பத் திறன், விவசாயம்சார் திறன், படைத்திறன்.
3. அரசியல் காரணிகள் - அரசாங்கத்தின் தன்மை, பணிக்குழு முறை (உத்தியோகபூர்வ அதிகார முறை) உருவாக்கப்பட்டுள்ள விதம், அதன் வினைத்திறன்.

   அரசியல் தலைமைத்துவத்தின் இயல்பு, அரச சேவையின் பண்புத்தரம்
4. சமூகம் மற்றும் கருத்துக்கள் சார்ந்த காரணிகள் - நாடு ஏற்றுக்கொண்ட தேசிய கருத்துக்கள், தேசிய உணர்வுகள், தேசிய தனித்துவம், சமூகக் கட்டமைப்பு, தேசிய ஒருமைப்பாடு.
5. வெளிவாரி மற்றும் வேறு காரணிகள் - நாட்டின் பெருமையும் நற்பெயரும், வெளிநாட்டு உதவியைப் பெறும் ஆற்றல், இரகசிய உளவுச் சேவையின் வினைத்திறன்.

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களினால் சர்வதேச சமூகத்தில் நிலவும் அதிகாரமின்மை காரணமாக அரசுகள் தாம் விரும்பியவாறு நடப்பதற்கு சர்வதேச சமூகத்தில் இடமளிக்கப்பட்டுள்ளதென்பது எடுத்துக்காட்டப்படுகின்றது. இதன் விளைவாக அரசுகளுக்கிடையே சமாதானத்துக்குப் பதிலாக யுத்த நிலைமைகள் அடிக்கடி தோன்றுகின்றன. இந்நிலைமை கட்டுப்படுத்தப்படாவிடின் சர்வதேச சமாதானம் என்பது ஒருபோதும் அடைய முடியாத கனவாகவே இருக்கும்.

அரசுகளுக்கடையே அதிகாரப் போட்டியைக் கட்டுப்படுத்தி சர்வதேச சமூகத்தை உருவாக்கி முன்னெடுத்துச் செல்லுதல் எவ்வாறு? - சர்வதேச அரசியலைக் கற்கும்போது கவனிக்க வேண்டிய இன்னொரு முக்கியமான விடயமாக இதனை இனங்காணலாம்.

அரசுகளுக்கிடையில் இடம்பெறும் அதிகாரப் போராட்டத்தைக் கட்டுப்படுத்தி சர்வதேச சமாதானத்தை உருவாக்கி முன்னெடுத்துச் செல்வதற்காக சர்வதேச அரசியலில் பயன்படுத்தக்கூடிய உத்திகள் சில உள்ளன. அவையாவன:

1. அதிகாரச் சமநிலை
2. கூட்டுப் பாதுகாப்பு
3. சர்வதேசச் சட்டம்
4. ஆயுதக் கட்டுப்பாடும் ஆயுதப் பரிகரணமும்
5. உலக அரசாங்கம்

## அதிகாரச் சமநிலை

இந்த எண்ணக்கருவின் அடிப்படையைப் பின்வரும் முறையில் எடுத்துக்காட்டலாம்.

- அதிகாரச் சமமின்மை நிலைமைகள் நிலவும்போதே அரசுகள் போரில் ஈடுபடுகின்றன.

- அரசுகள் சமமான அதிகாரமுடையனவாக இருப்பின் போரில் ஈடுபட முன்வரமாட்டாது. ஏனெனில் சமமான அதிகாரமுடைய இரு நாடுகள் ஒன்றோடொன்று போர்செய்யும்போது எந்நாடும் வெற்றியை உறுதியாகப் பெறமுடியாதிருப்பதனாலாகும்.

- இதனால் அரசுகளில் அதிகாரங்களை சம அளவானதாக அமைப்பின் அரசுகளுக்கு இடையில் போர் ஏற்படுவதைத் தவிர்த்து சர்வதேச சமாதானத்தை பாதுகாத்து முன்னெடுத்துச் செல்ல முடியும்.

- அதிகாரச் சமநிலை உருவாக்கப்படுதலை, அரசுகள் தனித்தனியாகச் செய்யமுடியும். அன்றேல் அரசுகள் கூட்டான மட்டத்தில் செய்யமுடியும்.

இந்தத் தர்க்கம் உண்மையைப் போலத் தோன்றினாலும் தற்காலத்தில் உலகில் உருவாகியுள்ள அரசுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையாலும் அவற்றிற்கிடையே அளவுக்கதிகமான பரந்தளவு வேறுபாடு காணப்படுவதினாலும் அதிகாரச் சமநிலை எண்ணக்கரு செயன்முறை ரீதியில் நடைமுறைப்படுத்தக்கூடியதொன்றல்ல.

## கூட்டுப் பாதுகாப்பு

சமாதானத்தை விரும்பும் அரசுகள் அனைத்தும் ஒன்றாக இணைந்து, தமது கூட்டுப் அதிகாரத்தை சமாதானத்துக்கு எதிராகச் செயற்படும் அரசுகளுக்கு அல்லது அரச குழுக்களுக்கு எதிராகப் பயன்படுத்தி, ஆக்கிரமிப்புத் தன்மையுள்ள அரசு அல்லது அரசகக் குழுக்களை அடக்கி, சர்வதேச சமாதானத்தை உறுதிப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல் என்னும் அடிப்படை மீது இந்த எண்ணக்கரு உருவாக்கப்பட்டுள்ளது.

- 1918 இல் சர்வதேசச் சங்கம், 1945 இல் ஐக்கிய நாடுகள் சபை என்பன தாபிக்கப்பட்டமை, இந்நோக்கத்தைக் கருத்திற்கொண்டேயாகும்.

- எனினும் இரண்டு அமைப்புகளும் எதிர்பார்த்த விதத்தில் கூட்டுப் பாதுகாப்பு எண்ணக்கரு செயற்பாட்டை முன்னெடுக்க இயலாதிருந்தன. இதற்கு இந்த அமைப்புக்களின் உறுப்பு அரசுகளிடையே கூட்டுப் பாதுகாப்புச் செயற்பாடு உருவாகத் தேவையான பொது விருப்பினை ஏற்படுத்த முடியாமையே காரணமாகும்.

- எவ்வாறாயினும் அதிகாரச் சமநிலையை விட கூட்டுப் பாதுகாப்பு நடைமுறையில் செயற்படுத்தக்கூடிய உபாயமாகும்.

## சர்வதேசச் சட்டம்

- சர்வதேச அரசுகளின் தொடர்புகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டத் தொகுதியை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படுமாயின் அரசுகளுக்கு இடையே ஏற்படும் மோதல்கள், பிரச்சினைகள் என்பவற்றை முகாமைத்துவம் செய்து சர்வதேச சமாதானத்தை நிலைநிறுத்த முடியும் என்பது இந்த எண்ணக்கருவினால் வலியுறுத்தப்படுகின்றது.

- எனினும் இது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் இரண்டு உள.

    1. சர்வதேசச் சட்டம் யாருக்காக நடைமுறைப்படுத்தப்படுகிறது?
    2. சர்வதேசச் சட்டம் யாரால் நடைமுறைப்படுத்தப்படுகிறது?

- சட்டவாக்கம், நிறைவேற்று அதிகாரம் என்பன கொண்ட சட்டங்களை ஆக்கி, அரசுகளின் இறைமை அதிகாரத்துக்கு மேலாகச் செயற்படுவதற்கான ஆற்றல் உடைய உலக அரசாங்கம் சர்வதேச சமூகத்தில் இல்லாதிருப்பதனால் மேலே குறிப்பிடப்பட்ட பிரச்சினைகள் இரண்டும் எழுந்துள்ளன.

- சர்வதேசச் சட்டம் எனக் குறிப்பிடப்படும் சட்டத்தொகுதி, சர்வதேச அரசுகளின் தொடர்புகளின்போது காணக்கூடியதாயிருந்தபோதும் அந்தச் சட்டங்களைப் பின்பற்றுவதோ, பின்பற்றாது விடுதலோ அரசுகளின் சுயேச்சையான விருப்பின் மீதே தங்கியுள்ளது.

- இதனால் சர்வதேசச் சட்டம் அரசுகளின் வெளிவாரி நடத்தையைக் கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் வினைத்திறன்மிக்க உபகரணமொன்றல்ல.

## ஆயுதங்களைக் கட்டுப்படுத்தலும் ஆயுதப் பரிகரணமும்

- இந்த எண்ணக்கரு உருவாக்கப்பட்டிருப்பது அரசுகள் போர் செய்வது ஆயுதங்களைக் கொண்டிருப்பதனாலாகும். எனவே அரசுகளின் போர் ஆயுதங்களை இல்லாதொழிப்பின் அரசுகள் போர் செய்ய மாட்டா எனக் கருதுவதன் அடிப்படையிலாகும்.

- அரசுகளிடம் உள்ள போர் ஆயுதங்களை இல்லாதொழிக்க வேண்டும் என்பது இந்த எண்ணக்கரு மூலம் வலியுறுத்தப்படுகின்றது.

- கோட்பாட்டு ரீதியில் இந்தக் கருத்து மிகச் சரியாக இருப்பினும் செயன்முறையில் இதனை நடைமுறைப்படுத்துவதில் பல பிரச்சினைகள் உள்ளன.

- முக்கிய பிரச்சினை என்னவெனில் போர் ஆயுதங்கள் இல்லாது அரசுகளின் தேசிய பாதுகாப்பை நடைமுறைப்படுத்துவது எவ்வாறு என்பதாகும்.

- எவ்வாறெனினும் 1945 இன் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையும் தனிப்பட்ட மட்டத்திலும் அரசுகளின் போர் ஆயுதங்கள் கட்டுப்பாடு, ஆயுதப் பரிகரணம் தொடர்பான நடவடிக்கைகள் பலவற்றை எடுத்துள்ளன.

- எனினும் இன்னமும் முற்றாக ஆயுதப் பரிகரணத்துக்கு அரசுகள் முன்வராதிருப்பதுடன் போர் ஆயுத உற்பத்தியையும் அரசுகள் நிறுத்திவிடவில்லை.

## உலக அரசாங்கம்

- அரசுகளின் வெளிவாரி நடத்தைகளைக் கட்டுப்படுத்த சட்டவாக்க, நிறைவேற்று, நீதித்துறை அதிகாரங்கள் கொண்ட உலக அரசாங்கம் ஒன்று அமைக்க வேண்டுமென்பதில் இந்த எண்ணக்கரு கவனம் செலுத்துகின்றது.

  இது வெறுமனே ஒரு எண்ணக்கரு மட்டுமே. நடைமுறையில் இவ்வாறான அரசாங்கம் அமைப்பது ஒரு கனவு என விமர்சகர்கள் கருதுகின்றனர்.

  காரணம் உலக மட்டத்தில் தன்னாதிக்க அதிகாரமுடைய உலக அரசாங்கத்தை உருவாக்குவதற்கு அரசுகள் தமது தனிப்பட்ட இறைமையதிகாரத்தை விட்டுவிட விரும்பாமையாகும்.

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்

- சுய ஆக்கமொன்றைத் தயாரித்தல்
- செயற்றிட்டத்திற்குத் தேவையான தகவல்களைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் திரட்டுக.
  - சர்வதேச அரசியலை அறிந்து கொள்ளல்
  - சர்வதேச உறவுகள் நடைபெறும் முறை
    1. வெளிவுறவுக் கொள்கைகளும் தூதுவர் சேவையும்
    2. பொருளாதார பலம்
    3. யுத்தம்
  - சர்வதேச உறவுகளைக் கட்டுப்படுத்தும் முறை
    1. கூட்டுப்பாதுகாப்பை ஏற்படுத்துதல்
    2. அதிகாரச் சமநிலை
    3. சர்வதேசச் சட்டம்
    4. ஆயுதப் பரிகரணம்
    5. உலக அரசாங்கம்
- மேற்படி தலைப்புகளுக்குத் தேவையான உசாத்துணைகளை மாணவர்களுக்கு வழங்கவும்
- அனைத்து மாணவர்களும் மேற்படி தலைப்புகளுக்குரிய தகவல்களைத் தனித்தனியாகத் திரட்டி சுய ஆக்கமொன்றைச் செய்வதற்கு வழிப்படுத்தவும். (சுய ஆக்கத்தை சுவர்ப்பத்திரிகைக்கு வழங்கும் முகமாக கட்டுரை வடிவில் தயாரிக்கவும்)
- மாணவர்கள் தனித்தனியாகச் செய்த சுய ஆக்கங்களை மதிப்பீட்டிற்குட்படுத்தி அவற்றைச் சுவர்ப்பத்திரிகையில் காட்சிப்படுத்துக.

## உசாத்துணை


| | | |
|---|---|---|
| Rama S. Melkote | - | International Relationship Palmer & Perkins. |
| Palmer & Perkins | - | International Relationship |
| John. T. Ronke | - | International Politics on World Stage. |

**அலகு 12 :- தெரிவு செய்யப்பட்ட அரசியலமைப்பு மாதிரிகள்**

**தேர்ச்சி 12** :- பொருத்தமான ஆட்சிமுறையொன்றை ஏற்படுத்துவதற்காக அரசியலமைப்பு மாதிரிகள் பற்றி ஆராய்ந்தறிவார்.

**தேர்ச்சி மட்டம் 12.1** :- தெரிவுசெய்யப்பட்ட அரசியலமைப்பு மாதிரிகளின் அடிப்படையான இயல்புகளை ஆராய்வார்.

**12.2** :- மேற்படி அரசியலமைப்பு மாதிரிகள் பற்றி ஒப்பீட்டு ரீதியில் நுணுகி ஆராய்வார்.

## கற்றற் பேறுகள்

- அரசியலமைப்பு மாதிரிகளின் அடிப்படை இயல்புகளை இனங்காண்பார்.
- அரசியலமைப்பு மாதிரிகளின் சட்டத்துறை நிறைவேற்றுத்துறை, நீதித்துறை என்பன பற்றி ஒப்பீட்டுப் பகுப்பாய்வு செய்வார்.
- அந்நாடுகளின் கட்சிமுறை பற்றிப் பரிசீலனை செய்வார்.
- ஜனாதிபதி, அமைச்சரவை முறைமை, அரசியலமைப்பு மாதிரிகளின் அடிப்படைகளை விளங்கிக் கொள்வார்.
- ஒரு நாட்டில் அரசியல் உறுதிப்பாடு ஏற்படுத்தப்பட்டு முன்னெடுத்துச் செல்வதற்குப் பொருத்தமான அரசியலமைப்பு எதுவென நுணுகி ஆராய்வார்.
- பல்லின மக்களைக் கொண்ட சமூகத்தில் தேசிய ஒற்றுமையை உருவாக்கி, ''ஒரு தேசியத்துக்காக ஒரு நாடு'' என்ற தத்துவத்தின் மீது அரசு உருவாக்கப்படுவதற்கு மிகப் பொருத்தமான அரசியலமைப்பு மாதிரி எதுவென்பதை நுணுகி ஆராய்வார்.

## அறிமுகம்

உலகில் நடைமுறையில் உள்ள பல்வேறு அரசியலமைப்பு மாதிரிகளைக் கற்றலே இந்த அலகின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. பெரிய பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்க அரசுகள், பிரான்ஸ், இந்தியா, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளின் அரசியலமைப்பின் சிறப்பம்சங்கள், சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை என்பவற்றின் கட்டமைப்பு, அரசியல் கட்சி முறைகள் என்பன பற்றி இங்கு கவனம் செலுத்தப்படும்.

பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்க அரசுகள் ஆகிய நாடுகளில் சட்டத்துறையும் நிறைவேற்றுத்துறையும் சனநாயக அரசியலமைப்பில் செயற்படுவதை பிரதிபலிப்பதுடன், பிரான்ஸிய அரசியலமைப்பானது பிரித்தானியாவினதும் ஐக்கிய அமெரிக்காவினதும் அரசியலமைப்புக் கோலங்களின் இணைப்பாகக் காணப்படுகிறது.

இந்தியா கலாசாரப்பன்மைத் தன்மை கொண்ட சமூக அமைப்பில் பிரதேச, மொழி வேற்றுமைகள், அவற்றின் சிறப்பான வரலாற்றுப் பாரம்பரியம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு அந்நாட்டுக்கே உரித்தான மரபுரிமைசார் சமஷ்டி ஆட்சியை அறிமுகப்படுத்தியுள்ளது.

உலகிலே நேரடி சனநாயகத்தைக் கொண்ட ஒரே நாடான சுவிட்சர்லாந்தில் கூட்டு நிறைவேற்றுத்துறை மூலம் நிறைவேற்று அதிகாரத்தைச் செயற்படுத்தும் ஜனாதிபதி, அமைச்சரவை என்பவற்றைக் கொண்ட கலப்பு அரசியலமைப்பு முறை செயற்படுத்தப்படுகின்றது. சுவிஸ் முறையின் உறுதிப்பாடும் தூய்மையும் சனநாயகத்தன்மையுள்ள நிறுவனங்களின் சிறந்த ஒன்றிணைப்பு, ஒத்துழைப்பு, மாற்றங்களுக்கு மதிப்பளித்தலிலும் தங்கியுள்ளன.

இதற்கேற்ப பல்லின மக்கள் கொண்ட சமூகத்தில் ஒற்றுமை, அரசியல் உறுதிப்பாடு என்பன உருவாக்கப்பட்டு ‘‘ஒரு தேசியத்துக்காக, ஒரு நாடு’’ என்ற தத்துவத்தின் மீது அரசை உருவாக்குவதில் மிகப் பொருத்தமான அரசியலமைப்பு மாதிரி எதுவென்பதை நுணுகி ஆராய்தலே இந்த அலகின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

## உள்ளடக்கத்தின் அடிப்படையிலான ஐந்து அரசியலமைப்புக்களின் அரசியல் நிறுவனங்களின் அமைவுச் சேர்க்கை, அவற்றின் அடிப்படை இயல்புகள், கட்டமைப்பு, அதிகாரம், பணிகள் என்பன பற்றியதோர் ஒப்பீடு

| நியதிகள் | பிரித்தானியா | அமெரிக்கா | பிரான்ஸ் | இந்தியா | சுவிட்சர்லாந்து |
|---|---|---|---|---|---|
| **அடிப்படை இயல்புகள்** | ஒற்றையாட்சி, எழுதப்படாத நெகிழ்வுடைய முடிக் குரிய பாராளுமன்ற சனநாயக அரசியலமைப்பு (மந்திரி சபை ஆட்சி) | சமஷ்டி, நெகிழாத, எழுதப்பட்ட அதிகாரப் பகிர்வு அடிப்படையிலான, நிறைவேற்று அதிகாரமுள்ள சனாதிபதி முறைமை. (ஜனாதிபதி ஆட்சி) | ஒற்றையாட்சி, நெகிழாத, எழுதப்பட்ட, பல்கட்சி முறை கொண்ட சனாதிபதி மற்றும் அமைச்சரவை முறையுடன்கூடிய கலப்பு முறையிலான அரசியலமைப்பு. (கலப்பு ஆட்சிமுறை) | பாதிச் சமஷ்டி, நெகிழாத, எழுதப்பட்ட, பெயரளவிலான நிறைவேற்று அதிகாரத்துடனான கபினெற் பாராளுமன்ற ஆட்சி முறைமை கொண்டது. (மந்திரி சபை ஆட்சி) | சமஷ்டி, நெகிழாத, எழுதப்பட்ட, குடியரசு, நிறைவேற்று அதிகாரம் கூட்டு நிருவாகக் குழுவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள கூட்டு நிறை வேற்றுகூட்டு நிறை வேற்ற ஆட்சி முறை அரசியலமைப்பைக் கொண்டது. |
| **அரசியலமைப்பு மாதிரிகளில் சட்டவாக்கத்துறை** | | | | | |
| **கட்டமைப்பு** | **பாராளுமன்றம்** ஈரங்க சபைகளுடையது.<br>- பொதுமக்கள் சபை<br>- பிரபுக்கள் சபை | **காங்கிரஸ்** ஈரங்க சபை கொண்டது.<br>- பிரதிநிதிகள் சபை<br>- செனற் சபை | **பாராளுமன்றம்** ஈரங்க சபைகளுடையது.<br>- தேசிய சபை<br>- செனற் சபை | **பாராளுமன்றம்** ஈரங்க சபைகளுடையது.<br>- லோக் சபா<br>- இராஜ்ய சபா | **சமஷ்டி சபை** ஈரங்க சபைகள் கொண்டது. (Federal Assembly)<br>- தேசிய சபை (National Council)<br>- மாநில சபை (Council of State) |
| **அமைவுச் சேர்க்கையும் பதவிக்காலமும்** | **பொதுமக்கள் சபை**<br>• 635 பேர்<br>• தனித்தேர்தல் தொகுதி முறையில் தெரிவு. பதவிக்காலம்<br>• 5 வருடங்கள் | **பிரதிநிதிகள் சபை**<br>• 438 பேர்<br>• எளிய பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறையில் தெரிவுசெய்யப்படுதல்.<br>• பதவிக்காலம் 2 வருடங்கள் | **தேசிய சபை**<br>• 577 பேர்<br>• தனித்தேர்தல் தொகுதி அடிப்படையிலும் இரட்டை வாக்குமுறை அடிப்படையிலும் தெரிவுசெய்யப்படுதல்.<br>• பதவிக்காலம் 5 வருடங்கள் | **லோக் சபா**<br>• 545 பேர்<br>• பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறை அடிப்படையான சர்வசன வாக்குரிமையினால் தெரிவாகுதல்.<br>• பதவிக்காலம் 5 வருடங்கள் | **தேசிய சபை**<br>• 200 பேர்<br>• விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் தெரிவுசெய்யப்படுவர்.<br>• பதவிக்காலம் 4 வருடங்கள் |

| நியதிகள் | பிரித்தானியா | அமெரிக்கா | பிரான்ஸ் | இந்தியா | சுவிட்சர்லாந்து |
|---|---|---|---|---|---|
| **அமைவுச் சேர்க்கையும் பதவிக்காலமும்** | **பிரபுக்கள் சபை**<br>• 2008 மே 5 வரை 732 பேர்<br>• மரபுவழியாகவும் நியமனம் மூலமும் | **செனற் சபை**<br>உறுப்பினர் எண்ணிக்கை 100<br>• செனற் உறுப்பினர்களின் $\frac{1}{3}$ பங்கினர் 2 வருடங்களுக்கு ஒருமுறை புதிதாகத் தெரிவு-செய்யப்படுவர்.<br>• பதவிக்காலம் 6 ஆண்டுகள் | **செனற் சபை**<br>உறுப்பினர் எண்ணிக்கை 321<br>• செனற் உறுப்பினர்களின் $\frac{1}{3}$ பங்கினர் 3 வருடங்களுக்கு ஒருமுறை புதிதாகத் தெரிவு-செய்யப்படுவர்.<br>• தேர்தல் கல்லூரி மூலம் தெரிவு-செய்யப்படுவர்.<br>• பதவிக்காலம் 9 ஆண்டுகள் | **ராஜ்ய சபா**<br>• உறுப்பினர் எண்ணிக்கை 250<br>• ஜனாதிபதியால் தெரிவுசெய்யப்படும் 12 உறுப்பினர்களும் மாநில அரசு சட்டசபை பிரதிநிதிகள் 238 பேரும் உள்ள டக்கப்பட்டுள்ளளர்.<br>• உறுப்பினர்களுள் $\frac{1}{3}$ பங்கினர் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை தெரிவு.<br>• பதவிக்காலம் 6 ஆண்டுகள் | **மாநில சபை**<br>• உறுப்பினர் எண்ணிக்கை 46<br>• முழுமையான கன்டன்களில் இருந்து இவ்விரண்டுபேரும் அரை கன்டன்களில் இருந்து தலா ஒரு பிரதிநிதி வீதமும் தெரிவு-செய்யப்படுவர்.<br>• பதவிக்காலம் 3 ஆண்டுகள் |
| **தெரிவுசெய்யப்பட்ட அரசியலமைப்பு மாதிரிகளின் சட்டத்துறை** | | | | | |
| **அதிகாரங்களும் பணிகளும்** | **பொதுமக்கள் சபை**<br>• சிம்மாசன உரையை அங்கீகரித்தல்.<br>• சட்டங்கள் உருவாக்குதல்.<br>• நிதி / நிர்வாகம்,<br>• நிறைவேற்றுத் துறையைக் கட்டுப்படுத்தல். | **பிரதிநிதிகள் சபை**<br>• சட்டங்களை உருவாக்குதல்.<br>• நிதிசார் விடயங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல்.<br>• சனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணையைத் (Impeachment) தொடுத்தல். | **பிரதிநிதிகள் சபை**<br>• சட்டங்களை உருவாக்குதல். அடிப்படை சட்டங்கள், சாதாரண சட்டங்கள், உத்தரவுகளும் கட்டளைகளும் | **லோக் சபை**<br>• சட்டங்களை உருவாக்குதல்.<br>• நிதிச் செயற்பாடுகளுக்கு அங்கீகாரம் வழங்குதல்.<br>• நிறைவேற்றுத்துறை கட்டுப்படுத்தலும் நெறிப்படுத்தலும். | **சமஷ்டி சபை**<br>• இரு சபைகளுக்கும் விசேட முன்னுரிமை வழங்கப்படவில்லை.<br>• நிதிச் சட்டவரைபை இரு சபைகளிலும் ஆரம்பிக்க முடியும்.<br>• இரு சபைகளுக்கும் முழுமையான சம உரிமை உண்டு. |

| நியதி | பிரித்தானியா | அமெரிக்கா | பிரான்ஸ் | இந்தியா | சுவிட்சர்லாந்து |
|---|---|---|---|---|---|
| | • பொதுமக்களின் பிரச்சினைகளை முன்வைத்தல்.<br>• எதிர்காலத் தலைவர்களைப் பயிற்றுவித்தல்.<br>• நிறைவேற்றுக் குழுக்களை நியமித்தல்.<br>• நீதிபதிகளை நீக்குதல்.<br><br>**பிரபுக்கள் சபை**<br><br>• சாதாரண சட்டங்களை ஆரம்பிக்கும் அதிகாரம் | **செனற் சபை**<br>**i. சட்டத்துறை அதிகாரங்கள்**<br>• சாதாரண சட்டங்களை ஆரம்பித்தல்.<br>• நிதிச்சட்டங்களில் திருத்தம் செய்தல்<br>• சட்டமொன்று நிறைவேற்றப்-படுவதற்கு செனற் சபையின் அங்கீகாரம் அவசியமாகும்.<br>• குற்றப்பிரேரணையை விசாரணை செய்தல்.<br><br>**ii. நியமிக்கும் அதிகாரம்**<br>• ஜனாதிபதியால் நிறைவேற்றப்பட வேண்டிய நிறைவேற்றுத்துறை நியமனங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல். | • நிதி நிர்வாகத்தில் முழுமையான அதிகாரமில்லை.<br>• ஜனாதிபதிக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டுவருதல்.<br>• அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவருதல்.<br>• 12 நாட்களுக்கு மேல் போர்ச் சட்டத்தை நீடிக்க அங்கீகாரம் வழங்குதல்.<br>• ஒப்பந்தம், பொருத்தனை என்பனவற்றுக்கு அங்கீகாரம் வழங்குதல்.<br>• ஆணைக்-குழுக்களை நியமித்தல். | • நிறைவேற்றுத் துறைக்குத் தேவையான பெரும்பான்மையை வழங்குதல்.<br><br>**ராஜ்ய சபை**<br>(மேற்சபை)<br><br>• நிதிச்சட்டங்களை ஆரம்பிக்கவோ திருத்தம் செய்யவோ முடியாது.<br>• அரச நிதிக்-குழுவிலும் அரச முயற்சியாண்மை குழுவிலும் உறுப்புரிமை இச்சபைக்கு உண்டு.<br>• சாதாரண சட்டங்களைத் தொடங்க முடியும். | • இரண்டு சபைகளுக்கும் பொறுப்புக்கள் உள்ளது.<br><br>**சமஷ்டி சபைக்குரிய அதிகாரங்களும் பணிகளும்**<br><br>**சட்டத்துறை**<br><br>• சமஷ்டி சட்டங்கள், கட்டளைச் சட்டங்களை அங்கீகரித்தல்.<br>• வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தை அங்கீகரித்தல். |

| நியதி | பிரித்தானியா | அமெரிக்கா | பிரான்ஸ் | இந்தியா | சுவிட்சர்லாந்து |
|---|---|---|---|---|---|
| | • பிரதிநிதிகள் சபையால் அங்கீகரிக்கப்பட்டு அனுப்பப்படும் சட்டங்களை அங்கீகரித்தல்.<br>• சட்டங்களை காலந்தாழ்த்துதல். நிதி மசோதாக்களை ஒரு மாதத்துக்கு காலந்தாழ்த்த முடியும். சாதாரண மசோதாக்களை ஒரு வருடத்துக்கு காலந்தாழ்த்த முடியும்.<br>• பிரித்தானிய நீதித்துறையில் மீயுயர் நீதிமன்றமாகச் செயற்படுதல். | உதாரணம்:-<br>• அரச செயலாளர்களையும் உயர் நீதிமன்றம், சமஷ்டி நீதிமன்றம் என்பவற்றின் நீதிபதிகளையும் உயர்மட்ட அரச அதிகாரிகளையும் நியமிக்கும்போது.<br>iii. **ஒப்பந்தங்களை அங்கீகரிக்கும் அதிகாரம்**<br>• வெளிநாட்டுடனான ஒப்பந்தங்கள் செல்லுபடியாக வேண்டுமாயின் செனற் சபையின் $\frac{2}{3}$ பெரும்பான்மை அங்கீகாரம் தேவையாகும்.<br>iv. **குற்றப் பிரேரணை மீதான தீர்ப்பு வழங்கும் அதிகாரம்** | **செனற் சபை**<br>• மூன்று விடயங்கள் தவிர ஏனைய விடயங்களில் பொதுமக்கள் சபைக்கு சமமான அதிகாரங்களைக் கொண்டுள்ளது.<br>• நிதி மசோதாக்களை செனற் சபையில் ஆரம்பிக்க முடியாது.<br>• அரசாங்கத்துக்கு எதிராக கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை முதலில் செனற்சபையில் சமர்ப்பிக்க முடியாது.<br>• அமைச்சரவையானது பொதுமக்கள் சபைக்கு பொறுப்பு கூறுதல் வேண்டும். | **லோக் சபைக்கு உரித்தற்ற ராஜ்ய சபைக்கு மட்டும் உரித்தான அதிகாரங்கள்**<br>• அரசியல் யாப்பின் 312வது உறுப்புரைக்கு அமைய அகில இந்திய ரீதியிலோ அல்லது மாநிலத் திற்கோ இரண்டிற் கும் உரிய அகில இந்திய சேவையைத் தாபிக்கும் அதிகாரத்தைப் பாராளுமன்றத்துக்கு வழங்குதல்.<br>• அரசியல் யாப்பின் 249வது உறுப்புரைக்கு அமைய ராஜ்ய சபையினால் $\frac{2}{3}$ பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்படும் தீர்மானம் ஒன்றின் மூலம் மாநில அரசுகளின் அதிகாரப்பட்டியலில் உள்ள எந்தவொரு விடயம் தொடர் பிலும் சட்டத்தைப் பிறப்பிக்கும் அதிகாரத்தைப் பாராளுமன்றத்துக்கு ஒரு வருட காலத்துக்கு வழங்குதல். | நாட்டின் வெளிவாரிப் பாதுகாப்பு, இறைமை என்பவற்றை உறுதிப்படுத்தும் சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்தல்.<br>• கன்ரன்களின் (Conton) (கோட்டம்) ஆள்புல ஒருமைப்பாட்டையும் கன்ரன்களின் அரசியல் அமைப்புகளின் நீடித்த தன்மையையும் சுவிட்சர்லாந்து நாட்டின் உள்ளகப் பாதுகாப்பையும் சமாதானத்தையும் உறுதிப்படுத்தும் வழிமுறைகளை மேற்கொள்ளல். |

| நியதி | பிரித்தானியா | அமெரிக்கா | பிரான்ஸ் | இந்தியா | சுவிட்சர்லாந்து |
|---|---|---|---|---|---|
| | | **v. விசாரணை செய்வதற்கான அதிகாரம்** | | **லோக் சபையும் ராஜ்ய சபையையும் கூட்டாக அனுபவிக்கும் அதிகாரங்கள்**<br>• ஜனாதிபதியை நியமித்தல்.<br>• ஜனாதிபதிக்கு எதிராக குற்றப் பிரேரணை சமர்ப்பித்தல்.<br>• உப ஜனாதிபதி, உயர் நீதிமன்ற நீதிபதிகள், இந்தியாவின் கணக்காய்வாளர் நாயகம் ஆகியோரைப் பதவியிலிருந்து நீக்குதல்.<br>• அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்த அங்கீகாரம் வழங்குதல். | **நிறைவேற்றுத்துறை**<br>சமஷ்டி உறுப்பினர்கள், சமஷ்டி நீதிச் சபையின் நீதிபதிகள், சான்சலர் இராணுவத் தளபதி ஆகியோரைத் தெரிவுசெய்தல்.<br>• ஏனைய அதிகாரிகளைத் தெரிவுசெய்து நியமித்தல் அல்லது நிரந்தரமாக்கும் உரிமை.<br>• சிவில் சேவை நடவடிக்கைகளை கண்காணித்தல்.<br>• சமஷ்டி இராணுவத்தை கட்டுப்படுத்தல்.<br>• போர் பிரகடனம் செய்தல் மற்றும் சமாதான ஒப்பந்தங்களில் ஒப்பமிடல்.<br>• சமஷ்டிச் செயற்பாடுகளைக் கண்காணித்தல். |

| நியதி | பிரித்தானியா | அமெரிக்கா | பிரான்ஸ் | இந்தியா | சுவிட்சர்லாந்து |
|---|---|---|---|---|---|
| | | | | | **நீதித்துறை**<br>சமஷ்டி அதிகாரிகளுக்கு இடையிலான பணி வரையறை பற்றிய முரண்பாடுகளுக்குத் தீர்வுகாணுதல்.<br>• சமஷ்டி நீதிச் சபையின் நீதிபதிகளை நியமித்தல்.<br>• மன்னிப்பு, பொதுமன்னிப்பு வழங்கும் போது இறைமை அதிகாரத்தைச் செயற்படுத்தல். |
| **அரசியல் யாப்பு திருத்தங்கள்** | • பாராளுமன்றத்தின் சாதாரண பெரும்பான்மை யினால் | • மத்திய அரசாங்க சபை இரண்டிலும் $\frac{2}{3}$ பெரும்பான்மை அங்கீகாரமும் குடியரசுகளின் மாநாட்டில் $\frac{3}{4}$ பங்கின் அங்கீகாரம் | • உறுப்பினர் சபை இரண்டினதும் அங்கீகாரமும், மக்கள் கருத்துக் கணிப்பின் அங்கீகாரமும் பெறுதல் வேண்டும். | **திருத்தங்கள் செய்யக்கூடிய முறைகள் மூன்று.**<br>1. மத்திய அரசாங்கத்தின் எளிய பெரும்பாண்மை அங்கீகாரம் மூலம் செய்யப்படவேண்டும். | • மக்கள் கருத்துக் கணிப்பு மூலம்.<br>• அரசியல் யாப்பிற்கேற்ப மக்கள் தொடக்கத்தின் மூலம். |

| நியதி | பிரித்தானியா | அமெரிக்கா | பிரான்ஸ் | இந்தியா | சுவிட்சர்லாந்து |
|---|---|---|---|---|---|
| | | | • இரு சபைகளும் ஒன்றிணைந்த கூட்டத்தில் $\frac{3}{5}$ பங்கு அங்கீகாரம் | 2. மத்திய அரசாங்கத்தின் சட்டத்துறையின், இரு சபைகளிலும் தனித்தனியாக விசேட பெரும்பான்மை அங்கீகாரத்துடனும் மாநில அரசுகளின் அரைப்பங்கினது அங்கீகாரத்துடனும்.<br><br>3. மத்திய சட்டத்துறையின் இரண்டு சபைகளினதும் தனித்தனியான விசேட பெரும்பான்மையுடன் திருத்தம் செய்யப்பட வேண்டும். | |

| நியதி | பிரித்தானியா | அமெரிக்கா | பிரான்ஸ் | இந்தியா | சுவிட்சர்லாந்து |
|---|---|---|---|---|---|
| **நிறைவேற்றுத்துறையை நியமித்தலும் பதவிக்காலம்** | • **இரண்டு பிரிவுகள்**<br>1. **பெயரளவு நிறைவேற்றுத்துறை**<br>• அரசி / அரசன்<br>• பரம்பரையானது<br>2. **உண்மை நிறைவேற்றுத்துறை**<br>• பிரதம மந்திரி உட்பட்ட அமைச்சரவை.<br>• பொதுத் தேர்தலின் பின்னர் பெரும்பான்மை ஆசனங்களை வென்ற கட்சித் தலைவர் மன்னரினால் / அரசியால் பிரதம மந்திரியாக நியமிக்கப்படுவார். | **நிறைவேற்று சனாதிபதி**<br>• தனியான தேர்தல் ஒன்றினால் அதாவது தேர்தல் கல்லூரி ஒன்றினால் நியமிக்கப்படுதல்.<br>• பதவிக்காலம் 4 ஆண்டுகள்<br>• தேர்தல் செயன்முறை பல படிமுறைகளில் இடம்பெறும்.<br>1. வேட்பு மனுவை தாக்கல் செய்தல்.<br>2. கட்சியின் வேட்பு உரிமை பெறுதல்.<br>3. தேர்தல் கல்லூரிக்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தல்.<br>4. தேர்தல் கல்லூரியின் உறுப்பினர்கள் ஜனாதிபதியைத் தெரிவுசெய்து நியமிப்பதற்கு வாக்குகளைப் பயன்படுத்துவர். | **இரு சபைகளையும் கொண்டது.**<br>1. ஜனாதிபதி<br>2. பிரதம மந்திரி, அமைச்சரவை<br>**ஜனாதிபதி**<br>• இரட்டை வாக்கு முறையால் நேரடியான மக்கள் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டு நியமிக்கப்படுதல்.<br>• முதலாவது தேர்தலில் எவரும் பெரும்பான்மையை பெறாதபோது இரு வாரங்களுக்குள் இரண்டாவது தேர்தல் நடத்தப்படும்.<br>• அதிகூடிய வாக்குகளைப் பெற்ற இருவர் மட்டுமே இரண்டாம் கட்ட தேர்தலில் போட்டியிடலாம்.<br>• பதவிக்காலம் 5 ஆண்டுகள். | **இரு பகுதிகள் கொண்டது.**<br>• **பெயரளவு நிறைவேற்றுத்துறை**<br>• ஜனாதிபதி உப ஜனாதிபதி<br>• தேர்தல் கல்லூரி மூலம் தெரிவு-செய்யப்படுவார்.<br>• பதவிக்காலம் 5 ஆண்டுகள்<br>**உண்மை நிறைவேற்றுத்துறை**<br>• பிரதம மந்திரி உள்ளிட்ட அமைச்சரவை<br>• ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்.<br>• தேர்தலின் பின்னர் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களைக் கொண்ட கட்சி உறுப்பினர்களில் இருந்து அக்கட்சியின் தலைவர் பிரதம மந்திரியாக நியமிக்கப்படுதல். | **கூட்டு** (Collective Executive) **நிறைவேற்றுத்துறை**<br>• 7 உறுப்பினர்களை கொண்டது.<br>• சமஷ்டி சபையால் நியமிக்கப்படுதல்.<br>• சமஷ்டி சபை என அழைக்கப்படும்.<br>• தலைவர் ஒருவர் இருப்பதுடன் அவர் ஏனைய சமமான அங்கத்தவர்களில் முதன்மையானவரும் ஆவார்.<br>• தலைவர் ஏனைய சகஅங்கத்தவர்களை விட மேன்மை நிலையைக் கொண்டிருப்பது இல்லை. |

| நியதி | பிரித்தானியா | அமெரிக்கா | பிரான்ஸ் | இந்தியா | சுவிட்சர்லாந்து |
| --- | --- | --- | --- | --- | --- |
| | • பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில் அமைச்சரவை நியமிக்கப்படுதல்.<br>• பதவிக்காலம் 5 ஆண்டுகள் அல்லது சட்டவாக்கத்-துறையின் பெரும்பான்மை ஆதரவு இருக்கும்வரை. | 5. வாக்குகள் கணக்கிடப்படுதலும் ஜனாதிபதி சத்தியப்பிரமாணம் செய்து பணிகளைப் பொறுப்பேற்றலும்.<br>**உப ஜனாதிபதி**<br>• ஜனாதிபதித் தேர்தலிலேயே உபஜனாதிபதியும் நியமிக்கப்படுவார்.<br>• ஜனாதிபதிக்கு உதவுவதற்கு அமைச்சரவை ஒன்று நியமிக்கப்படுதல்.<br>• அமைச்சரவை உறுப்பினர்கள் அரச சேவை அதிகாரிகளில் இருந்து நியமிக்கப்படுவர். | • **பிரதமர்**<br>• சனாதிபதியினால் நியமிக்கப்படுவார்.<br>• **அமைச்சர்கள்**<br>பிரதம மந்திரியின் தீர்மானத்தின்படி ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார். | • பிரதம மந்திரியின் ஆலோசனைப்படி அமைச்சரவை நியமிக்கப்படும்.<br>• பதவிக்காலம் 5 ஆண்டுகள். | • நான்கு வருட பதவிக்காலத்துக்கு.<br>• தமக்கு ஒப்படைக்கப்பட்ட பணிகளை மனசாட்சிக்கு முரணின்றி நிறைவேற்றினால் பதவியில் இருந்து நீக்கப்பட மாட்டர்கள்.<br>• பெரும்பாலும் சுவிஸ் சமஷ்டி உறுப்பினர்களின் பதவிக்காலம் 10 வருடங்களுக்கு மேற்பட்டது. |

| நியதி | பிரித்தானியா | அமெரிக்கா | பிரான்ஸ் | இந்தியா | சுவிட்சர்லாந்து |
|---|---|---|---|---|---|
| **அதிகாரங்களும் பணிகளும்** | **பெயரளவு நிறைவேற்றுத்துறை (மன்னர் / அரசி)**<br>• அரசுத் தலைவர் ஆயுத படைத் தளபதி<br>• சட்டவாக்கப் பணிகள்.<br>• நிறைவேற்றுத்-துறை பணிகள்<br>• நீதித்துறைப் பணிகள்<br>• மரபு வழிப் பணிகள்<br><br>**உண்மை நிறைவேற்றுத்துறை**<br>(பிரதம மந்திரி, அமைச்சரவை)<br><br>**பிரதம மந்திரி**<br>• அமைச்சரவையை அமைத்தல். அமைச்சுப் பதவிகளைப் பகிர்ந்தளித்தல்.<br>• அமைச்சரவையை மீளமைத்தல். | **ஜனாதிபதி**<br><br>ஜனாதிபதிக்கு உரிய அதிகாரமும் பணிகளும் 3 மூலாதாரங்களில் இருந்து தோற்றம் பெறுகிறது.<br>1. அரசியல் அமைப்பினால் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்கள்<br>• ஜனாதிபதி தனியாக செயற்படுத்தும் அதிகாரங்கள்<br>• செனற் சபையுடன் கூட்டாகச் செயற்படுத்தக்கூடிய அதிகாரம்<br>• காங்கிரஸுடன் கூட்டாகச் செயற்படுத்தக்கூடிய அதிகாரங்கள்.<br>2. ஒதுக்கப்பட்ட நிரலின் கீழ் உரித்தாகும் அதிகாரங்கள்<br>3. நீதிமன்ற தீர்ப்புகள் மூலம் உரித்தான அதிகாரங்கள் | **ஜனாதிபதி**<br><br>அரசினதும் அரசாங்கத்தினதும் நிறைவேற்றுத்துறையினதும் தலைவராக இருப்பதுடன் ஆயுதப்படைகளின் பிரதான கட்டளையிடும் அதிகாரியாகவும் உள்ளார்.<br><br>**1. நாட்டுத் தலைவராக**<br>• பிரான்ஸிய குடியரசை பிரதிநிதித்துவம் செய்தல்.<br>• தேசிய விழாக்களில் பங்குபற்றல்.<br>• அரச செய்திகள், அறிவிப்புக்களை வெளியிடுதல்.<br>• கௌரவங்களை வழங்குதல்.<br>• அரச இலச்சினையைக் கையாளுதல். | **ஜனாதிபதி**<br><br>**சட்டத்துறை சார்ந்த அதிகாரம்**<br>• பாராளுமன்றத்தை கூட்டுதல். அமர்வுகளைப் பிற்போடல், கலைத்தல்.<br>• ராஜ்ய சபாவுக்கு 12 உறுப்பினர்களை நியமித்தல்.<br>• ஆங்கிலோ இந்தியர்களுக்காக 6 பேரை நியமித்தல்.<br>• பாராளு-மன்றத்துக்கு செய்திகள் அனுப்புதல்.<br>• சட்ட வரைபு பற்றிய கருத்துக்களை வழங்குதல். | **சமஷ்டி சபை**<br>• சட்டத்துறை நிறை வேற்றுத்துறை, நீதித்துறை, நிதித்துறை என்பன.<br><br>**சட்டவாக்க நடவடிக்கைகள்**<br>• அனைத்து சட்டங்களுக்கும் தொடக்கமாக இருத்தல்.<br>• தனிப்பட்ட உறுப்பினர்கள் முன்வைக்கும் சட்டவரைபைப் பற்றிய தமது கருத்துக்களை வெளியிடல். |

| நியதி | பிரித்தானியா | அமெரிக்கா | பிரான்ஸ் | இந்தியா | சுவிட்சர்லாந்து |
|---|---|---|---|---|---|
| **அதிகாரமும் பணிகளும்** | • அமைச்சரவைக்குத் தலைமை தாங்குதல்.<br>• பொதுமக்கள் சபையில் தலைவராக இருத்தல்.<br>• பிரதிநிதிகளின் சபையைக் கலைத்தல்.<br>• அரசரின் ஆலோசகராகவும் தொடர்பாளராகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.<br>• நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான திட்டங்களைத் தயாரித்தலும் அனுமதி பெற்றுக்கொள்ளலும்<br>• தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துதல். | **உப ஜனாதிபதி**<br>• **செனற் சபையின் தலைவர் ஆவார்.**<br>• தீர்மானிக்கும் வாக்கினை அளிக்கும் அதிகாரம்<br>• பதவிக்காலம் முடிவடைவதற்கு முன் ஜனாதிபதி பதவி வெறுமையானால் எஞ்சிய பதவிக் காலத்துக்கு ஜனாதிபதி பதவிக்கு நியமனம் பெறுதல்.<br>• நடைமுறையில் இப்பதவிக்கு முக்கியத்துவம் எதுவும் இல்லை.<br>**கபினற் (அமைச்சரவை)**<br>• நேரடியாக ஜனாதிபதியின் கீழுள்ள நிறுவனமாகும். ஜனாதிபதிக்கு உதவி வழங்கும் நிறுவனமாகும். | • பாராளுமன்ற அமர்வுகள் நடைபெறாத சந்தர்ப்பங்களின் கட்டளைகள் மூலம் சட்டங்களை விதிக்கும் அதிகாரம்.<br>• அமைச்சரவை தயாரிக்கும் கட்டளைகளுக்கும் உத்தரவுகளுக்கும் இறுதி அங்கீகாரம் வழங்குதல்.<br>• அமைச்சரவையில் திருத்தங்கள் மேற்கொள்ளல்.<br>1. நிறைவேற்றுத் தலைவர்<br>2. ஆயுதப்படைகளின் கட்டளையிடும் அதிகாரி.<br>**மேற்குறிப்பிட்ட அதிகாரங்கள் தவிர்ந்த அரசியலமைப்பு யாப்பினால் உரித்தாக்கப்படும் அதிகாரங்கள்.** | • புதிய மாநில அரசுகள் ஏற்படுத்தல். ஏற்கெனவே உள்ள மாநில எல்லைகளை மாற்றியமைத்-தலுக்காக முன்வைக்கப்படும் சட்டவரைவுக்கு அங்கீகாரம் வழங்குதல்.<br>• பாராளுமன்ற அமர்வுகள் நடைபெறாத சந்தர்ப்பங்களில் கட்டளைகள் மூலம் சட்டங்களைப் பிறப்பிக்கும் அதிகாரம்<br>**நிறைவேற்றுத்துறை அதிகாரம்**<br>• அரச சேவை ஆணைக்குழுவை நியமித்தல்.<br>• மாநில அரசுகளின் ஆளுநரை நியமித்தல். | **நிதி நடவடிக்கைகள்**<br>• வருடாந்த வரவுசெலவு திட்டத்தைத் தயாரித்தல்.<br>• புகையிரத சேவை போன்ற தேசிய முயற்சிகளை முகாமை செய்தல்.<br>**நிறைவேற்று நடவடிக்கைகள்**<br>• சமஷ்டி அரசியலமைப்பினால் அனுமதிக்கப்பட்ட சட்டங்கள், கட்டளைச்சட்டங்களை நடைமுறைப்படுத்தல்.<br>• வெளிநாட்டு அலுவல்களை மேற்கொள்ளல்.<br>• நாட்டின் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுதல். |

| நியதி | பிரித்தானியா | அமெரிக்கா | பிரான்ஸ் | இந்தியா | சுவிட்சர்லாந்து |
|---|---|---|---|---|---|
| **அதிகாரமும் பணிகளும்** | **கபினற்**<br><br>**1. தனிப்பட்ட பணிகள்**<br>• அமைச்சர் என்ற ரீதியில் ஒப்படைக்கப்பட்ட தமது திணைக்களத்துக்கு உரிய பணிகள்<br><br>**2. கூட்டுப் பணிகள்**<br>• கொள்கைகளை உருவாக்குதல்.<br>• அரசை வழி நடாத்துதலும் தலைமைத்துவத்தை வழங்குதலும்<br>• இறைமை அதிகாரமுடைய தேசிய நிறைவேற்றுத் தலைவராக செயற்படுதலும் திணைக்களச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தலும்<br>• நிதித்துறைத் தீர்மானங்களை மேற்கொள்ளல். | • ஜனாதிபதி விரும்பும் வரை அதிகாரத்தில் இருக்க முடியும்.<br><br>• அமைச்சரவை ஜனாதிபதிக்கு மட்டுமே பொறுப்பு கூறவேண்டியதாகும். | 1. தேசிய சபையை கலைக்கும் அதிகாரம்<br>2. பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்படும் சட்டங்கள் பற்றிய அதிகாரம்<br><br>3. பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கும் செய்திகள் அனுப்புவதற்குமான அதிகாரம்<br><br>4. பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் சட்டங்களைப் பிரகடனப்படுத்தும் அதிகாரம்<br><br>5. நீதித்துறை அதிகாரங்கள்<br><br>6. ஏனைய சிறப்பு அதிகாரங்கள்<br><br>i. அவசரகால அதிகாரங்கள் | • பிரதான கட்டளையிடும் அதிகாரியாகச் செயற்படுதல். இச்செயற்பாட்டில் பிரதம மந்திரி உள்ளிட்ட கபினற்றின் அங்கீகாரத்துக்குக் கீழ்ப்படிதல்.<br><br>**நீதித்துறை அதிகாரங்கள்**<br><br>• உயர் நீதிமன்றம் உள்ளிட்ட மேனிலை நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளை நியமித்தல்.<br>• குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்குதல்.<br><br>குறிப்பிட்ட நிர்வாகக் குற்றச்சாட்டுகளைப் பரிசீலித்தல்.<br><br>**அவசரகால நிலைமைகளில் அதிகாரங்கள் 3 வகையானவை** | |

| நியதி | பிரித்தானியா | அமெரிக்கா | பிரான்ஸ் | இந்தியா | சுவிட்சர்லாந்து |
|---|---|---|---|---|---|
| | | | ii. மக்கள் கருத்துக் கணிப்பீட்டை நடத்தும் அதிகாரம்<br>iii. பாராளுமன்றத்தில் விதிக்கப்படும் சட்டதிட்டங்கள் அரசியலமைப்புக்கு ஏற்றனவா என்பதைப் பரிசீலித்தல்.<br>iv. வெளிநாட்டு அலுவல்கள் தொடர்பான அதிகாரம் | 1. அரச அவசரகால நிலைமை<br>2. பிராந்திய அரசுகளில் அரசியலமைப்புக்கு ஏற்ற ஆட்சி சீர்குலையும் போது ஏற்படும் அவசரகால நிலைமை<br>3. நிதி அவசரகால நிலைமை<br><br>**உப ஜனாதிபதி**<br>• உத்தியோக-பூர்வமாக ராஜ்ய சபையில் தலைமை வகிப்பார்.<br>• பதவிக்காலம் முடிவடைய முன் ஜனாதிபதி பதவி வெறுமையாகும்போது எஞ்சிய பதவிக்-காலத்துக்கு ஜனாதிபதி பதவிக்கு நியமனம் பெறுதல். | |

| நியதி | பிரித்தானியா | அமெரிக்கா | பிரான்ஸ் | இந்தியா | சுவிட்சர்லாந்து |
|---|---|---|---|---|---|
| | | | | **பிரதம மந்திரி**<br>• அமைச்சரவையை நியமித்தல்.<br>• அமைச்சரவையின் அச்சாணியாக அமைதல்.<br>• சனாதிபதிக்கும் அமைச்சரவைக்கும் இடையே தொடர்பினை ஏற்படுத்தல்.<br>• சனாதிபதிக்கும் அமைச்சரவைக்கும் இடையில் இணைப்பாளராக இருத்தல்.<br>• அரசின் செயற்பாடுகளை இணைத்தல்.<br>• லோக் சபாவுக்கும் மக்களுக்கும் தலைவராக இருத்தல்.<br><br>**அமைச்சரவை**<br>• நாட்டின் அபிவிருத்திக்கான கொள்கைகளை வகுத்தல். | |

# நீதித்துறை

| நியதி | பிரித்தானியா | அமெரிக்கா | பிரான்ஸ் | இந்தியா | சுவிட்சர்லாந்து |
|---|---|---|---|---|---|
| **நீதித்துறைக் கட்டமைப்பு** | 2 பகுதிகளைக் கொண்டது<br><br>1. சிவில் நீதிமன்றம்<br>2. குற்றவியல் நீதிமன்றம்<br><br>**சிவில் நீதிமன்ற நிறுவனம்**<br><br>பிரபுக்கள் சபை<br>உச்சநீதிமன்றம் (vi)<br>மேல் முறையீட்டு நீதிமன்றம்<br>மேல் நீதிமன்றம்<br><br>உச்சநீதிமன்றம்<br>மேன் முறையீட்டு நீதிமன்றம் (v)<br>மேல் நீதிமன்றம்<br>அரசியின் நீதிமன்றம் (ii)<br>குடும்ப நீதிமன்றம் (iii)<br>சான்சிலர் பிரிவு (iv)<br>கௌண்டி நீதிமன்றம் (i) | மிக உயர் நீதிமன்றம் உச்ச நீதிமன்றமாகும்.<br><br>கீழ்மட்டத்திலான நீதிமன்றங்கள் பல உள<br><br>1. அரசியலமைப்பு சட்டங்களால் தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள்<br>• சமஷ்டி மேன்முறையீட்டு நீதிமன்றம்<br>• மாவட்ட நீதிமன்றம்<br>2. அரசியலமைப்பு நீதிமன்றம்<br>• சுங்க வரி நீதிமன்றம்<br>• சுங்கவரிக் காப்புரிமை நீதிமன்றம்<br>• வருமான வரி நீதிமன்றம்<br>• இராணுவ மேன்முறையீட்டு நீதிமன்றம் | 2 வகை நீதிமன்றங்கள்<br><br>1. சாதாரண நீதிமன்றங்கள்<br>2. நிர்வாக நீதிமன்றங்கள்<br><br>சாதாரண நீதிமன்றங்கள்<br><br>1. சிவில் நீதிமன்றங்கள்<br><br>2. குற்றவியல் நீதிமன்றம்<br><br>**சிவில் நீதிமன்றம்**<br>சமாதான நீதவான் (1)<br>ஆரம்ப நீதிமன்றங்கள் (2)<br>மேன்முறையீட்டு நீதிமன்றம் (3)<br>கெஷேசத் நீதிமன்றம் (4) | • பிரதம மந்திரியின் வழிகாட்டலின் கீழ் நிறைவேற்றுத்துறை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.<br><br>• சட்டத்துறை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.<br><br>• வரவு செலவுத் திட்டங்களைத் தயாரித்தல் உட்பட்ட நிதி நடவடிக்கைகள்<br><br>• அரசியல் மற்றும் தேசிய தேவைகளைப் பாதுகாத்து இந்தியாவின் ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தல். | |

| நியதி | பிரித்தானியா | அமெரிக்கா | பிரான்ஸ் | இந்தியா | சுவிட்சர்லாந்து |
|---|---|---|---|---|---|
| கட்டமைப்பு | **குற்றவியல் நீதிமன்றம்**<br>பிரபுக்கள் சபை<br>அரசியின் நீதிமன்றம் பிரதேச நீதிமன்றம் (iv)<br>மேன்முறையீட்டு நீதிமன்றம் (v)<br>பிரிவு கவுன்சில் (iii)<br>மும்மாத நீதிமன்றங்கள் (ii)<br>சமாதான நீதவான்கள் (i) | | **குற்றவியல் நீதிமன்றம்**<br>பொலிஸ் நீதிமன்றம்(1)<br>மேன்முறையீட்டு நீதிமன்றம் (2)<br>எஸயிஸ் நீதிமன்றம் (3)<br>தண்டனை நீதிமன்றம் (4)<br>**நிர்வாக நீதிமன்றம்**<br>1. பிரதேச சபை<br>2. ராஜ்ய சபா<br>நீதிமன்ற நடவடிக்கைகளில் மிக உயர்ந்த நீதிமன்றமானது மீ உயர் நீதிமன்றம் கவுன்சில் ஆகும். | | |

# கட்சிமுறை

| நியதி | பிரித்தானியா | அமெரிக்கா | பிரான்ஸ் | இந்தியா | சுவிட்சர்லாந்து |
|---|---|---|---|---|---|
| **அடிப்படை இயல்புகள்** | • **இருகட்சி முறை**<br>• நீண்டகால வளர்ச்சியின் பலன்<br>• சிறந்த ஒழுங்கமைப்பு<br>• அடிப்படை கொள்கை தொடர்பாக முக்கிய இரு கட்சிகளுக்கும் இடையில் நிலவும் ஒருமைப்பாடு<br>• பலம் மிக்க ஆளும் கட்சி போலவே எதிர்க்கட்சியும் விளங்குதல்.<br>• காலத்தின் தேவைக்கேற்ப கட்சி கொள்கை களைத் தயாரித்தல். | • **இருகட்சி முறை**<br>• அரசியலமைப்பு தேவைக்கேற்ப உருவாக்கப்பட்ட கட்சிகளாக அமையாமை.<br>• பலவீனமான கட்சிமுறை<br>• கட்சிக் கொள்கைகள் எப்போதும் மாற்றத்துக்கு உள்ளாதல்.<br>• கட்சிக் கொள்கைகளுக்கு இடையில் வேறுபாடுகள் குறைவு.<br>• தேர்தல் நோக்கான கட்சிமுறை<br>• இறுக்கமான கோட்பாட்டு பிரிப்போ உறுதியான சமூக வகுப்பு அடிப்படையோ காணப்படாமை.<br>• செல்வாக்குச் செலுத்தும் குழுக்கள் ஒன்றுசேரும் நிலைமை காணப்படுதல். | **பல கட்சிமுறை**<br>பல கட்சிமுறை நிலவுவதன் காரணங்கள்<br>• பிரான்ஸின் வரலாற்று ரீதியான அரசியல் எச்சங்கள்<br>• பிரான்ஸிய மக்களின் உளவியல் இயல்பு<br>• பல்லின மக்கள்<br>• பிரதேசவாதம்<br>• கருத்துக்களின் பல்வகைமை<br>• பிரதிநிதித்துவ முறையின் இயல்பு<br>• கட்சிகளுக்கு இடையில் அடிப்படை ஒருமைப்பாடின்மை<br>• எப்போதும் மாறும் இயல்பு<br>• அரசியல் போக்குகளின் உறுதித்தன்மை | **பல்கட்சிமுறை**<br>• சமூகப் பல்வகைமை அல்லது மொழி, சமயம், பிரதேசப்பிரிவுகள் கொண்ட கட்சிமுறை<br>• 1948 - 1970 வரை அரசியல் கட்சிகளிடையே காங்கிரஸ் கட்சி ஆதிக்கம் கொண்டிருந்தது. 1970 களின் பின் அந்நிலை மாறியது.<br>• எனினும் காங்கிரஸ் கட்சி தவிர தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கும் தத்துவம் கொண்ட தேசிய மட்ட அரசியல் கட்சி எதுவும் இதுவரையில் இந்திய அரசியல் முறையில் தோற்றம் பெறவில்லை. | பிரதான கட்சிகளும் சிறுகட்சிகள் பலவும் காணப்படுதல்.<br>• ஏனைய நாடுகளின் அரசியல் கட்சிகளுக்கான பணிகளைவிட குறைந்தளவு முக்கியத்துவத்தையே சுவிஸ் அரசியலில் கட்சிகள் பெறுகின்றன.<br>**இதற்கான காரணங்கள்**<br>• நீண்டகாலமாக நிலவும் முக்கியம் வாய்ந்த பிரச்சினைகள் எதுவும் கட்சிகளால் முன்வைக்கப்படாமை.<br>• பொருளாதார விடயம் பற்றிய பாதகமான நிலைமைகள் காணப்படாமை.<br>• சமயம்சார் எதிர்ப்புகள் நிலவாமை. |

| நியதி | பிரித்தானியா | அமெரிக்கா | பிரான்ஸ் | இந்தியா | சுவிட்சர்லாந்து |
|---|---|---|---|---|---|
| | | | | | • சட்டத்துறை சபை குறுகியதாக இருத்தல்.<br>• கட்சிகள் எளிய விதத்தில் அமைக்கப்பட்டு இருத்தல்.<br>• வெற்றி இறுமாப்பு இன்மை.<br>• மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு<br>• வர்க்க பேதம் இன்மை.<br>• நீண்டகாலமாக ஒரு கட்சியே முக்கியத்துவம் பெற்றுக் காணப்பட்டமை.<br>• நன்மைகளைப் பகிர்ந்துகொள்ளும் முறையின்மை.<br>• நாட்டுப்பற்று. |

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்

- வினாவிடைச் சஞ்சிகை ஒன்றைத் தயாரிக்குக
- தெரிவு செய்யப்பட்ட அரசியலமைப்புக்களின் அரசியல் ஸ்தாபனங்கள் தொடர்பில் மேற்படி சஞ்சிகையைத் தயாரிக்குக.
- தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை தொடர்பில் வினாக்களைத் தயாரிக்கும்போது பின்வரும் விடயங்களில் கவனஞ் செலுத்துக.
    1. தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை ஸ்தாபனங்களுக்கு பிரதிநிதிகளை நியமித்தல், நீக்குதல், பதவிக்காலம்
    2. தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் சட்ட, நிறைவேற்று, நீதித்துறைகளின் அதிகாரமும் பணிகளும்
    3. தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் உள்ளூராட்சி நிறுவனங்களின் கட்டமைப்பு, அதிகாரங்களும் பணிகளும்
- குழுக்களாகப் பிரித்து தலைப்புகளுக்கேற்ப வினா-விடைகளைத் தயாரிக்குக.
- வினாக்களைத் தயாரிக்கும்போது கருத்திற் கொள்ள வேண்டிய மூலாதாரங்கள் குறித்து மாணவரைத் தெளிவுபடுத்துக.
- அனைத்து குழுக்களும் தயாரித்த வினாக்களை ஒன்றிணைத்து வினா விடை சஞ்சிகையைத் தயாரிக்க.
- பொருத்தமான வகையில் மதிப்பிடுக.

## உசாத்துணை


- Indian Government & Politics - Johari. J.C.
- Government & Politics ih the united states Hathorn - Peuniman - Ferber

## அலகு 13.0 :- சுதந்திர இலங்கையின் அரசியலமைப்புக்களின் விசேட தாபனங்களும் ஏற்பாடுகளும்

**தேர்ச்சி 13** :- சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியலமைப்புச் சட்டங்களில் உள்ள விசேட அரசியல் தாபனங்களினதும் ஏற்பாடுகளினதும் இயல்புகளை இனங்காண்பார்.

**தேர்ச்சி மட்டம் 13.1** :- சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியலமைப்புச் சட்டங்களில் உள்ள விசேட ஏற்பாடுகள் பற்றி ஒப்பீட்டு ரீதியில் ஆராய்வார்.

**13.2** :- சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியலமைப்புச் சட்டங்களில் உள்ள அரசியல் தாபனங்கள் பற்றி ஒப்பீட்டு ரீதியில் ஆராய்வார்.

### கற்றற் பேறுகள்

- சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியலமைப்புச் சட்டங்களில் விசேடமாகக் குறிப்பிடப்பட்ட அரசியல் ஏற்பாடுகளையும் அதன் இயல்புகளையும் இனங்காண்பார்.
- அதற்கமைய அந்த ஏற்பாடுகளில் அடிப்படை உரிமைகள், மொழி உரிமைகள், சிறுபான்மையினரின் உரிமைகள், பிரதிநிதித்துவ முறை, நிதி நிறுவனங்கள் என்பன பற்றி ஆராய்வார்.
- சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியலமைப்புச் சட்டங்களில் உள்ள அரசியல் தாபனங்களான 1972 இன் அரசியலமைப்பு நீதிமன்றம், 1978 இன் அரசியலமைப்புச் சபை, தேர்தல் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு என்பனவற்றின் அதிகாரங்கள், இயல்புகள், பணிகள் என்பனவற்றை விபரிப்பார்.
- பிரதேச ஆட்சி நிறுவனங்கள் என்ற வகையில் 1948 முதல் இன்றுவரை உள்ள உள்ளூராட்சி முறை, மாகாண சபை முறைகள் தொடர்பாக ஆராய்வார்.

### அறிமுகம்

1948 பெப்ரவரி 04 ஆம் திகதி இலங்கை பிரித்தானிய குடியேற்ற ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்றது. அது முதல் இன்றுவரை அரச நிருவாகம் 3 அரசியலமைப்புச் சட்டங்களின் கீழ் செயற்படுத்தப்பட்டது.

- 1947 இன் சோல்பரி அரசியலமைப்பு.
- 1972 இன் முதலாவது குடியரசு அரசியலமைப்பு.
- 1978 இன் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு.

தற்போது 1978 இன் இரண்டாவது குடியரசு யாப்பு செயற்பாட்டில் உள்ளது. இந்த அரசியலமைப்புக்கள் மூன்றையும் நோக்கும்போது அவை ஒவ்வொன்றின் மூலமும் அரச நிருவாக அதிகாரங்களை செயற்படுத்துவதற்காக மரபு முறையான சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை ஆகிய தொகுதிக்கு மேலதிகமாக விசேட தாபனங்கள் பல அரசியலமைப்புக்கள் மூலம் உருவாக்கப்பட்டுள்ளமை தெளிவாகிறது.

அதேபோன்று பல்லின சமூகத்தின் அனைத்து மக்கள் குழுவினதும் சுதந்திரங்களையும் உரிமைகளையும் பாதுகாக்கும் விதமாக விசேட ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டுள்ள விதமும் இந்த மூன்று அரசியலமைப்புக்களிலும் காணப்படுகின்றன.

மேலே காட்டப்பட்ட விதமாக ஒவ்வொரு அரசியலமைப்பு மூலமாக உருவாக்கப்பட்டுள்ள விசேட ஏற்பாடுகளையும் விசேட தாபனங்களையும் இனங்காண்பதும் அவை செயற்படுத்தப்பட்டுள்ள விதம் தொடர்பாகவும் விளக்கம் பெறுவதே இந்த அலகின் நோக்கமாகும்.

## பாட விடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்

பல்லின சமூகமொன்றின் அரசியலமைப்பு ஒன்றின் மூலம் தேசியத்தை உருவாக்குவதற்காக உயிர்புடனான செயற்பாட்டை நிறைவேற்றுவது அதன் ஒரு பணியாகக் காணப்படுகிறது. விசேடமாக பெரும்பான்மையான இனமொன்றும் சிறிய இனங்கள் பலவும் உள்ள இலங்கை போன்ற பல்லின சமூகமொன்றில் அனைத்து இனங்களினதும் உரிமைகளை சமமாகப் பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் இந்நாட்டின் சுதந்திரத்தின் பின்னரான அரசியலமைப்புகள் பற்றிய கற்கைகளில் காணப்படுகின்றன. இவ்வாறாக செயற்பட்ட விதத்தை இரண்டு துறைகளின் கீழ் காட்டலாம்.

**1. அரசியலமைப்புக்களில் விசேட ஏற்பாடுகளைச் செய்தல்**

*உதாரணம்:*

- 1948 இன் அரசியலமைப்பில் சிறுபான்மையினரின் பாதுகாப்புக்காக சேர்க்கப்பட்டிருந்த 29 வது உறுப்புரை.
- பல அங்கத்தவர் தேர்தல் தொகுதி முறை.
- பாராளுமன்றத்துக்கு நியமன உறுப்பினர்கள் 6 பேர் நியமிக்கப்படுதல்.
- செனட் சபைக்கு நியமன உறுப்பினர்கள் 15 பேர் நியமிக்கப்படுதல்.
- 1972, 1978 அரசியலமைப்புக்களில் அடிப்படை உரிமைகள் பிரகடனம்.
- 1978 இன் அரசியலமைப்பில், சட்டங்களின் சட்டவாக்க இயல்பை ஆய்வதற்கான அதிகாரம் உச்ச நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளமை. (சட்டமுன்னாய்வு - Judicial Preview)

**2. இரண்டாவது அரசியலமைப்பின் மூலம் விசேட தாபனங்கள் உருவாக்கப் பட்டமை.**

*உதாரணம்:*

- 1947 இல் செனட்சபை.
- அரச சேவை ஆணைக்குழு
- நீதிச் சேவைகள் ஆணைக்குழு.
- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

### ➢ 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பு

- அரசியலமைப்பு நீதிமன்றம்.
- அரச சேவை ஒழுக்காற்றுச் சபை.
- அரச சேவை ஆலோசனைச் சபை.
- நீதிச் சேவை ஒழுக்காற்றுச் சபை.
- நீதிச் சேவை ஆலோசனைச் சபை.

## ➢ 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு

- அரச சேவை ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு தாபிக்கப்பட்டமை.
- ஒம்பூட்ஸ்மன் பதவி.

மேற்படி ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பாக பேரளவு மாற்றங்கள் 17 வது அரசியலமைப்புச் சீர்திருத்தம் மூலமாக அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்டன. அந்நோக்கத்துக்காக அரசியலமைப்புப் பேரவை எனும் விசேட தாபனமொன்று அமைக்கப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள், தாபனத் தொகுதிகள் தொடர்பாக விபரமாக ஆராய்ந்து நல்லாட்சிக்கு மிகவும் பொருத்தமான ஏற்பாடுகள், தாபனங்கள் யாவை எனப் பகுப்பாய்வு செய்தலே இவ்வமைப்பின் முக்கிய பணியாகும்.

## ➢ பிரதேச ஆட்சி - 1948 முதல் இன்றுவரை

1947 முதல் இன்றுவரை இலங்கையில் உள்ளூராட்சி முறையின் பரம்பல் பற்றி இந்த அலகில் கவனம் செலுத்தப்படும். 1940 களில் காணப்பட்ட உள்ளூராட்சி முறையில் கிராம சபைகள், நகர சபைகள், பட்டின சபைகள், மாநகர சபைகள் என்பன காணப்பட்டன. தற்போது அவ்வமைப்பு முறையில் பெருமளவு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றை தாபன ரீதியான மாற்றங்கள் எனவும் பணிகள் ரீதியான மாற்றங்கள் எனவும் அடையாளப்படுத்தலாம்.

தாபன ரீதியான மாற்றங்கள் என்றவகையில் அன்று காணப்பட்ட கிராம சபை முறைக்குப் பதிலாக பிரதேச சபை முறை காணப்படுகிறது. அத்துடன் முன்னர் காணப்பட்ட நகர சபைகளும் மாநகர சபைகளும் இயங்குகின்றன. இவ் உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்ச்சியாக எண்ணிக்கையில் அதிகரித்துள்ளன. பணிகள் ரீதியாக ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் இந்நிறுவனங்கள் தொடர்பில் கண்டுகொள்ள முடியும். அதாவது அவற்றின் அதிகாரங்களினதும் பணிகளினதும் அளவு அதிகரித்துள்ளது.

உள்ளூராட்சி முறையொன்று காணப்படுகின்றமை நல்வாழ்வுக்குத் தேவையான அடிப்படை அம்சங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. ஏனெனில் பிரதேச ஆட்சியில் மக்கள் பங்குகொள்வதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றமையே இதற்கான காரணமாகும். மேலும் பிரதேச அபிவிருத்திக்குப் பரந்தளவிலான மக்கள் பங்களிப்பும் கிடைக்கின்றது. பிரதேச வளங்களைப் பிரதேச மட்டத்தில் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

சுதந்திரத்தின் பின்னர் உள்ளூராட்சி தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட முக்கியமான மாற்றமாக 1978 இன் அரசியலமைப்புக்கு செய்யப்பட்ட 13 வது திருத்தம் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் முறையைக் காட்டலாம். அரசியலமைப்புச் சட்டத்தின் மூலமாகவே மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளமை மாகாண சபைகள் முறையில் காணப்படும் முக்கிய பண்பாகும். மாகாண சபை ஆட்சிமுறையை பிரதேச ஆட்சிமுறையில் மிக முக்கிய விடயமொன்றாகக் காட்டலாம்.

மேற்குறிப்பிட்ட அறிமுகத்தின் அடிப்படையில் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(அ) இலங்கை உள்ளூராட்சி முறையின் பரம்பல். (1947 முதல் இன்று வரை)
(ஆ) உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களும் பணிகளும்.
(இ) கட்டமைப்பு, உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படும் விதம், அவர்களை நீக்கும் விதம்.
(ஈ) மத்திய அரசுக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இடையிலான தொடர்புகள்.
(உ) உள்ளூராட்சி மன்றங்களின் பலங்களும் பலவீனங்களும்.
(ஊ) 1978 இன் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தின் அடிப்படை பண்புகளும் மாகாண சபைகள் நிறுவப்படுதலும்.
(எ) மாகாண சபைகள் முறையின் தாபனக் கட்டமைப்பு.
(ஏ) அதிகாரங்களும் பணிகளும்.
(ஐ) பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படும் முறை.
(ஒ) மாகாண அரச சேவை.
(ஓ) மாகாணங்களுக்கிடையேயான சேவை.

- மாகாண சபைகள் முறையின் பலங்களும் பலவீனங்களும்.

# 1947 - 1978
# அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள விசேட ஏற்பாடுகளையும் தாபிக்கப்பட்ட தாபனங்களையும் இனங்காணுதல்

| 1947 சோல்பரி அரசியலமைப்பு | 1972 அரசியலமைப்பு | 1978 அரசியலமைப்பு |
|---|---|---|
| **1. ஏற்பாடுகள்**<br><br>**சிறுபான்மையினருக்காக சேர்க்கப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள்**<br><br>அ. 29 வது உறுப்புரை<br>ஆ. 11 வது உறுப்புரை<br>இ. 8 வது உறுப்புரை - செனட் சபைக்கு 15 பேர் நியமிக்கப்படுதல்.<br>ஈ. 41.5 உறுப்புரை - பல அங்கத்தவர் தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டமை.<br>உ. நீதியமைச்சர் செனட் சபையிலிருந்து தெரிவு செய்யப்படுதல். (48 வது உறுப்புரை)<br><br>**2. தாபனங்கள்**<br><br>அ. 58.1 உறுப்புரை - அரச சேவை ஆணைக்குழு.<br>ஆ. 53 வது உறுப்புரை - நீதிச் சேவைகள் ஆணைக்குழு.<br>இ. 40 வது உறுப்புரை - எல்லை நிர்ணய ஆணைக்குழு.<br>ஈ. நீதியமைச்சர் நியமிக்கப்படும் விதம். | **1. ஏற்பாடுகள்**<br><br>அ. 6 வது உறுப்புரை - புத்த மதத்துக்கு முதன்மை இடம் வழங்குதல்.<br>ஆ. மொழிக்கான ஏற்பாடுகள்.<br><br>i. 7 வது உறுப்புரை - அரச கரும மொழி சிங்கள மொழியாக இருத்தல் வேண்டும்.<br>ii. 8 வது உறுப்புரை - அரச நிருவாகத்தில் தமிழ்மொழியைப் பயன்படுத்தும் விதம் 1958 இன் 28 ஆம் இலக்க தமிழ்மொழியைப் பயன்படுத்துதல் தொடர்பான சட்டத்தின் ஏற்பாடுகளைப் பயன்படுத்த வேண்டிய விதம்.<br><br>இ. 16, 17 ஆம் உறுப்புரைகள் - சனநாயக சமூக முறையொன்றை உருவாக்கும் இலக்கை கொண்ட கோட்பாடுகள்.<br>ஈ. 18 வது உறுப்புரிமை - அடிப்படை உரிமைகளும் நானாவித உரிமைகளும்.<br>உ. அரச நிதிக் கட்டுப்பாடு. 84, 85, 86, 87, 88, 89, 90 வது உறுப்புரைகள்.<br><br>கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள்<br>i, அ, ஆ. ஆகிய உறுப்புரைகள் செயற்படுத்தப்பட்ட விதமும் அவற்றின் சமூக அரசியல் விளைவுகளும். | **1. ஏற்பாடுகள்**<br><br>அ. மக்கள் இறைமையும் அதை செயற்படுத்தும் விதமும்.<br>ஆ. தேசிய எண்ணங்கள் தொடர்பான ஏற்பாடுகள்.<br>இ. புத்த மதம் தொடர்பான ஏற்பாடுகள்.<br>ஈ. அடிப்படை உரிமைகள்.<br>உ. மொழி ஏற்பாடுகள்.<br>ஊ. பிரசாவுரிமை.<br>எ. அரச கொள்கைகளை நெறிப்படுத்தும் கோட்பாடுகளும் அடிப்படை கடமைகளும்.<br>ஏ. மக்கள் கருத்துக் கணிப்பு தொடர்பான ஏற்பாடுகள்.<br><br>கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள<br><br>i. ஏற்பாடுகளின் இயல்புகள்.<br>ii. சட்டபூர்வ தன்மையும் பிரயோகமும்<br>iii. மேற்படி விடயங்கள் தொடர்பான அரசியலமைப்பு வரையறைகள். |

| 1947 சோல்பரி அரசியலமைப்பு | 1972 அரசியலமைப்பு | 1978 அரசியலமைப்பு |
|---|---|---|
| கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள்<br><br>அ. சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கான ஏற்பாடுகளின்,<br>i. இயல்புகள்.<br>ii. பிரயோகம்<br>iii. சேர்க்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளின் வெற்றி, தோல்விகள்.<br>iv. சேர்க்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் குறை, நிறைகள்<br><br>ஆ. 2, 3, 4 ஆகிய தாபனங்களின்,<br>i. கட்டமைப்பு.<br>ii. உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட விதம், பதவிக்காலம், பதவி நீக்குதல்.<br>iii. செலுத்துகைகளும் ஏனைய கொடுப்பனவுகளும்.<br>iv. சுயாதீனத்தன்மையைப் பாதுகாப்பதற்கு சேர்க்கப்பட்டிருந்த ஏற்பாடுகள்.<br>v. சுயாதீனமான அரச சேவையையும் நீதிச் சேவைகளையும் நடத்திச் செல்வதற்கு 2, 3 ஆகிய தாபனங்களின் பங்களிப்பை ஆராய்தல்.<br>vi. எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடையப்பட்டனவா, இல்லையா எனப் பரீட்சித்தல். | ii. அ, ஆ ஏற்பாடுகள் மூலம் சமமான பிரசைகள் சம சந்தர்ப்பம் எனும் கோட்பாடுகளில் உண்டான தாக்கங்கள்.<br><br>iii. அ, ஆ ஏற்பாடுகள் தேசியத்தை உருவாக்குவதில் ஏற்படுத்திய தாக்கங்கள்.<br><br>iv. இ ஏற்பாட்டில் உள்ள தத்துவத்தின் இயல்பும் அவற்றின் பிரயோகச் செயற்பாடுகளும்.<br><br>v. ஈ ஏற்பாட்டின் கீழ் வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகளின் இயல்புகளும் அவற்றின் பிரயோகச் செயற்பாடுகளும்.<br><br>vi. அரச நிதிக்கட்டுப்பாட்டை செயற்படுத்திய விதம், கணக்காளர் நாயகம் பதவி, அவரை நியமிக்கும், பதவி நீக்கும் விதம், அதிகாரங்களும் பணிகளும்.<br><br>விசேட தாபனங்கள்<br><br>i. அரசியலமைப்பு நீதிமன்றம்.<br>ii. நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபை.<br>iii. நீதிச் சேவைகள் ஒழுக்காற்றுச் சபை.<br>iv. அரச சேவை ஆலோசனைச் சபை.<br>v. அரச சேவை ஒழுக்காற்றுச் சபை.<br>vi. தேர்தல் ஆணைக்குழு. | **2. தாபனங்கள்**<br><br>அ. அரசியலமைப்புச் சபை.<br>• கட்டமைப்பு<br>• உறுப்பினர்கள் நியமிக்கப்படும் விதம்.<br>• அதிகாரங்களும் பணிகளும்.<br>• பின்வரும் தாபனங்களில் நியமனங்கள் செய்யப்படும் விதம்.<br><br>i. தேர்தல் ஆணைக்குழு.<br>ii. அரச சேவை ஆணைக்குழு.<br>iii. தேசிய பொலிஸ் ஆணைக்குழு.<br>iv. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.<br>v. இலஞ்ச ஊழல் முறைப்பாட்டு விசாரணை ஆணைக்குழு.<br>vi. நிதி ஆணைக்குழு.<br>vii. எல்லை நிர்ணய ஆணைக்குழு.<br><br>• இத்தாபனங்களின்,<br><br>i. கட்டமைப்பு<br>ii. பதவிக்காலம்<br>iii. சம்பளங்களும் ஏனைய கொடுப்பனவுகளும்<br>iv. அதிகாரங்களும் பணிகளும் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |

| 1948 சோல்பரி அரசியலமைப்பு | 1972 அரசியலமைப்பு | 1978 அரசியலமைப்பு |
|---|---|---|
| | கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள்<br><br>i. அரசியலமைப்பு நீதிமன்றத்தின்<br><br>அ. கட்டமைப்பு.<br><br>ஆ. உறுப்பினர் நியமிக்கப்பட்ட விதம், நீதிமன்றத்துக்கு அழைக்கும் விதம்,<br><br>இ. விடயப்பரப்பு, அதிகாரங்களும் பணிகளும்.<br><br>ஈ. சட்ட வரைபுகளின் சட்டவாக்கத் தன்மையை பரீட்சிப்பதற்காக அரசியலமைப்பு நீதிமன்றம் கவனம் செலுத்தும் விதமும் அதனைச் செய்பவர் யாவர் என்பதும்.<br><br>உ. சாதாரண சட்டங்கள், அவசர சட்டங்கள் தொடர்பாக அரசியலமைப்பு நீதிமன்றம் செயற்பட வேண்டிய விதம்.<br><br>ஊ. அரசியலமைப்பு, நீதிமன்றத்தின் சுயாதீனத்தைப் பாதுகாப்பதற்காக சேர்க்கப்பட்டிருந்த ஏற்பாடுகள்.<br><br>எ. பிரயோகச் செயன்முறை. | கீழ் குறிப்பிடப்படும் நிதி, அரச உத்தியோகத்தர்களின் நியமனம் தொடர்பாக அரசியலமைப்புச் சபையின் கடமைகள். (பணிகள்)<br><br>i. பிரதம நீதியரசர்கள், உச்ச நீதிமன்ற நீதிபதிகள்.<br>ii. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரும் அதன் ஏனைய நீதிபதிகளும்.<br>iii. நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள்.<br>iv. சட்ட மாஅதிபர்<br>v. நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் (ஓம்புட்ஸ்மன்)<br>vi. பாராளுமன்றச் செயலாளர்.<br><br>அ. மனித உரிமைகளைப் பாதுகாக்கும்,<br><br>i. உச்ச நீதிமன்றத்தின் பணிகள்.<br>ii. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கடமைகள்.<br>iii. ஓம்புட்ஸ்மனின் (ஆளாட்சி அதிகாரியின்) கடமைகள்.<br><br>இத்தாபனங்கள் தொடர்பாக ஆழமாகக் கற்றல் அவசியம். |

| 1948 சோல்பரி அரசியலமைப்பு | 1972 அரசியலமைப்பு | 1978 அரசியலமைப்பு |
|---|---|---|
| | ii. நிதிச் சேவை ஆலோசனைச் சபை, நிதிச் சேவை ஒழுக்காற்றுச் சபை, அரச சேவை ஆலோசனைச் சபை, அரச சேவை ஒழுக்காற்றுச் சபை என்பவற்றின்,<br><br>அ. கட்டமைப்பு.<br>ஆ. உறுப்பினர்கள் நியமிக்கப்படும் விதம், பதவி நீக்கும் விதம், பதவிக்காலம், சம்பளங்களும் கொடுப்பனவுகளும்.<br>இ. அதிகாரங்களும் பணிகளும்.<br>ஈ. சுயாதீனத்தன்மையைப் பாதுகாக்க சேர்க்கப்பட்டிருந்த ஏற்பாடுகள்.<br>உ. நிதிச் சேவையினதும் அரச சேவையினதும் சுயாதீனத்தன்மைக்கு ஏற்பட்ட தாக்கங்கள் - சாதகமான, பாதகமான விளைவுகள்.<br><br>iii. தேர்தல் ஆணையாளர்<br><br>அ. அரசியலமைப்பின் 82, 83 உறுபபுரைகளில் காட்டப்பட்டுள்ள விதமாக நியமனம் செய்தல், பதவி வெற்றிடமாதல், சம்பளங்களும் கொடுப்பனவுகளும் பதவிக்காலம், அதிகாரங்களும் பணிகளும். | |

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்

- எண்ணக்கரு படமொன்றை உருவாக்குதல்

- வகுப்பறையில் மாணவர்களைப் பொருத்தமான விதத்தில் குழுக்களாக்கி, ***இலங்கை அரசியலமைப்புச் சட்டங்களில் உள்ள விசேட ஏற்பாடுகளும் தாபனங்களும்*** எனும் தலைப்பில் பின்வரும் துறைகள் ஊடாக எண்ணக்கரு படமொன்றைப் பூரணப்படுத்த ஆலோசனை வழங்குங்கள்.

- சுதந்திரத்தின் பின்னர் இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள விசேட ஏற்பாடுகள்.

    1. அடிப்படை உரிமைகளும் இனரீதியான உரிமைகளும்.
    2. தேர்தல் முறைகளும் பிரதிநிதித்துவ முறைகளும்.
    3. நிதிக்கட்டுப்பாட்டு உபாயங்கள்.

- சுதந்திரத்தின் பின்னர் இலங்கை அரசியலமைப்புச் சட்டங்களால் தாபிக்கப்பட்ட அரசியல் தாபனங்கள்.

    1. 1972 இன் அரசியலமைப்பு நீதிமன்றம்.
    2. பாராளுமன்ற ஆணையாளர் பதவி. (ஆளாட்சி அதிகாரி)
    3. அரசியலமைப்புச் சபை.
    4. தேர்தல் ஆணைக்குழு.
    5. 1947 இல் இருந்து இதுவரை காணப்பட்ட இலங்கை உள்ளூராட்சி உபாயங்கள்.

- எண்ணக்கருப் படமொன்றை உருவாக்குவதற்காக மற்றுமொரு கூட்டான முன்பயிற்சியொன்றில் ஈடுபடுங்கள்.

- இணைப்புப் பதங்கள் மூலம் ஒன்றுக்கொன்று தொடர்புபடும் விதம் தொடர்பாக கவனம் செலுத்துங்கள்.

- மாணவர் குழுக்கள் தயாரித்த எண்ணக்கருப் படத்தை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்கிக் கலந்துரையாடலுக்கு வழிப்படுத்துங்கள்.

- கலந்துரையாடலின் பின் பொதுவான கூட்டு எண்ணக்கரு படமொன்றை உருவாக்கி அதன் ஊடாக குறைகளை நிவிர்த்தி செய்துகொள்ளச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

### உசாத்துணை நூல்

1. குரே, ஜோசப் : Constitutional and Administrational law of Sri Lanka.

## அலகு 14.0 :- இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதியின் அதிகாரங்களும் பணிகளும்

**தேர்ச்சி 14** :- 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் சனாதிபதியின் அதிகாரங்களையும் பணிகளையும் இனங்காண்பார்.

**தேர்ச்சி மட்டம் 14.1** :- 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் ஏனைய தாபனங்கள் தொடர்பாக சனாதிபதியின் அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் விளக்குவார்.

### கற்றற் பேறுகள்

- அமைச்சரவை தொடர்பான சனாதிபதியின் அதிகாரங்களையும் பணிகளையும் விளக்குவார்.
- சட்டவாக்கத்துறை தொடர்பாக சனாதிபதியின் அதிகாரங்களையும் பணிகளையும் எழுதிக்காட்டுவார்.
- நீதித்துறை தொடர்பாக சனாதிபதியின் அதிகாரங்களையும் பணிகளையும் ஆராய்வார்.
- அரசசேவை தொடர்பான சனாதிபதியின் அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் அட்டவணைப்படுத்துவார்.

### அறிமுகம்

இரண்டாவது குடியரசு யாப்பின் கீழ் சனாதிபதியின் அதிகாரங்களும் பணிகளும் அந்தஸ்தும் பற்றி நோக்குகையில் அரசியலமைப்புச் சட்டத்தின் 30 வது உறுப்புரையின் மீது முதலில் கவனம் செலுத்துதல் வேண்டும். இலங்கைக் குடியரசில் சனாதிபதி ஒருவர் இருப்பார். அவர் அரசின் தலைவராவார். நிறைவேற்றுத்துறையின் தலைவராவார். ஆயுதப்படைகளின் கட்டளைத் தளபதியுமாவார். இந்த உறுப்புரையை ஆராயும்போது அரசியல் முறையொன்றின் கீழ் அரச அதிகாரத்தை செயற்படுத்தும் அனைத்து அதிகார மூலங்களையும் ஒன்று சேர்த்து 1978 இன் சனாதிபதிப் பதவி உருவாக்கப்பட்டுள்ளமை புலனாகின்றது. இலங்கை எனும் கப்பலின் மாலுமி சனாதிபதியாவார். அதன்படி சனாதிபதிப் பதவிக்கு நிறைவேற்று அதிகாரங்கள் மாத்திரமின்றி சட்டவாக்க, நீதித்துறை, அரச சேவை தொடர்பான அதிகாரங்களும் கருமங்களும் உள்ளன. இந்த அலகின் மூலம் அமைச்சரவை, சட்டவாக்கத்துறை, நீதித்துறை, அரச சேவை ஆகிய தாபனங்கள் தொடர்பாக சனாதிபதியின் அதிகாரங்களும் பணிகளும் பற்றி ஆராய எதிர்பார்க்கப்படுகின்றது.

### பாட விடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்

### 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் செயன்முறை

➢ **ஜனாதிபதியும் அமைச்சரவையும்**

1978 அரசியலமைப்புச் சட்டத்தின் 30.2 உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி இலங்கைக் குடியரசின் சனாதிபதி அரசின் நிறைவேற்றுத்துறையினதும் அரசாங்கத்தினதும் தலைவர் என்பதுடன் ஆயுதப்படைகளின் பிரதான கட்டளையிடும் அதிகாரியும் ஆவார்.

43.1 உறுப்புரையின் கீழ் குடியரசு நிர்வாகத்தை செயற்படுத்துவதற்காக நிர்வாகம் தொடர்பான ஆணையிடும் அதிகாரம் கொண்ட அமைச்சரவை ஒன்று இருக்கும். இவ் அமைச்சரவை பாராளுமன்றத்துக்கு கூட்டாகப் பொறுப்புக் கூறவும் பதிலளிக்கவும் கட்டுப்பட்டுள்ளது.

43.2 உறுப்புரையின்படி சனாதிபதி அமைச்சரவையின் அங்கத்தவராவதுடன் அதன் தலைவருமாவார். சனாதிபதிக்கும் அமைச்சரவைக்கும் இடையிலான தொடர்பு மேற்படி உறுப்புரையின் ஊடாக உருவாகின்றது.

- அமைச்சரவை தொடர்பாக சனாதிபதிக்குரிய கடமைக்கூறு, 43.3 உறுப்புரையில் காட்டப்பட்டுள்ள விதமாக பிரதமர் பதவிக்கு ஒருவரை நியமிப்பதன் மூலம் ஆரம்பமாகிறது. சனாதிபதிக்கும் அமைச்சரவைக்கும் இடையிலான தொடர்பு இவ்வுறுப்புரை ஊடாக உருவாகிறது.

- பாராளுமன்றத்தில் அதிகமானோரின் நம்பிக்கை பெறுபவர் என சனாதிபதி கருதும் பிரதிநிதியை பிரதமர் பதவிக்கு நியமித்தல் வேண்டும்.

- அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அமைச்சுக்களின் எண்ணிக்கையும் அமைச்சர்களுக்கு ஒதுக்கப்படும் விடயங்களும் பொறுப்புக்களும் சனாதிபதியால் தீர்மானிக்கப்படுகின்றன. அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட பின்னர் பாராளுமன்றப் பிரதிநிதிகளில் இருந்து அமைச்சுக்களுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் சனாதிபதியால் நியமிக்கப்படுவார். இதற்காக தேவையெனின், பிரதம அமைச்சரின் அபிப்பிராயத்தைப் பெறலாம்.

- அமைச்சரவையை நியமிக்கும்போது தன்னிடம் வைத்திருக்க வேண்டும் எனக் கருதும் எந்தவொரு அமைச்சையும் அதேபோன்று அமைச்சர்களுக்கு வழங்கப்படாத எந்தவொரு விடயத்தை அல்லது கருமத்தை தனக்குக் கீழ் வைத்திருக்கவும் சனாதிபதிக்கு முடியும்.

  இதன்படி சனாதிபதிக்குக் கீழ் வைத்திருக்கக்கூடிய அமைச்சுக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பது தொடர்பில் வரையறைகள் இல்லை என்பதோடு அது சனாதிபதியின் விருப்பப்படி தீர்மானிக்கப்படும். அமைச்சரவையின் கட்டமைப்பும், அமைச்சர்களுக்குரிய விடயங்களையும் பொறுப்புக்களையும் தனது விருப்பப்படி மாற்றியமைக்கும் அதிகாரமும் சனாதிபதிக்கு உண்டு. இதன்படி பிரதம அமைச்சர்கள் உட்பட எந்தவொரு அமைச்சரையும் பதவியில் இருந்து நீக்க முடிவதுடன் அவ்வாறு மாற்றம் செய்தல் அமைச்சரவையின் தொடர்ச்சித்தன்மையையும் அமைச்சரவை பாராளுமன்றத்துக்கு பொறுப்புக் கூறும் தொடர்ச்சித்தன்மையையும் எவ்விதத்திலும் பாதிக்காது. இவ்வாறு செய்யப்படும் மாற்றங்கள் சனாதிபதி பதவியில் நிலைத்திருப்பதனை எவ்விதத்திலும் பாதிக்காது.

- சனாதிபதி, அமைச்சரவையின் தலைவராவார். அதன்படி அமைச்சரவைக் கூட்டங்களைக் கூட்டுதல், தலைமை வகித்தல், அமைச்சரவைக் கூட்டங்களின் நிகழ்ச்சிகள் நிரலைத் தயாரித்தல் என்பன அவரால் மேற்கொள்ளப்படும். யாதாயினும் ஒரு கொள்கை சார்ந்த விடயமொன்றை அமைச்சரவை அங்கீகாரத்துக்காக முன்வைக்க எந்தவொரு அமைச்சரோ தீர்மானித்தால் அவ்விடயம் முதலில் சனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டு அவரின் கருத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

- சனாதிபதி அமைச்சரவையின் தலைவராக இருந்தபோதிலும் அமைச்சரவை பாராளுமன்றத்துக்கு கூட்டாக பொறுப்பு கூறவேண்டிய போதிலும் சனாதிபதி அத்தேவையில் இருந்து நீங்கியவராவார். அதேபோன்று அமைச்சர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தொடர முடியுமாயினும் சனாதிபதிக்கு எதிராக அவ்வாறு செய்ய முடியாது. மறுபக்கத்தில் அரசாங்கத்துக்கு எதிராக முன்வைக்கப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்று நிறைவேற்றப்படுவதனாலோ அரசின் கொள்கைப் பிரகடனம் அல்லது வரவுசெலவுத் திட்ட யோசனைகள் பாராளுமன்றத்தில் தோல்வியடைவதன் மூலமோ அமைச்சரவை பதவி நீக்கப்பட்டபோதும் அந்நிலைமைகள் சனாதிபதிப் பதவியில் அல்லது அப்பதவியுடன் நிலைத்த தன்மையில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது.

- அமைச்சரவையின் கட்டமைப்பைத் தீர்மானித்தல், அமைச்சர்களை நியமித்தல், அவர்களுக்கு விடயங்களைப் பொறுப்பளித்தல், அரசாங்கத்தின் கொள்கைகளைத் தீர்மானித்தல் ஆகிய அனைத்தும் தொடர்பாக சனாதிபதி ஒப்பாரும் மிக்காருமற்ற அதிகாரத்தை அனுபவிக்கின்றார்.

## சனாதிபதியும் சட்டவாக்கத்துறையும்

**42 வது உறுப்புரை:** அரசியலமைப்புச் சட்டத்தின் மூலமாகவும் மக்கள் பாதுகாப்புத் தொடர்பாக நடைமுறையில் அமுலில் இருக்கும் சட்டங்கள் உள்ளடங்கலாக வேறு யாதாயினும் சட்டங்களின் கீழும் தனது அதிகாரம், பொறுப்பு, கருமங்கள் என்பவற்றை உரியமுறையில் நிறைவேற்றுதல் தொடர்பில் சனாதிபதி பாராளுமன்றத்துக்கு பொறுப்பு கூறுவார்.

இந்த ஏற்பாடு பிரயோகப் பெறுமதி கொண்டது எனக் கருதமுடியாது. ஏனெனில் சனாதிபதி சட்டவாக்கத்துறையின் உறுப்பினர் ஒருவர் அல்ல என்பதும் பொறுப்புக்களை மீறும்போது அது தொடர்பாக கேள்விகள் எழுப்பி பொறுப்புக்களை நிறைவேற்றச் செய்வதற்கு சட்டவாக்கத்துறைக்கு உள்ள அதிகாரம் வரையறுக்கப்பட்டுள்ளமையும் காரணமாகும். சனாதிபதியின் செயற்பாடுகள் பற்றி பாராளுமன்றம் கேள்விகள் எழுப்ப முடியுமாயினும் சபாநாயகரின் அனுமதியுடன் முன்வைக்கப்படும் விசேட முன்மொழிக்கேற்பவே அவ்வாறு செய்யமுடியும். குற்றப் பிரேரணை (Impeachment) ஒன்றின் கீழ் மாத்திரமே அவரை பாராளுமன்றம் பதவிநீக்கம் செய்யமுடியும். அது உண்மையில் மிகவும் கடினமானதும் சிக்கலானதுமான செயலாகும். எனவே 42 வது உறுப்புரை வெறுமனே பெயரளவிலானது என்பதோடு பெறுமானம் அற்ற ஓர் அலங்கார உறுப்புரையாகும்.

**65.1 உறுப்புரை:** இவ்வுறுப்புரைக்கு அமைய உறுப்புரை 41 இல் காட்டப்பட்டுள்ள விதமாக பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டும். 41 ஆம் உறுப்புரைக்கமைய செயலாளர் நாயகம் பதவிக்கு நியமிக்கப்படும் நபர், சனாதிபதியினால் அரசியலமைப்புச் சபைக்கு சிபாரிசு செய்யப்பட வேண்டியதுடன் அரசியலமைப்புச் சபை அதனை அங்கீகரித்தால் மாத்திரமே சனாதிபதி அந்நபரை நியமனஞ் செய்ய முடியும்.

**65.1 உறுப்புரை:** இவ்வுறுப்புரைக்கு அமைய பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்தை அவரது பதவிக் காலத்துக்கு முன்னர் பதவியில் இருந்து நீக்கும் அதிகாரம் சனாதிபதிக்கு உண்டு. எனினும் இவ்வதிகாரத்தைப் பின்வரும் சந்தர்ப்பங்களில் மாத்திரமே பிரயோகித்தல் வேண்டும்.

**அ.65.5.(இ) உறுப்புரைக்கேற்ப** செயலாளர் நாயகம் நோய்வாய்ப்படும்போது அல்லது உடல், உளவியல் ரீதியாக பலவீனமடையும்போதும்.

**அ.65.5.(ஈ) உறுப்புரைக்கு** அமைய பாராளுமன்றம் செயலாளர் நாயகத்துக்கு எதிராக நிறைவேற்றும் பிரேரணை ஒன்றின் மூலம்.

**65.6 உறுப்புரை.** இவ்வுறுப்புரைக்கு அமைய செயலாளர் நாயகம் தமது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றிக்கொள்ள இயலாது போகுமிடத்து செயலாளர் நாயகத்துக்கு பதில் கடமையாற்ற 41.இ உறுப்புரைக்கு அமைய நபர் ஒருவரை நியமிக்க சனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

**70 உறுப்புரை:** இவ்வுறுப்புரைக்கு ஏற்ப சட்டவாக்கத்துறையினரை (பாராளுமன்றத்தை) கூட்டுதல், பிற்போடுதல், கலைத்தல் என்பன சனாதிபதியால் ஆற்றப்பட வேண்டும்.

**அ.பிற்போடுதல்.** 70.2 உறுப்புரைக்கு அமைய சனாதிபதியால் பாராளுமன்றத்தின் கூட்டத்தைப் பிற்போடுவதற்கான பிரகடனத்தில் அதனை மீண்டும் கூட்டும் திகதியும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அத்திகதி பிரகடனம் வெளியிடப்பட்ட திகதியில் இருந்து இரண்டு மாதங்களுக்கு மேற்படலாகாது.

**ஆ. கலைத்தல்.** 70 வது உறுப்புரையில் a, b, c, d ஆகிய துணை உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமையவே சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தல் வேண்டும்.

**70 a உறுப்புரை:** பொதுத்தேர்தல் ஒன்றின் பின் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்றமொன்றினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றின் மூலம் கோரிக்கை விடப்பட்டாலொழிய தெரிவுசெய்யப்பட்ட தினத்தில் இருந்து ஒரு வருடம் செல்லும்வரை பாராளுமன்றத்தைக் கலைத்தலாகாது.

**70 b உறுப்புரை:** பொதுத்தேர்தல் ஒன்றின் பின் பாராளுமன்றம் கூடும் முதல் அமர்வின்போது முன்வைக்கப்படும் அரசாங்கக் கொள்கைப் பிரகடனம் பாராளுமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டாலும் கூட சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தல் கூடாது.

**70 c உறுப்புரை:** சனாதிபதிக்கெதிராக குற்றப் பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டு அது நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டிருக்கும் வேளை பாராளுமன்றத்தைக் கலைத்தல் கூடாது.

**70 d உறுப்புரை:** வருடாந்த வரவுசெலவு அறிக்கை பாராளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்டு இரண்டாம் முறையும் அது நிராகரிக்கப்பட்டால் 70 வது உறுப்புரையைக் கவனியாது பாராளுமன்றத்தைக் கலைக்கலாம்.

**33.அ உறுப்புரை:** அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

**33.ஆ உறுப்புரை:** பாராளுமன்ற முதல் அமர்வுகளுக்கு தலைமை தாங்குதல். இந்த ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக பாராளுமன்றம் சனாதிபதியுடனான தொடர்புகளை அமைச்சரவை ஊடாகச் செய்யலாம். அமைச்சரவை, சனாதிபதியையும் பாராளுமன்றத்தையும் இணைக்கும் பிணைப்பு ஆகும். மறுபுறம் குற்றவியல் பிரேரணையொன்றைச் சனாதிபதிக்கு எதிராக முன்வைக்க முடியுமென்பது மாத்திரமே பாராளுமன்றத்துக்கு உள்ள ஒரேயொரு அதிகாரமாகும். எனினும் அது அவ்வளவு எளிதான காரியமல்ல. சனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையிலான இத்தொடர்புக் கோலத்தினை அவதானிக்கும்போது நிறைவேற்று அதிகாரம் மூலமும் அமைச்சரவையூடாகவும் பெரும்பான்மை பலம் இருப்பின் தனது கட்சியூடாகவும் தமக்கு விருப்பமான முறையில் பாராளுமன்றத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்பது தெளிவாகிறது. எனினும் சட்டவாக்கத்துறை சனாதிபதி மீது செலுத்தக்கூடிய செல்வாக்கு மிகவும் குறைந்ததாகவே காணப்படுகிறது.

## ஜனாதிபதியும் நீதித்துறையும்

1978 இன் 2 ஆம் இலக்க நீதிமன்ற ஏற்பாட்டுச் சட்டத்தின் மூலம் கீழ்வரும் நீதிமன்ற முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

1. உச்ச நீதிமன்றம்
2. மேன்முறையீட்டு நீதிமன்றம்
3. மேல் நீதிமன்றம்
4. மாவட்ட நீதிமன்றங்கள்
5. நீதவான் நீதிமன்றங்கள்
6. ஆரம்ப நீதிமன்றங்கள்

- இவற்றில் முதல் மூன்று நீதிமன்றங்களும் உயர்நிலை நீதிமன்றங்கள் எனவும் ஏனையவை கீழ்நிலை நீதிமன்றங்கள் எனவும் அழைக்கப்படும்.

- 1978 இன் அரசியலமைப்பு மூலம் 1972 இன் நிறைவேற்று அதிகாரத்தைவிட கூடிய அதிகாரங்கள், நீதித்துறை தொடர்பாக சனாதிபதிக்குப் பொறுப்பளிக்கப்பட்டிருந்தபோதும் 17 வது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் அமைக்கப்பட்ட அரசியலமைப்புச்சபை மூலம் நிறைவேற்றுத்துறையின் அதிகாரங்களை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

- உச்ச நீதிமன்ற, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் இச்சட்டத்தின் மூலம் சனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்தது.

- 107 (1) பிரதம நீதி அரசரும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரும் உச்ச நீதிமன்றத்தினதும் மேன்முறையிட்டு நீதிமன்றத்தினதும் அனைத்து நீதிபதிகளும் 41 (இ) உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைய சனாதிபதியால் தனது சுய கையொப்பத்தைக் கொண்ட ஆவணமொன்றின் மூலம் நியமிக்கப்படுவர்.

- 17 வது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்டுள்ள 41 (இ) உறுப்புரையில், சனாதிபதி மூலம் அரசியலமைப்புச் சபைக்கு செய்யப்படும் சிபாரிசின் பேரில் சபை அனுமதித்தால் மாத்திரமேயொழிய இந்த அரசியலமைப்பின் பின்னிணைப்பில் குறிப்பிடப்படும் எந்தப் பதவிக்கும் சனாதிபதியால் எவரும் நியமிக்கப்படுதல் கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் சனாதிபதியின் நியமிக்கும் அதிகாரத்தைக் கட்டுப்படுத்த முயற்சிக்கப்பட்டுள்ளது.

அ. இதற்கு மேலதிகமாக 41 (இ) உறுப்புரை மூலம் சனாதிபதியினால் அரசியலமைப்புச் சபைக்கு செய்யப்படும் சிபாரிசின் பேரில், அச்சிபாரிசை ஆராய்ந்து அரசியலமைப்புச் சபை அனுமதி வழங்கியதன் பின்னர் நீதித்துறைக்கான பின்வரும் நியமனங்களை சனாதிபதி மேற்கொள்ளலாம்.

1. பிரதம நீதியரசர், உயர் நீதிமன்றத்தின் ஏனைய நீதிபதிகள்.
2. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரும் ஏனைய நீதிபதிகளும்.
3. நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள்.
4. சட்டமா அதிபர்.

ஆ. **107.4 உறுப்புரை:** பிரதம நீதியரசர், மேல் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரும் ஏனைய நீதிபதிகளும் சனாதிபதி முன்னிலையில் செய்யும் சத்தியப் பிரமாணத்தின் மூலம் தமது கடமைகளைப் பொறுப்பேற்றல் வேண்டும்.

இ. **109.1 உறுப்புரை:** உயர் நீதிமன்றத்தின், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவரை, பாராளுமன்றத்துக்குச் சமூகமளிக்காத அங்கத்தவர்கள் உட்பட 1/2 பங்கினரின் அங்கீகாரத்துடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றின் பேரில் பதவியில் இருந்து நீக்குவதற்கான அதிகாரம் சனாதிபதிக்கு உண்டு.

ஈ. **109.1 உறுப்புரை:** உயர் நீதிமன்றத்திலோ மேன்முறையீட்டு நீதிமன்றத்திலோ தற்காலிகமாக ஏற்படும் வெற்றிடங்களுக்காக 42(இ) உறுப்புரையில் உள்ளபடி பதில் கடமை ஆற்றும் நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் சனாதிபதிக்கு உண்டு.

உ. **110.1 உறுப்புரை:** உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவருக்கு மற்றுமொரு எழுதப்பட்ட சட்டத்தின் கீழ் பிறிதொரு கருமமொன்றைச் செய்யுமாறு விதிக்கும் அதிகாரம் சனாதிபதிக்கு உண்டு.

ஊ. **110.3 உறுப்புரை:** உயர் நீதிமன்றத்திலோ அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்திலோ நிரந்தர சேவையில் இருக்கும் நீதிபதி ஒருவர் ஓய்வு பெற்ற பின்னர் சனாதிபதியின் எழுத்து மூலமான விருப்பம் இன்றி நீதித்துறை நடவடிக்கைகளில் ஈடுபடுதல் ஆகாது.

எ. **111.2 (அ) உறுப்புரை:** நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் சிபாரிசின் பேரில் சனாதிபதி மேல் நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல் வேண்டும்.

ஏ. **112 (ஆ) உறுப்புரை:** நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் சிபாரிசின் பேரில் மேல் நீதிமன்ற நீதிபதிகளை சனாதிபதி பதவியில் இருந்து நிறுத்தி வைக்க முடியும். மேலும் அவர்கள் சனாதிபதியின் விடயக் கட்டுப்பாட்டுக்கு உட்படுவர்.

ஐ. **34.1 உறுப்புரை:** குற்றவாளிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கும் அதிகாரம் சனாதிபதிக்கு உண்டு. அதன்படி,

1. முழுமையான மன்னிப்பு அல்லது சட்ட ரீதியான நிபந்தனைகளுடனான மன்னிப்பு வழங்குதல்.
2. விதிக்கப்பட்ட தண்டனையை காலவரையறையின்றி அல்லது கால வரையறையுடன் பிற்போடுதல்.
3. விதிக்கப்பட்ட தண்டனைக்குப் பதிலாக எளிமையான தண்டனை ஒன்றை வழங்குதல்.
4. விதிக்கப்பட்ட தண்டனை ஒன்றை முற்றாக நீக்குதல், அரைவாசியாகக் குறைத்தல், தண்டப் பணம் ஒன்றை முழுமையாக நீக்குதல் அல்லது குறைத்தல். அரசுடமையாக்கப்பட்ட சொத்து ஒன்றை முழுமையாக அல்லது பகுதியளவில் கைவிடல்.

ஒ. **129.1 உறுப்புரை:** சனாதிபதி உயர் நீதிமன்றத்தின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரம்.

மேலே குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நோக்கும்போது நியமித்தல், நீக்குதல், மன்னிப்பு வழங்குதல் ஆகிய விடயங்கள் தொடர்பாக சனாதிபதியிடம் சில நீதித்துறை அதிகாரங்கள் உள்ளமை புலனாகிறது. எனினும் அவ்வதிகாரங்களைப் பிரயோகிக்கும்போது நீதித்துறையில் செல்வாக்கு செலுத்தும் அளவு வரையறுக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதியும் அரச சேவையும்

அரசியலமைப்புச் சட்டத்தின் 30.1 உறுப்புரைக்கு அமைய சனாதிபதி நிறைவேற்றுத்துறையின் தலைவராவார். இதன் பிரகாரம் முழுமையான அரச சேவையையும் கட்டுப்படுத்தும் தனி அதிகாரம் சனாதிபதிக்கு உண்டு. அரச சேவையைக் கட்டுப்படுத்தும்போது சனாதிபதியின் அதிகாரங்களை செயற்படுத்தும் முறைகள் பலவற்றைக் காணலாம்.

அ. சனாதிபதியின் சுயவிருப்பப்படி அரச சேவையில் செய்யக்கூடிய நியமனங்கள் உயர் அரச உத்தியோகத்தர்கள் இவ்வகையில் அடங்குவர்.

ஆ. அரசியலமைப்புச் சட்டத்துடன் இணைந்து செய்யவேண்டிய நியமனங்கள். இது இருவகை இயல்புகளைக் கொண்டது.

1. அரசியலமைப்புச் சபையின் சிபாரிசின் பேரில் செய்யப்பட வேண்டிய நியமனங்கள். இதில் பின்வரும் நியமனங்கள் அடங்கும்.

    1. தேர்தல் ஆணைக்குழு
    2. அரச சேவை ஆணைக்குழு
    3. தேசிய பொலிஸ் ஆணைக்குழு
    4. லஞ்சம், ஊழல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிக்கும் ஆணைக்குழு

2. அரசியலமைப்புச் சபையின் அனுமதியின் கீழ் சனாதிபதியால் வழங்கப்படும் நியமனங்கள். இதில் பின்வரும் நியமனங்கள் அடங்கும்.

   1. சட்ட மாஅதிபர்
   2. கணக்காய்வாளர் நாயகம்
   3. பொலிஸ் மா அதிபர்
   4. ஒம்புட்ஸ்மன் (ஆளாட்சி அதிகாரி/ குறைகேளதிகாரி/ நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர்)
   5. பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

3. ஜனாதிபதியும் அரச சேவை ஆணைக்குழுவும்

அரச சேவை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் ஒன்பது பேரும் அவர்களில் ஒருவர் தலைவராகவும் அரசியலமைப்புச் சபையின் சிபாரிசின் பேரில் சனாதிபதியினால் நியமிக்கப்படுவர்.

அரசியலமைப்புச் சபையின் சிபாரிசின் பேரில் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை பதவி நீக்கும் அதிகாரமும் சனாதிபதிக்கு உண்டு. மேலும் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்கு லீவு அனுமதிக்கவும் அக்காலப்பகுதிக்காக மற்றுமொருவரை நியமிக்கும் அதிகாரமும் சனாதிபதிக்கு உண்டு.

அரசியலமைப்புச் சட்டத்தின் 55.3 உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள விதமாக அனைத்துத் திணைக்களத் தலைவர்களையும் நியமித்தல், பதவி உயர்த்துதல், இடமாற்றம் செய்தல், ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளுதல், வேலை நீக்கம் செய்தல் ஆகியன அமைச்சரவைக்கு உரியவைகளாகும். ஆணைக்குழுவின் கருத்துக்களைப் பெற்று இந்த அதிகாரங்களை அமைச்சரவை செயற்படுத்துதல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட இரு சரத்துக்களிலும் சனாதிபதி பதவியை ஒப்புநோக்குகையில் சனாதிபதி அமைச்சரவையின் உறுப்பினரும் அதன் தலைவரும் ஆவார் என்ற கருத்து வெளிப்படுத்தப்படுகின்றது. சனாதிபதி, திணைக்களத் தலைவர்களை தன் சுய விருப்பத்தின் அடிப்படையில் நியமனம் செய்வதற்கான அதிகாரம் நடைமுறையில் காணக்கூடியதாக உள்ளது. ஏனைய விடயங்கள் எதுவும் சனாதிபதி அறியாமலோ சனாதிபதியின் அனுமதியின்றியோ நடைபெறுவதில்லை. அரச சேவையை நிர்வகிப்பதில் சனாதிபதி ஒப்புவமையற்ற அதிகாரத்தைப் பெற்றுள்ளார் என்பது இதன்மூலம் தெளிவாகிறது. அரசியலமைப்புச் சபை செயலிழந்து காணப்படும் காலப்பகுதிகளில் அரச சேவையின் அநேக நியமனங்கள் சனாதிபதியினால் வழங்கப்படுகின்றன என்பதனை உதாரணங்களாகக் காட்டலாம்.

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடு

- ஒப்படை

1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தை ஆராய்ந்து 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள கீழே தரப்பட்டுள்ள தாபனங்கள் தொடர்பாக சனாதிபதியின் அதிகாரங்களையும் பணிகளையும் அட்டவணைப்படுத்த மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

1. ஜனாதிபதியும் அமைச்சரவையும்
2. ஜனாதிபதியும் சட்டவாக்கத்துறையும்
3. ஜனாதிபதியும் நீதித்துறையும்
4. ஜனாதிபதியும் அரச சேவையும்

1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பினை ஆய்வுசெய்து மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் தொடர்பாக சனாதிபதிக்குரிய அதிகாரங்கள், கருமங்கள் பற்றிய சட்ட ரீதியான ஏற்பாடுகள் பற்றிக் கவனம் செலுத்தச் செய்யுங்கள்.

**மூலாதாரம்**

1978 ஆம் ஆண்டு இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டம்.

## அலகு 15.0 :- சமூகத்தில் செயற்படும் அரசியலின் இயல்பு

**தேர்ச்சி 15** :- சமூகத்தில் செயற்படும் அரசியலின் இயல்பை இனங்காணல்.

**தேர்ச்சி மட்டம் 15.1** :- அரசியல் முறையிலுள்ள அரசியல் கட்சிகளின் பணிகள் பற்றி ஆராய்வார்.

**15.2** :- அமுக்கக் குழுக்கள், மக்கள் அபிப்பிராயம், வெகுசன ஊடகங்கள், அரசியல் செயன்முறைகள் நடைமுறைக்கு வரும் விதம் பற்றி ஆராய்வார்.

### கற்றற் பேறுகள்

- தற்காலத்தில் இலங்கை அரசியல் முறையில் அரசியல் கட்சிகளின் பணிகளை விளங்கிக் கொள்வார்.
- அமுக்கக் குழுக்கள், மக்கள் அபிப்பிராயம், வெகுசன ஊடகங்கள் என்பன அரசியல் செயற்பாடுகளில் இயங்கும் விதத்தை விளங்கிக் கொள்வார்.
- தற்கால இலங்கை அரசியல் செயற்பாட்டின் இயங்குநிலை தொடர்பாக ஒப்பீட்டு ரீதியில் கற்பார்.

### அறிமுகம்

இலங்கைச் சமூகத்தில் செயற்படும் அரசியலின் இயல்பு தொடர்பாக விளக்கம் கொடுப்பதே இவ்வலகின் நோக்கமாகும். அதற்காக அரசியல் கட்சிகளின் கடமைகளை ஆய்வு செய்வதும் அமுக்கக் குழுக்கள், மக்கள் அபிப்பிராயம், வெகுசன ஊடகங்கள் என்பன அரசியலில் ஏற்படுத்தும் செல்வாக்குகள் தொடர்பில் விமர்சன ரீதியான ஆய்வு செய்தலும் இதில் அடங்குகின்றன. இங்கு கடந்த காலம் முதல் தற்காலம் வரை அரசியல் கட்சிமுறை வளர்ச்சியடைந்த விதம், அவற்றின் கொள்கைகள், காலத்துக்குக் காலம் அவற்றில் ஏற்பட்டு வந்த மாற்றங்கள் என்பன தொடர்பாக ஒப்பீட்டு ரீதியாகக் கற்பது எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோன்று இவை தற்காலத்தில் இந்நாட்டு அரசியல் முறையினை வடிவமைப்பதில் செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளதுடன் அமுக்கக் குழுக்கள், மக்கள் அபிப்பிராயம், வெகுசன ஊடகங்கள் என்பன அதற்காக வழங்கிய பங்களிப்பு, அவற்றின் கடமைகள் போன்று அதன் பிரயோக ரீதியான செயற்பாடுகள் பற்றியும் ஆழமாகக் கற்பது பொருத்தமானது.

### பாட விடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்

#### இலங்கையின் தற்கால அரசியல் செயலொழுங்கு

இலங்கையின் அரசியல் செயற்பாடுகளில் பங்கேற்பவர்கள் அல்லது செயற்படுபவர் உள்ளனர். அரசியல் கட்சிகள், உயர் வகுப்பினர், அரச சார்பற்ற அமைப்புக்கள், தொழிற் சங்கங்கள், மாணவர் அமைப்புக்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், பல்தேசிய நிறுவனங்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஏனைய புத்தி ஜீவிகள், சர்வதேச அமைப்புக்கள், உலக வங்கி,சர்வதேச நாணய நிதியம் என்பன இலங்கையின் தற்கால அரசியல் செயற்பாடுகளில் உள்ள முக்கிய பங்கேற்பாளர்களாவர்.

இவ் ஒவ்வொரு காரணியும் தனியாகவும் கூட்டாகவும் இந்நாட்டு அரசியல் செயற்பாடுகளில் அழுத்தம் வழங்கக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இக்காரணிகள் தொடர்பாகவும் அவற்றின் செயற்பாடுகள் தொடர்பாகவும் விரிவான விளக்கத்தைப் பெற்றுத் தருவதே இத்தலைப்பின் நோக்கமாகும்.

- **இலங்கையில் அரசியல் கட்சிகளும் கட்சிமுறையும்**

- 1935 இல் இலங்கை சமசமாஜக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. முதல் இந்நாட்டில் அரசியல் கட்சி முறை ஆரம்பமாகியது.
- இதன் பின்னர் முறையே ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி போன்ற அரசியல் கட்சிகள் தோன்றின.
- 1947 இன் சோல்பரி அரசியலமைப்புச் சீர்த்திருத்தங்களின் பின்னரே முறையான அரசியல் கட்சிமுறை ஆரம்பமாயிற்று.
- 1954 இல் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தாபிக்கப்பட்ட பின்னர் இலங்கையின் அரசியலில் முக்கிய இரண்டு கட்சிகளாக ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் பிரசித்தி பெற்றன.
- தனி ஒரு கட்சி, பெரும்பான்மை ஆசனங்களைக் கொண்ட அரசாங்கங்களை அமைப்பதற்கான வாய்ப்புக்கள் வரையறுக்கப்பட்டதாக இருந்தன.
- இதனால் முக்கிய இரு கட்சிகள் இணைந்து கூட்டு அரசாங்கங்களை அமைக்கும் போக்கு காணப்பட்டு வந்தது.
- ஐக்கிய தேசிய கட்சி வலது சாரி அரசியல் கட்சி எனவும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் இடதுசாரி அரசியல் கட்சிகள் எனவும் கருதப்படுகின்றன.

இலங்கையின் அரசியல் கட்சிகள், பல்வேறு இனங்கள், நம்பிக்கைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தோன்றியமையால் வகுப்புவாதப் போக்குகள் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் காரணமாக பல் கட்சி முறை தோன்ற வழி ஏற்பட்டது.

சமூகப் பல்லினத் தன்மை சமப்படுத்த முடியாத அளவுக்கு வகுப்புப் போராட்டங்கள் இடம்பெற்றமை, கருத்து மோதல்கள், மாகாண சபைகளின் அறிமுகம் போன்ற காரணிகளும் பல் கட்சிமுறை தோற்றம் பெற்றதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளுள் சிலவாகும்.

பல்கட்சி முறை வளர்ச்சியடைந்ததன் காரணமாக அரசாங்கம் ஒன்றைத் தாபித்தல், பதவி இழக்கச் செய்தல் என்பவற்றைச் செய்யும் கருவியாக சிறிய கட்சிகள் வலுப்பெற்றுள்ளன.

பல்கட்சி முறையை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கங்கள், கூட்டு எதிர்க்கட்சிகள் தோன்றியமையால் அரசியல் ஸ்திரத்தன்மை பாதிக்கப்பட்டுள்ளது.

கூட்டு அரசாங்கங்கள் அமைவதன் காரணமாக நிலையான, நீண்டகால அரசியல், பொருளாதாரத் தத்துவங்களின் அடிப்படையில் இயங்குவதற்கு அரசாங்கங்களால் இயலாமல் போனமை முக்கிய பண்பாக உள்ளன.

அடிக்கடி கட்சி மாறுதல் இன்று மிகச் சர்வ சாதாரண பண்பாக காணப்படுவதுடன் அதன் காரணமாக கட்சி ஒழுக்கங்கள் அப்பட்டமாக மீறப்படுகின்றன.

## அமுக்கக் குழுக்கள்

அரசியலில் உள்ள தனிநபர்களிலும் தாபனங்களிலும் அழுத்தம் ஏற்படுத்துவதன் மூலம் தம்முடைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக செயற்படும் தனிநபர் குழுக்கள், அமைப்புக்கள் போன்றவற்றை அமுக்கக் குழுக்கள் என அழைக்கலாம்.

தற்கால இலங்கையில் தொழிற் சங்கங்கள், மாணவர் அமைப்புக்கள், தொண்டர் இயக்கங்கள் போன்ற பல்வகையான குழுக்கள் அரசியல் செயற்பாடுகளில் அழுத்தங்களை மேற்கொள்ளும் முக்கிய தாபனங்களாகும்.

இவ்வனைத்து அமுக்கக் குழுக்களும் இன்று பல்வேறு அரசியல் கட்சிகளால் வழிநடத்தப்படுவதனைக் காணலாம்.

## பொதுசன அபிப்பிராயம்

அரசாங்கம், அதன் செயற்பாடுகள், அரசியல் முக்கியத்துவம் உடைய பிரமுகர்கள், நிகழ்வுகள் என்பன தொடர்பாக மக்கள் கொண்டுள்ள கருத்து மக்கள் அபிப்பிராயமாகும் (பொதுசன அபிப்பிராயம்)

மக்கள் அபிப்பிராயங்களை உருவாக்குவதில் அரசியல் கட்சிகள், வெகுசன ஊடகங்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், சிவில் அமைப்புக்கள், மதத் தலைவர்கள், பொருளாதார காரணிகள் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன.

அரசாங்கத்தின் செயல் அடைவை அளவிடுவதற்காகப் பயன்படுத்தக்கூடிய சிறந்த சுட்டியாகப் பொதுசன அபிப்பிராயத்தில் உண்மையும் பொய்மையும் அடங்கியிருக்கும். அதனால் பொதுசன அபிப்பிராயமானது அரசாங்கத்தினால் அதன் நம்பகத்தன்மையை உறுதி செய்து கொண்டதன் பின்பே கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

(இந்தப் பாட அலகு இந்நாட்டு அரசியலின் பிரயோகச் செயற்பாடுகளை இனங்கண்டு கொள்வதற்காக மாணவருக்கு பெரும் துணையாக அமையும். எனவே முடிந்தளவுக்கு பிரயோக ரீதியாகவும் விமரிசன சிந்தனைக்கு இடமளிக்கக்கூடியதாகவும் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைப் பயன்படுத்தி விடயங்களைக் கற்பதற்கு வசதிகள் செய்துகொடுத்தல் மிகப் பொருத்தமானது.)

## பொதுசன ஊடகமும் அரசியலும்

- சனநாயக அரசியல் முறையொன்றின் கீழ் ஊடக சுதந்திரத்துக்கு முதன்மையான இடமுண்டு.

- சனநாயகத்தின் மேம்பாட்டுக்கு சுதந்திரமான, பக்கச்சார்பற்ற சுயாதீனமான ஊடகங்கள் காணப்படுதல் முக்கியமானது என்பதோடு சனநாயகத்தின் காவலர்கள் என ஊடகங்கள் கருதப்படுகின்றன.

- முக்கியமான அரசியல் நிகழ்வுகளை மக்களுக்கு முன்வைத்தல், தகவல்களை வடிவமைத்தல், அரசியல் மயமாக்கல், அரசியல் ரீதியாக முக்கியத்துவம் பெறும் விடயங்கள் தொடர்பாக விவாதங்களை நடத்துதல் போன்ற அநேக அம்சங்கள் தற்கால இலங்கையில் ஊடகங்கள் மூலமாக இடம்பெறுகின்றன.

- இன்று பெரும்பாலான ஊடகங்கள் அரசியலில் உள்ள கட்சிகளின் கையாட்களாக மாறியுள்ளமையைக் கண்டுகொள்ள முடிகிறது.

- சுதந்திரமானதும் சுயாதீனமானதுமான ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் தொல்லை கொடுத்தல், அரசியல் அழுத்தங்களைப் பிரயோகித்தல், கொலை செய்தல் போன்றவை கூட சமீப காலங்களில் நிகழ்ந்துள்ளமையைக் காணலாம்.

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடு

- சுவர்ப்பத்திரிகை ஒன்று தயாரித்தல்.
- வகுப்பின் மாணவர்களை அறிவுறுத்தி சுவர்ப்பத்திரிகைக்குரியதான பின்வரும் தலைப்புக்களின் கீழ் மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள்.
- அரசியல் கட்சிகள்
- மக்கள் அபிப்பிராயம்
- அமுக்கக் குழுக்கள்
- வெகுசன ஊடகங்கள்

இத்தலைப்புக்களின் கீழ் ஆக்கபூர்வமான கட்டுரைகளைத் தயாரிப்பதற்கு மாணவர்களை அறிவுறுத்துங்கள். அவற்றைச் சேகரித்து சுவர்ப்பத்திரிகை ஒன்றைத் தயாரித்து வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.

**அலகு 16.0 :- பூகோள மற்றும் பிராந்திய ரீதியான அரசியலில் இலங்கை**

**தேர்ச்சி 01 :-** இலங்கையின் பூகோள மற்றும் பிராந்திய அரசியற் சூழலைக் கண்டறிந்து கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் :-**

16.1 ஐக்கிய நாடுகள் தாபனம், தன்னோடிணைந்த தாபனங்கள் மற்றும் சார்க், ஆசியான், ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானிய பொதுநலவாய நாடுகள் போன்ற நாடுகளுக்கிடையிலான அமைப்புக்கள், அத்துடன் பிரதானமாக அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றின் செயற்பாடுகள் தொடர்பாக விமர்சனம் செய்வார்.

16.2 சுதந்திரத்தின் பின் இலங்கையின் தேசியக் கொள்கை தொடர்பாக ஆராய்வார்.

16.3 தேசியக் கொள்கையில் செல்வாக்குச் செலுத்தியுள்ள காரணிகளைப் பகுப்பாய்வு செய்வதனூடாக சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் தேசிய கொள்கையின் போக்கை ஆராய்வார்.

## கற்றற் பேறுகள்

- சர்வதேச நாடுகளுக்கிடையில் செயற்படும் பல்வேறு அமைப்புக்களை அறிந்துகொள்வதுடன் அவற்றை வகைப்படுத்துவார்.
- சர்வதேச அமைப்புக்கள், நாடுகளுக்கிடையிலான அமைப்புக்கள் மற்றும் விசேடமான அரசாங்க சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றை விளக்குவார்.
- ஐக்கிய நாடுகள் தாபனத்தின் ஆரம்பமும் அதன் நோக்கங்களையும் தெளிவுபடுத்துவார்.
- ஐக்கிய நாடுகள் தாபனம் மற்றும் இலங்கையுடனான அதன் தொடர்புகளை விளக்குவார்.
- உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றுடன் இலங்கை கொண்டுள்ள தொடர்புகளை அறிந்து கொள்வார்.
- பிரித்தானிய பொதுநலவாய அமைப்புடனான இலங்கையின் தொடர்புகளை விளங்கிக் கொள்வார்.
- பிராந்திய அமைப்புக்களைப் பெயரிடுவார்.
- சார்க் அமைப்பின் பண்புகளை விளக்கிக் கூறுவார்.
- ஆசிய அபிவிருத்தி வங்கி தொடர்பாக அறிந்துகொள்வதுடன் அந்நிறுவனம் இலங்கையுடன் கொண்டுள்ள தொடர்புகளை விளக்குவார்.
- ஆசியான், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய நாடுகள் போன்றவற்றை அறிந்துகொள்வார்.
- பிராந்திய ஒழுங்கமைப்புக்களுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்பு பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விளங்கிக் கொள்வார்.
- உலக மட்டத்திலும் பிராந்திய மட்டத்திலுமான அரசாங்க சார்பற்ற நிறுவனங்களுக்கும் இலங்கைக்குமிடையிலான தொடர்பை விளங்கிக் கொள்வார்.

## அறிமுகம்

சர்வதேச ரீதியிலான ஒழுங்கமைப்புக்களின் ஆரம்பமும் பரம்பலும் விரைவாக வளர்ச்சியடைந்துள்ள விதத்தை இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் வந்த காலங்களில் காணமுடிகிறது. இரண்டு உலக யுத்தங்களின் போதும் சர்வதேச சமூகம் முகங்கொடுத்த சிரமங்கள், பிரச்சினைகள் போன்றவற்றை அந்தந்த நாடுகளின் அரசாங்கங்களினால் தனியாக தீர்க்க முடியாமற் போனமையும் மேலும் யுத்தத்தின் பின்னர் சர்வதேச சிவில் சேவை, தொடர்பாடல் ஊடகங்கள், போக்குவரத்து சேவைகள் போன்றவற்றில் ஏற்பட்ட வேக வளர்ச்சியும் இதற்கான காரணமாகும்.

- இந்நிலைமைகளினால் உலகம் மிகவும் சுருங்கியுள்ளது. நிலவுகைக்காக அரசுகளுக்கிடையிலான தொடர்புகளும் ஆளிடைத் தொடர்புகளும் விருத்தி யடைந்துள்ளன.

- வளர்ந்துவரும் மேற்படி நிலைமைகளின் கீழ் இலங்கைக்கு தனித்து வாழ்வதென்பது முடியாத காரியமாகும்.

- 1948 இல் பிரித்தானியரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றதன் பின்னர், சர்வதேச அரச நிறுவனங்களுடனும் சர்வதே மட்டத்திலான அரசாங்க சார்பற்ற நிறுவனங்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ள முறையை இனங்காணலாம்.

- இவ்வலகின் நோக்கமாவது, இன்றைய உலகில் வளர்ச்சியடைந்துவரும் சர்வதேச ரீதியிலான அரசாங்க சார்பான மற்றும் அரசாங்க சார்பற்ற ஒழுங்கமைப்புக்களின் தன்மைகளை இனங்காண்பதும் அவற்றுள் குறிப்பிட்ட சில ஒழுங்கமைப்புக்களுடன் இலங்கை பேணும் தொடர்பை இனங்காணும் திறனுமாகும்.

## பாட விடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்

- நாடுகளுக்கிடையிலான அமைப்புக்களை சர்வதேச அமைப்புக்கள் எனவும் அழைப்பர். சர்வதேச அமைப்புக்களை, சர்வதேச அரசாங்க சார்பான அமைப்புக்கள் எனவும் சர்வதேச அரசாங்க சார்பற்ற அமைப்புக்கள் எனவும் இருவகைப்படுத்துவர். சர்வதேச ரீதியிலான அரசாங்க சார்பான நிறுவனங்கள் அரசுகள் ஒன்றிணைந்து உருவானவையாகும். சர்வதேச ரீதியிலான அரசாங்க சார்பற்ற நிறுவனங்கள், நபர்கள் ஒன்றிணைவதன் மூலம் உருவானவையாகும். இவ்வாறான சர்வதேச ரீதியிலான அரசாங்க சார்பான அமைப்புக்கள் 1874 இன் பர்லின் ஒப்பந்தத்தின் கீழ் நிறுவப்பட்ட சர்வதேச அஞ்சல்/ தபால் சங்கங்கள் ஆரம்பம் வரை நீண்டு செல்கிறது.

- அதே சமயம் சர்வதேச ரீதியிலான அரசாங்க சார்பற்ற அமைப்புக்களின் ஆரம்பம் 1864 இல் ஜெனிவா சம்மேளத்தின் கீழ் நிறுவப்பட்ட செஞ்சிலுவை சங்கம் வரை நீண்டு செல்கின்றது.

- இவ்வாறு நிறுவப்பட்ட நாடுகளுக்கிடையிலான அமைப்புக்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.




- இவற்றுள் இலங்கையுடன் தொடர்புடைய உலக மட்ட மற்றும் பிராந்திய மட்ட சர்வதேச அரசாங்கம் சார்ந்த அமைப்புக்கள் சில பற்றியும் உலக மட்ட மற்றும் பிராந்திய மட்ட, சர்வதேச மட்ட அரசாங்க சார்பற்ற அமைப்புக்கள் பற்றியும் கலந்துரையாடுவதன் மூலம், இலங்கைக்கும் மேற்படி அமைப்புக்களுக்கும் இடையில் நிலவும் தொடர்புகளின் தன்மையை இனங்காணலாம்.

- சர்வதேச அமைப்புக்கள், (International Organizations) சர்வதேச அரசியல் களத்தில் வளர்ச்சியடைந்து, அவை சர்வதேச தொடர்புகளினுள் வலுவான காரணியொன்றாக மாறியுள்ளமைக்கும் ஏதுவாகிய விடயங்களை இனங்காணலாம்.

1. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் முன்னரும் பின்னரும் ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் நடைபெற்ற குடியேற்ற நாட்டு நிலைமையிலிருந்து விடுபட்டு சுதந்திரமடைந்தமை.

2. சர்வதேச முறையில் தனியாகச் செயற்படுவதிலும் பார்க்க கூட்டாகச் செயற்படுவதன் மூலம், உயர்மட்ட பயனுறுதியைப் பெறமுடியுமென்பது இன்று சர்வதேச ரீதியில் வளர்ந்து வரும் ஒரு கருத்தாகும்.

3. சர்வதேச ரீதியில் போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் துறைகளில் ஏற்பட்ட விரைவான வளர்ச்சி.

4. நாடுகளுக்கிடையிலான பிரச்சினைகளையும் நெருக்கடிகளையும் ஒரு நாட்டினால் தனியாக தீர்த்துக்கொள்ள முடியாமை.

5. இரண்டு உலக யுத்தங்களும் நிலவிய காலகட்டத்தில் அரசு மைய பாதுகாப்புக் கொள்கை வெற்றியடையவில்லை எனவும் பரந்து காணப்படுகின்ற போர்ப்பலத்தை ஒன்று குவித்து பொது எதிரிக்கெதிராக வெற்றிகரமாக முகங்கொடுக்க முடியுமென்பதை தேசிய அரசுகள் விளங்கிக் கொள்ளல்.

6. இரண்டு உலக யுத்தங்களின்போதும் அனுபவித்த கொடுமைகள் மீண்டும் உருவாகாதிருக்க சமாதானத்தை உருவாக்குவதில் அவசியம் என விளங்கிக் கொள்ளல்.

7. பல பகுதியினருடனும் இராஜதந்திர தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளல்.

8. மோதல்களின்றி சமாதானமாக நெருக்கடிகளைத் தீர்த்தல் அவசியம் என ஏற்றுக்கொள்ளல்.

இன்று சுயாதீன அரசுகள், அரசியல் சமூக பொருளாதார நோக்கங்களை மாத்திரமல்லாது யுத்தம் மற்றும் சமாதானம் தொடர்பாகவும் பொது நோக்கங்களை நிறைவேற்ற சுயமாகவே ஒன்றாக இணைந்து அமைப்புக்களை நிறுவும் போக்கு உள்ளது.

## உலக ரீதியிலான சர்வதேச அரசுசார் அமைப்புக்கள்
## ஐக்கிய நாடுகள் சபை

### ஆரம்பம் :

மனித வரலாறும் எங்கும் சமூக, பொருளாதார, அரசியல் காரணங்களினால் உலகில் ஆங்காங்கே, காலத்திற்குக் காலம், யுத்தங்கள் ஏற்பட்டன. மேலும் அவற்றைத் தவிர்க்க மனிதன் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டான். இதனை நோக்காகக் கொண்ட பல்வேறு நிறுவனங்களும் நிறுவப்பட்டன. 1914 - 1918 காலப்பகுதியினுள் நடைபெற்ற முதலாம் உலக மகா யுத்தத்தின் விளைவாக அவ்வாறான அமைப்பொன்று உருவாக்கப்படுவதன் தேவை வலுவாக ஏற்பட்டது. இதன் பயனாக 1920 இல் 27 அங்கத்தவர்களைக் கொண்ட சர்வதேச சங்கம் உருவாக்கப்பட்டது.

இதன் அடிப்படை நோக்கம் உலக சமாதானத்தை ஏற்படுத்துவதாக இருந்தபோதிலும் 1939 - 1945 ஆண்டுகளில் இரண்டாம் உலகப் போர் நடைபெற்றது. இதன்போது அளவிட முடியாத பௌதிக, மானிட வளங்கள் அழிந்து போயின. இதன் காரணமாக ஐக்கிய நாடுகள் சபை உருவாகியது. 1945 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் திகதியிலிருந்து யூன் 26 ஆம் திகதி வரை சென் பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற மாநாட்டில் ஐக்கிய நாடுகளின் பிரகடனம் தயாரிக்கப்பட்டது. பிரகடனத்தின் முன்னுரையில் ஐக்கிய நாடுகளின் அமைப்பை நிறுவுவதன் நோக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

- மூன்றாம் உலக யுத்தத்தை தடுத்தல்.
- அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாக்கும் மனித நேயத்தை கௌரவிக்கும், சமுதாயமுறையொன்றை உருவாக்குவதாகும்.
- ஒப்பந்தங்களுக்கும் சர்வதேச சட்டதிட்டங்களுக்கும் ஆவணங்களுக்கும் ஏற்ப செயற்பட வழிவகுக்கும் நிபந்தனைகளை உள்ளடக்குதல். மேற்படி நிபந்தனைகளை நிறைவேற்றி வாழ்க்கை நிலையை மேம்படுத்தி அதிக சுதந்திரமுள்ள சூழலில் செயற்படுவதற்குள்ள ஆற்றலை வலியுறுத்தல்.
- அவரவர் கருத்துக்களுக்கு மதிப்பளித்து சமாதானமாக வாழச் செயற்படுத்தல்.
- சர்வதேச சமாதானம், பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக, எல்லா சக்திகளையும் அதிகாரங்களையும் ஒன்றிணைத்தல். பொதுநன்மை கருதியல்லாது வேறு காரணங்களுக்காக ஆயுதப் பலத்தை பயன்படுத்தும் கொள்கையை நிராகரித்தல்.
- எல்லா இனங்களினதும் பொருளாதார, சமூக அபிவிருத்திக்காக சர்வதேச மட்டத்திலான ஏற்பாடுகளைச் செய்தல்.
- இதன்படி ஐக்கிய நாடுகள் சபையை நிறுவுவதன் அடிப்படை நோக்கம் சர்வதேச சமாதானத்தைப் பேணலாகும். உருவாக்கிய சில வருடங்களில் பொருளாதார, சமூக துறைகளின் வளர்ச்சி தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

## ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான குறிக்கோள்கள்

1. உலகம் பூராவும் சமாதானத்தைப் பேணல்.
2. இனங்களுக்கிடையே நட்புறவைப் பேணல்.
3. ஏழ்மையில் வாடும் மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தல். பட்டினி, நோய்கள், அறியாமை ஆகியற்றை இல்லாதொழித்தல். ஒவ்வொருவரினதும் உரிமைகளுக்கும் நானாவித சுதந்திரத்திற்கும் மதிப்பளித்தல், ஊக்குவித்தலுக்காக ஒற்றுமையாகச் செயற்படல்.
4. மேற்படி குறிக்கோள்களை அடைவதற்காக நாடுகளுக்கு உதவுதல்

மேற்படி நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக நாடுகளுக்கு உதவும் உரையாடல் குழு போல் செயற்படல்.

## ஐக்கிய நாடுகள் சபையின் கோட்பாடுகள்

1. எல்லா அங்கத்துவ நாடுகளுக்கும் சமமான தன்னாதிக்க அதிகாரம் உள்ளது.
2. எல்லா அரசுகளும் பிரகடனத்திற்கு கட்டுப்படுவதை பிரயோக ரீதியாக்கல்.
3. சர்வதேச ரீதியிலான மோதல்களை சமாதான ரீதியில் தீர்த்துக்கொள்ளல்.
4. ஒரு நாடு மற்றொரு நாட்டுக்கு எதிராக படைப்பலத்தை உபயோகிக்காதிருத்தலும் அவ்வாறு படைப்பலம் செலுத்துவதாக அச்சுறுத்தாதிருத்தலும்.
5. ஐக்கிய நாடுகளின் சபையை வலுவுள்ளதாக்கல், தீர்வு காணும் செயற்பாட்டுக்கு எதிராக நாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்காமையும் பிரகடனத்திற்கு ஏற்ப எடுக்கும் எந்தவொரு செயற்பாட்டுக்கும் எல்லாவித ஒத்துழைப்பையும் வழங்கலும்.
6. நாடுகளின் உள்நாட்டு நீதி, நிர்வாகத்தில் தலையிடும் அதிகாரத்தை பிரகடனத்தின் மூலம் பெற்றுத் தராதிருத்தல்.

மேற்படி குறிக்கோள்களையும் கோட்பாடுகளையும் உள்ளடக்கி வரையப்பட்ட ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தின் சட்டத்தை ஏற்று 1945 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆம் திகதி நடத்தப்பட்ட சம்மேளனத்தில் பங்குபற்றிய 50 நாடுகளின் பிரதிநிதிகள் ஒப்பமிட்டனர்.

## ஏழ்மை, நோய் மற்றும் சூழலை நோக்கமாகக் கொண்ட புத்தாயிரமாம் ஆண்டின் பிரகடனம்

2000 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நடத்தப்பட்ட புத்தாயிரமாம் ஆண்டின் சம்மேளனத்தின் போது உலகத் தலைவர்கள் பின்வரும் இலக்குகளை அடைய ஒப்புக்கொண்டனர்.

- 2015 ஆம் ஆண்டளவில் ஒரு நாளைக்கு ஒரு அமெரிக்க டொலருக்குக் குறைவாகவருமானம் பெறுபவர்களின் தொகையை பாதியாகக் குறைத்தலும் தூய குடிநீரைப் பெறமுடியாத மக்கள் தொகையைக் குறைத்தலும்.

- 2015 ஆண்டளவில் உலகிலுள்ள எல்லா ஆண் - பெண் பிள்ளைகளுக்கும் கட்டாயமாக ஆரம்பக் கல்வியை வழங்கல். எல்லா மட்டங்களிலும் கல்வியில் சம வாய்ப்பளித்தல்.

- தாய் மரண விகிதத்தை 3/4 ஆக குறைத்தலும், 5 வயதிற்குட்பட்ட சிறுவர் இறப்பு எண்ணிக்கையை 2/3 ஆல் குறைத்தலும்.

- HIV/AIDS ஏனைய நோய்கள் பரவுதலைத் தடுத்தல்.

- அநாதைப் பிள்ளைகளை HIV/AIDS இலிருந்து பாதுகாப்பதற்கு விசேட நிவாரணமளித்தல்.

- 2020 ஆண்டாகும்போது குறைந்தது 100 மில்லியன் சேரிவாசிகளின் வாழ்வில் திட்டவட்டமான வளர்ச்சியை ஏற்படுத்தல்.

- ஆண் - பெண் சமத்துவத்தைப் பேணல். ஏழ்மைக்கும் பட்டினிக்கும் நோய்கள், துன்பங்களுக்கும் எதிராக செயற்பட பெண்களைத் தூண்டுதல்.

- எல்லா பிரதேசங்களிலும் வாழும் யுவதிகளுக்கும் கௌரவமான தொழில்வாய்ப்பை பெற்றுக்கொடுக்கும் வழிமுறைகளை செயற்படுத்தலும் அபிவிருத்தி செய்தலும்.

- அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்குத் தேவையான மருந்து வகைகளைப் பெற்றுக் கொடுக்க தேவையான மருத்துவ உற்பத்தி சாலைகளை ஆரம்பித்தலும் ஊக்குவித்தலும்.

- ஏழ்மையை இல்லாதொழிக்கத் தேவையான அபிவிருத்திச் செயற்பாடுகளின்போது தனியார் துறைக்கும் சமூக அமைப்புக்களுக்கும் இடையிலான தொடர்பை வளர்த்தல்.

- புதிய தொழினுட்ப வசதி வாய்ப்புக்களை (விசேடமாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பம்) உறுதிசெய்தல்.

## அங்கத்துவம்

- ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளக் கூடியவரும்

- அங்கு அளிக்கப்படும் பொறுப்புக்களை ஏற்று செயற்பட விருப்பமுடையவர் மற்றும் திறமையுடையவர் என அமைப்பு தீர்மானிக்கும்

- சமாதான நோக்குடைய எல்லா நாடுகளுக்கும் அங்கத்துவம் உரித்தாகும்.

பாதுகாப்புச் சபையின் விதந்துரையின் அடிப்படையில் பொதுச்சபை அங்கத்துவம் வழங்கும். ஒருநாட்டின் அங்கத்துவத்தை இடைநிறுத்தும் அல்லது அங்கத்துவத்தை நீக்கும் அதிகாரம் பிரகடனத்தில் தரப்பட்டுள்ளபோதிலும், இதுவரை அவ்வாறு செய்யப்படவில்லை.

ஐக்கிய நாடுகள் சபையில் தற்போது 192 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. 1945 ஆம் ஆண்டில் பிரகடனம் வெளியிடப்பட்ட சமயத்தில் அதில் ஒப்பமிட்ட 54 நாடுகளும் ஆரம்ப அங்கத்தவர்கள் எனப்படுவர். போலாந்து சம்மேளனத்தில் பங்குபற்றாத போதிலும் முதலில் ஒப்பமிட்டது. அதன் பின்னர் ஒப்பமிட்ட நாடுகள் இரண்டாம் வகையினராகக் கருதப்படுவர்.

எந்தவொரு அங்கத்துவ நாடும் இன்றுவரை ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து விலகவில்லை. மலேசியாவுடன் ஏற்பட்ட பிணக்கு காரணமாக இந்தோனேசியா 1965 இல் ஐக்கிய நாடுகளிலிருந்து தற்காலிகமாக வெளியெறிய போதிலும் 1966 இல் மீண்டும் இணைந்து கொண்டது.

# ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவன ரீதியான அமைப்பு

ஐக்கிய நாடுகள் சபை 6 பிரதான நிறுவனங்களின் கீழ் ஒழுங்கமைந்துள்ளது. ஆரம்ப பிரகடனத்தின் மூலம் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

1. பொதுச்சபை
2. பாதுகாப்புச் சபை
3. பொருளாதார சமூக சபை
4. நம்பிக்கை பொறுப்பாளர் சபை
5. சர்வதேச நீதிமன்றம்
6. செயலாளர் நாயகம்

## ◈ பொதுச்சபை

ஐக்கிய நாடுகளின் அங்கத்துவ நாடுகள் கலந்துரையாடும் பிரதான சபை பொதுச்-சபையாகும். எல்லா அங்கத்துவ நாடுகளது பிரதிநிதிகள் அதில் கலந்துகொள்வார்கள். ஒரு அங்கத்தவருக்கு ஒரு வாக்கு உரித்தாகின்றது. இன்று இங்கு 192 அங்கத்துவ நாடுகள் உள.

- பொதுச் சபையின் பணிகளை இலகுபடுத்துவதற்காக 6 குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.
- நிராயுதபாணியாக்கல், சர்வதேச பாதுகாப்பு, அரசியல் பணிகள் தொடர்பான குழு.
- பொருளாதார நிதிக்குழு.
- சமூக, மனிதநேய, கலாசார விடயங்கள் தொடர்பான குழு.
- குடியேற்றவாதத்திற்கு எதிரான குழு.
- சட்ட ரீதியான விடயங்கள் தொடர்பான குழு.

எந்தவொரு அங்கத்துவ நாட்டுக்கும் மேற்படி குழுவில் அங்கத்துவம் பெறலாம். எல்லா குழுவிற்கும் தலைவர் ஒருவரும் செயலாளர் ஒருவரும் இருக்கின்றனர்.

## ◈ பாதுகாப்புச் சபை

பாதுகாப்புச் சபை சீனா, பிரான்சு, ரஷ்யா, பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய ஐந்து நிரந்தர அங்கத்தவர்களைக் கொண்டது. மேலும் இரண்டு வருட பதவிக் காலத்துக்கு பொதுச் சபையினால் தேர்ந்தெடுக்கப்படும் 10 உறுப்பினர்களையும் கொண்டது. ஐக்கிய நாடுகள் சபையின்பிரகடனத்தின்படி பாதுகாப்புச் சபையின் பிரதான பணி சர்வதேச நாடுகளின் சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுவதாகும்.

## ◈ பொருளாதார, சமூக சபை

ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக சபை "ஐக்கிய நாடுகள் சபை" என அழைக்கப்படும். இங்கு 54 அங்கத்தவர்கள் உள்ளனர். 3 ஆண்டு பதவிக்காலம் உள்ளது. ஒரு வருடத்திற்கு 1/3 அங்கத்தவர்கள் நியமிக்கப்படுவார்கள். ஒரு அங்கத்தவருக்கு ஒரு வாக்கு உரித்தாகும். பொதுவான பெரும்பான்மை வாக்கு பெறும் முறையில் அங்கத்துவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

### ◈ நம்பிக்கையாளர் பொறுப்புச் சபை

இச்சபைக்கு ஒப்படைத்துள்ள பிரதான பணி பொறுப்பளிக்கப்பட்ட பிரதேசத்தை நிர்வகிப்பதை மேற்பார்வை செய்தலாகும்.

பொறுப்பளிக்கப்பட்ட பிரதேசத்தின் :

- மக்களின் அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
- சுய நிர்வாக ஆற்றலைப் பயிற்றுவித்தல்.
- சுயாதிபத்தியத்தை அண்மிக்க படிப்படியாக பயிலுதல்.

நம்பிக்கை நிதிய சபையின் பிரதான குறிக்கோள்கள் பின்வருமாறு :

பொதுச் சபையின் கீழ் இயங்கும் ஒரு அமைப்பு இதுவாகும்.
உபாய ரீதியான முக்கிய விடயங்கள் பாதுகாப்பு சபையின் கீழ் இயங்கும்.

### ◈ சர்வதேச நீதிமன்றம்

பொதுச் சபையினதும் பாதுகாப்புச் சபையினதும் சுதந்திர வாக்குகளினால் தேர்ந்தெடுக்கப்பட்ட 15 நீதிபதிகளினால் நீதிமன்றம் அமைந்துள்ளது. உலகின் பிரதான நீதிமுறைகளை பிரதிநிதிப்படுத்தும் வகையில் இந்நீதிமன்றத்தை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒரு நாட்டிலிருந்து இரண்டு அங்கத்தவர்களை நியமிக்க முடியாது. ஒரு நீதிபதியின் சேவைக்காலம் 9 ஆண்டுகளாகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான நீதி அமைப்பு சர்வதேச நீதிமன்றமாகும். நீதிமன்றமானது அதன் யாப்பின் எல்லாப் பகுதியினருக்கும் திறந்ததாகும். ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவம் பெறாத நாடொன்றுக்கும், பாதுகாப்பு சபையின் விதந்துரைப்பின் பேரில் பொதுச் சபைகளால் நிச்சயிக்கும் விசேட நிபந்தனைகளின் கீழ் யாப்பின் பங்குதாரராக முடியும்.

### ◈ செயலாளர் காரியாலயம்

ஐக்கிய நாடுகளின் பிரதான காரியாலயம் இதுவாகும். இதன் தலைவர் பாதுகாப்புச் சபையின், பரிந்துரையின் கீழ் ஐந்தாண்டு கால பதவிக் காலத்துக்கு பொதுச்சபையினால் நியமிக்கப்படுவார். ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தின்படி இவரை பிரதான நிருவாக அதிகாரி என அழைப்பர்.

- சர்வதேச பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என செயலாளர் கருதும் யாதொன்றையும் பாதுகாப்பு சபையின் கவனத்திற்குக் கொண்டுவரல்.

- பாதுகாப்பு சபை, பொதுச்சபை அமைப்பின் ஏனைய நிறுவனங்கள் மூலம் அவருக்கு பொறுப்பு வழங்கும் பணிகளை நிறைவேற்றுதல்.

- சர்வதேச நெருக்கடி உருவாகியுள்ள, மேற்படி நிலைகள் தீவிரமடைந்துள்ள மற்றும் பரவியுள்ள சந்தர்ப்பங்களில் அவற்றை தவிர்ப்பதற்காக வெளிப்படையாகவும் தனிப்பட்ட ரீதியிலும் நேரடி நடவடிக்கை எடுத்தல்.

ஆகியன செயலாளர் நாயகத்தின் பணிகளாகும்.

### ◈ பணிகள்

ஐக்கிய நாடுகள் சபையின் பரந்த பணிகளை 5 பிரதான புலங்களினூடாக தொகுப்பார்.

- சர்வதேச பாதுகாப்பும் சமாதானத்திற்குமான வேலைகள்.
- பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான பணிகள்.
- மனித உரிமைகளுக்கான பணிகள்.
- குடியேற்ற வாதக் கொள்கையைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள்.
- சர்வதேச சட்டங்களுக்கான பணிகள்.

### ◈ ஐக்கிய நாடுகள் சபையும் இலங்கையும்

ஐக்கிய நாடுகள் சபையும் அதனோடு இணைந்த நிறுவனங்களும் ஒரு நாட்டில் செயற்படுவது அந்த நாட்டினதும் தேசிய நிறுவனங்களினதும் கோரிக்கைகளை அனுசரித்தாகும்.

1955 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி இலங்கை ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவம் பெற்றது. இதன் பயனாக இலங்கை சுயாதீனமானதும் சுதந்திரமானதுமான நாடாக சர்வதேச மதிப்பிற்கு ஆளானது. அது மாத்திரமல்லாது ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு உதவிகளும் ஏனைய சிறப்பு சேவைகளும் இலங்கைக்கு உரிமையானது.

ஐக்கிய நாடுகள் சபையின், நிபுணத்துவ அங்கத்துவ சபையான சர்வதேச தொழிலாளர் அமைப்பு, ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்புக்கள், சர்வதேச விமான சேவை அமைப்புக்கள், உலக சுகாதார நிறுவனம் ஆகியற்றுடன் 1954 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி இலங்கை ஒப்பந்தம் செய்துகொண்டது. இதன் முக்கிய நோக்கம் இலங்கையின் பொருளாதார, சமூக அபிவிருத்திக்காக ஐக்கிய நாடுகள் சபையின் உதவியைப் பெற்றுககொள்ளலாகும்.

மேற்படி ஒப்பந்தத்தின் முக்கிய குறிக்கோள் இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்காக ஐக்கிய நாடுகள் சபையின் உதவியைப் பெற்றுக்கொள்ளலாகும். இவ்வொப்பந்தத்தின் கீழ் ஒப்புகொண்ட செயற்பாடுகள் பற்றிய வேலைத்திட்டங்களை ஒழுங்குசெய்தல், அதன் அனுமதியின்படி இலங்கை அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியதாக இருந்தது. இதன்படி இலங்கைக்கு பின்வரும் வகையிலான உதவிகள் கிடைத்தன.

1. அரசுக்கு உதவுவதற்கும் அறிவுரை வழங்குவதற்கும் நிபுணத்துவ சேவைகளின் ஒத்தாசையை பெற்றுக்கொடுத்தல்.

2. தேர்ந்தெடுத்த பிரதேசங்களில், செயலமர்வுகள், பயிற்சிநெறி வேலைத்திட்டங்கள், கண்காட்சிகள் வேலைத்திட்டங்கள் மற்றும் அதற்குத் தேவையான முற்பணிகள் போன்றவற்றை ஒழுங்குசெய்தல்.

3. புலமைப் பரிசில் பிரதேசங்களில், உயர் புலமைப் பரிசில் வழங்கல்.

4. தேர்ந்தெடுத்த பிரதேசங்களில் முன்மாதிரி, ஆலோசனைத் திட்டங்கள் போன்றவற்றைக் குறிப்பிடுவார்.

5. அரசினது ஐக்கிய நாடுகள் சபையினதும் அந்நியோன்ய அங்கீகாரத்துடன் கைத்தொழில் உதவி வழங்கல்.

இதன் பின்னர் இலங்கைக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார உதவிகளுக்கு மேலதிகமாக நிபுணத்துவ அறிவைப் பெறும் வாய்ப்பும் ஏற்பட்டது.

இன்று ஐக்கிய நாடுகள் நிலையைச் சேர்ந்த 19 நிறுவனங்கள் இலங்கையினுள் செயற்படுகின்றன. அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களும் அமைப்புக்களும் (யுனெஸ்கோ போன்ற) காரியாலயங்கள் இலங்கையில் இல்லாத போதிலும் அரச நிறுவனங்கள் ஊடாக அல்லது ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனங்கள் ஊடாக அவற்றின் வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

ஐக்கிய நாடுகளின் தொகுதியானது (The United Nations System) ஐக்கிய நாடுகளின் செயலாளர் காரியாலயம், ஐக்கிய நாடுகளின் வேலைத்திட்டங்களும், நிதியங்களும் மற்றும் விசேட நிறுவனங்கள் ஆகியன ஒன்று சேர்ந்து உருவானதாகும்.

### ◈ ஐக்கிய நாடுகள் செயலாளர் காரியாலயம்

- உள்ளக தாமத மற்றும் குறைபாட்டு சேவைக் காரியாலயம் (OIOS)
- சட்ட அலுவலுக்கான பணியகம் (OLA)
- அரசியல் செயற்பாடுகளுக்கான திணைக்களம் (DPA)
- நிராயுதபாணியாக்கும் செயற்பாடுகளுக்கான திணைக்களம் (DDA)
- சமாதான செயற்பாடுகளுக்கான திணைக்களம் (DPKO)
- மனிதநேயச் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் காரியாலயம் (OCHA)
- பொருளாதார சமூக செயற்பாடுகளுக்கான திணைக்களம் (DESA)
- பொதுச்சபை மற்றும் சம்மேளன முகாமைத்துவ திணைக்களம் (DGACM)
- பொதுத் தகவல்கள் திணைக்களம் (DPI)
- முகாமைத்துவ திணைக்களம் (DM)
- ஈராக் வேலைத்திட்ட காரியாலயம்
- ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு காரியாலயம் (UNSECOORD)

### ◈ பிராந்திய ஆணைக் குழுக்கள்

- ஆபிரிக்கா தொடர்பான பொருளாதார ஆணைக்குழு (ECA)
- ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழு (ECE)
- இலத்தீன் அமெரிக்க மற்றும் கரிபியன் பொருளாதார ஆணைக்குழு (ECLAC)
- ஆசிய பசுபிக் பொருளாதார சமூக ஆணைக்குழு (ESCAP)
- மேற்காசிய பொருளாதார சமூக ஆணைக்குழு (ESCWA)

### ◈ ஐக்கிய நாடுகளின் நியாயாதிக்கச் சபைகள்

- பழைய யூகோஸ்லாவியா தொடர்பான சர்வதேச குற்ற நியாயாதிக்க சபைகள் (ICTY)
- ருவாண்டா தொடர்பான சர்வதேச நியாயாதிக்க சபை (ICTR)

## ◈ ஐக்கிய நாடுகளின் வேலைத்திட்டங்களும் வேறு சபைகளும்

- வணிகம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் சம்மேளனம். (UNCTAD)
- சர்வதேச வணிக மையம். (ITC)
- போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் பணிமனை. (UNODC)
- ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் வேலைத்திட்டம் (UNEP)
- ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டம். (UNDP)
- பெண்களுக்கான ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியம். (UNIFEM)
- ஐக்கிய நாடுகளின் ஊழியர்கள் (UNV)
- ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் (UNFPA)
- அகதிகளுக்கான ஐ. நா. வின் உயர் ஸ்தானிகர் காரியாலயம். (UNHCR)
- ஐ.நா. சிறுவர் நிதியம் (UNICEF)
- உலக உணவுத்திட்டம் (WFP)
- மத்திய கிழக்கு பலஸ்தீன் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிவாரண சேவை மற்றும் வேலை நிறுவனம் (UNRWA)
- மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயம் (பணிமனை) (OHCHR)
- ஐக்கிய நாடுகளின் குடியிருப்பு வேலைத்திட்டம். (UN-Habitat)
- ஐக்கிய நாடுகள் செயற்றிட்ட சேவை பணிமனை (UNOPS)
- ஐக்கிய நாடுகளின் பல்கலைக்கழகம் (UNU)
- பெண்கள் அபிவிருத்திக்கான சர்வதேச ஆராய்ச்சி மற்றும் பயிற்சி தாபனங்கள் (INSTRAW)
- ஐக்கிய நாடுகள் பிராந்தியத்தினுள் நடைபெறும் குற்றச் செயல்கள் மற்றும் நியாயாதிக்கங்கள் பற்றிய ஆராய்ச்சி நிலையம். (UNICR)
- ஐக்கிய நாடுகளின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (UNITAR)
- ஐக்கிய நாடுகளின் சமூக அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (UNRIDS)

## ◈ வேறு சிறப்பு நிறுவனங்கள்

- சர்வதேச தொழிலாளர் அமையம் (ILO)
- ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய அமையம் (FAO)
- ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அமையம் (UNESCO)
- உலக சுகாதார தாபனம் (WHO)
- உலக வங்கிக் குழு (World Bank Group)
- மீளளித்தல் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி. (IBRD)
- சர்வதேச அபிவிருத்தி சங்கம் (IDA)
- சர்வதேச நிதி நிறுவனம் (IFC)
- பல்பக்க முதலீட்டுப் பாதுகாப்பு நிறுவனம் (MIGA)
- பல்பக்க முதலீட்டு நெருக்கடிகளைத் தீர்க்கும் நிலையம் (ICSID)
- சர்வதேச நாணய நிதியம் (IMF)
- சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு (ICAO)
- சர்வதேச கப்பல் போக்குவரத்து அமைப்பு (IMO)
- சர்வதேச மின்னஞ்சல் சேவை சங்கம் (ITU)
- அகில தபால் சங்கம் (UPU)
- உலக காலநிலை அமையம் (WMO)
- உலக அறிவுசார் சொத்துக்களின் அமைப்பு (WIPO)

- விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD)
- ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தி அமையம் (UNIDO)
- சர்வதேச அணுசக்தி நிறுவனம் (IAEA)
- அணு ஆயுத உற்பத்தியை முழுமையாகத் தடைசெய்யும் ஒப்பந்தத்தை ஒழுங்குசெய்யும் ஆரம்ப ஆணைக்குழு. (CTBTO)
- இரசாயன ஆயுதத் தடைக்கான அமையம் (OPCW)
- உலக உல்லாசப் பயண ஒழுங்கமைப்பு (WTO)
- உலக வர்த்தக அமைப்பு (WTO)

**மேற்படி எல்லா அமைப்புக்கள் பற்றியும் மாணவர் பருமட்டான விளக்கத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.**

***குறிப்பு :-*** **ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், சர்வதேச நாணய நிதியம், புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி தொடர்பான சர்வதேச வங்கி (உலக வங்கி), மனித உரிமைகள் ஆணைக்குழு, ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞான, கலாசார அமைப்பு ஆகியன பற்றி விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.**

- **இற்றைப்படுத்தப்பட்ட (updated) தகவல்களை மாணவருக்குப் பெற்றுக்கொடுக்க ஆசிரியர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.**

## தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்புக்கான அமைப்பு

ஆரம்பம் : 1985 இல் டிசம்பர் 8 ஆம் திகதி வங்காள தேசத்தின் தலைநகரான டாக்கா நகரில் ஆரம்பமாகியது.

நோக்கம் :
- பிராந்திய பொருளாதார, சமூக மேம்பாடும் கலாசார அபிவிருத்தியை விரைவுபடுத்தலும்.
- வலய மக்களின் நலன்புரி வேலைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் அவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தல்.
- அங்கத்துவ நாடுகளின் ஒத்துழைப்பு மற்றும் நம்பிக்கையை மேம்படுத்தல்.
- பொருளாதார, சமூக, கலாசார மற்றும் விஞ்ஞான துறைகளின் உயிரோட்டமான ஒத்துழைப்பையும் அந்நியோன்னிய உதவிகளையும் சேவைகளையும் விருத்தி செய்தல்.
- பொதுவான முக்கியத்துவமுள்ள விடயங்கள் தொடர்பாக சர்வதேச சந்திப்புக்களின்போது அமைப்பின் அங்கத்துவர் மத்தியில் ஒத்துழைப்பை வலிமைப்படுத்தல்.
- ஒத்த நோக்கத்தையும் இலக்குகளையும் கொண்ட சர்வதேச மற்றும் பிராந்திய அமைப்புக்களுடன் ஒற்றுமையாகச் செயற்படல்.

- அங்கத்துவம் : வங்காளதேசம், பூட்டான், இந்தியா, மாலைத்தீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் இவ்வமைப்பில் அங்கத்துவம் வகிக்கின்றன.

- ஒழுங்கமைப்பின் பொறிமுறை : மூன்று பகுதிகளைக் கொண்டது.
  1. சார்க் சம்மேளனம்
  2. செயலாளர் காரியாலயம்
  3. வேறு குழுக்கள்

மேற்படி நிறுவனங்கள் பற்றிச் சுருக்கமாக விவரிக்க வேண்டும்.
இந்நாடுகளுக்கிடையே ஏற்படுத்திக் கொண்டுள்ள வர்த்தக ஒப்பந்தங்கள்.

1. தெற்காசிய விருப்புரிமை வர்த்தக ஒப்பந்தம் (SAPTA)
2. தெற்காசிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (SAFTA)

## தென்கிழக்காசிய நாடுகளின் சங்கம் (ASEAN) (ASSOCIATION OF SOUTH EAST ASIAN NATIONS)

**ஆரம்பம் :** 1967 இல் தாய்லாந்தின் பங்கொக் நகரில் ஆரம்பிக்கப்பட்டது. சீனாவின் சவாலுக்கு முகங்கொடுக்க இது ஆரம்பிக்கப்பட்ட போதிலும் சீனா - அமெரிக்க தொடர்புகள் அதிகரித்தவுடன் நிலைமை மாற்றமடைந்தது.

**நோக்கம் :**

- கூட்டு முயற்சியினூடாக பிராந்தியத்தின் பொருளாதார, சமூக முன்னேற்றத்தையும் கலாசார அபிவிருத்தியையும் விரைவுபடுத்தல்.
- ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தின்படியும் வலயத்தின் நாடுகளுக்கிடையே ஏற்படுத்தும், சமாதானத் தொடர்பினூடாக வலயத்தின் சமாதானத்தையும் உறுதிப்பாட்டு நிலையையும் வளர்த்தல்.
- பொருளாதார, சமூக, கலாசார, தொழினுட்ப விஞ்ஞானம் மற்றும் நிருவாகம் ஆகிய துறைகளில் ஒற்றுமையான ஒத்துழைப்பும், அந்நியோன்னிய உதவியையும் வளர்த்துக் கொள்ளல்.
- கல்வி மற்றும் தொழில்சார் சேவைகளையும் விஞ்ஞானம் மற்றும் நிர்வாகம் ஆகிய துறைகளில் பயிற்சியையும் ஆராய்ச்சிகளையும் நடத்துதல் மூலம் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு வழங்குதல்.
- அங்கத்துவ நாடுகளின் விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் மற்றும் போக்குவரத்து தொடர்பான செயற்பாடுகளை வளர்த்தல், மக்களின் வாழ்க்கை மட்டத்தை உயர்த்த ஒற்றுமையாகச் செயற்படல்.
- தென்கிழக்கு ஆசியா தொடர்பான ஆராய்ச்சிகளை வளர்த்தல்.
- ஏனைய சர்வதேச அமைப்புக்களுடன் ஒற்றுமையாகச் செயற்படல்.

**அங்கத்துவம் :** இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து, பிலிப்பைன், சிங்கப்பூர் ஆகிய நாடுகள் ஆரம்பகால அங்கத்துவ நாடுகளாகும். 1984 இல் புருனை இராச்சியமும் அங்கத்துவம் பெற்றது.

## கட்டமைப்பின் பொறிமுறை

- அமைச்சர்களின் சம்மேளனம் அங்கத்துவ நாடுகளின் அமைச்சர்களை உள்ளடக்கியது. 5 வருடங்களுக்கு ஒருமுறை கூட்டம் நடைபெறும். செயற்குழு மூலம் அன்றாட நடவடிக்கைகள் நடாத்தப்படும். வர்த்தகம், வங்கிச் செயற்பாடுகள், தொடர்பாடல், விவசாயம் மற்றும் வனவளங்கள் தொடர்பாக செயற்பட நிலையான குழு ஒன்றும் உள்ளது. இதன் தலைமைச் செயலாளர் அலுவலகம், 1967 ஆம் ஆண்டு இந்தோனேசியாவின் ஜகார்த்தா நகரில் நிறுவப்பட்டது.

- 1970 ஆம் தசாப்தத்தில் இந்து சமுத்திர சமாதான வலய ஆலோசனைக் குழு உதவி பெறுவதற்காகவும் ஏற்றுமதிக்காக, நல்ல விலையைப் பெறுவதற்காக இலங்கை அங்கத்துவம் கோரிய போதிலும் அங்கத்துவம் கிடைக்கவில்லை.

## பிரித்தானிய பொதுநலவாயம்

**ஆரம்பம் :** பிரித்தானிய சாம்ராஜ்யத்திற்கு அடிமை நாடுகளாக இருந்து பின்னர் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற நாடுகளுடன் தொடர்ந்தும் உறவைப் பேணும் நோக்கம் இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் பிரித்தானியாவுக்கு இருந்தது. இதன்படி 1944 இல் பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா, நியுசிலாந்து, இந்தியா, நொடேசியா, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகள் ஒன்றுசேர்ந்து இவ்வமைப்பை நிறுவின.

**நோக்கங்கள் :**

- பொருளாதார, அரசியல், கலாசார துறைகளில் அந்நியோன்ய ஒத்துழைப்பை வளர்த்தல்.
- தொழினுட்ப அறிவைப் பகிர்ந்துகொள்ளல்.
- புலமைப் பரிசில்களைப் பகிர்ந்துகொள்ளல்.
- அங்கத்துவ நாடுகளுக்கிடையே வர்த்தகத் தொடர்புகளை வளர்த்தல்.

**அங்கத்துவம் :** பிரித்தானியாவின் குடியேற்ற நாடாகவிருந்து சுதந்திரமடைந்த நாடுகளுக்கு இவ்வமைப்பில் அங்கத்துவம் பெறமுடியும். எனினும் அவ்வாறு சுதந்திரம் பெற்ற எல்லா நாடுகளும் அங்கத்துவம் பெற்றுக்கொள்ளவில்லை.மேலும் எந்தவொரு நாட்டிற்கும் அங்கத்துவத்திலிருந்து விலகிக் கொள்ளவும் முடியும். இன்று இவ்வமைப்பில் 48 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன.

- கட்டமைப்பும் பொறிமுறையும்
  இங்கு மூன்று நிறுவனங்கள் உள்ளன.

i. அரசுத் தலைவர்களின் சம்மேளனம்.
   அங்கத்துவ நாடுகளின் அரசுத் தலைவர்கள் இதில் அங்கத்துவம் வகிப்பர். இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அவர்கள் ஒன்றுகூடுவார்கள்.

ii. அமைச்சர்கள் மட்டத்திலும் அரச அதிகாரிகள் மட்டத்திலுமான கூட்டங்கள் - அரச தலைவர்களின் முடிவுகளைச் செயற்படுத்த வருடத்திற்கு ஒருமுறை ஒன்றுகூடுவார்கள்.

iii. செயலாளர் அலுவலகம்.

## பொதுநலவாயமும் இலங்கையும்

சுதந்திரம் பெற்றவுடன் இலங்கை இவ்வமைப்பில் அங்கத்துவம் பெற்றது. இவ் அங்கத்துவம் இன்றுவரை உள்ளது. பொதுநலவாயத்தின் எல்லா கூட்டங்களிலும் இலங்கை பங்குபற்றியுள்ளது.

இலங்கை பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கும் பொதுநலவாயத்தின் உதவியைப் பெற்றுள்ளது.

*உதாரணம் :*

1. வலுசக்தி செயற்றிட்டங்களுக்காக.
2. வனவள அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்காக.
3. கைத்தொழில் அபிவிருத்திக்கான தொழினுட்ப அறிவு.
4. புலமைப்பரிசில் உதவித் திட்ங்கள்.

## ஆசிய அபிவிருத்தி வங்கி
## (Asian Development Bank)

ஆரம்பம் : ஆசிய மற்றும் தூர கிழக்கு பிராந்தியத்தைச் சேர்ந்த பெரும்பாலான நாடுகள் வளர்ந்து வரும் நாடுகளாகும். அவர்கள் முகங்கொடுக்கும் பிரதான பிரச்சினைகளாக மூலதன பற்றாக்குறை, தொழினுட்ப அறிவின்மை ஆகியனவாகும். இப்பிரச்சினைகள் பற்றி 1963 இல் நடத்தப்பட்ட ஆசிய மற்றும் தூர கிழக்கு நாடுகளின் நிதி அமைச்சர்களின் மகாநாட்டில் கலந்துரையாடப்பட்டது. அதன் பயனாக 1965 டிசம்பர் மாதத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி நிறுவப்பட்டது. அதன் சட்டபூர்வ ஆரம்ப திகதியாக 1966 டிசம்பர் 19 ஆம் திகதியே கருதப்படுகின்றது.

**நோக்கம் :**

- பிராந்தியத்திலுள்ள அபிவிருத்தி குறைந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கான நிதிவசதிகளை ஏற்பாடு செய்தல்.
- அங்கத்துவ நாடுகளின் அபிவிருத்தி திட்டங்களுக்கிடையே தொடர்பைப் பேணல்.
- தேவையான தொழினுட்ப வசதிகளை வழங்கல்.

**அங்கத்துவம் :** தற்போது 48 நாடுகள் அங்கத்துவம் பெற்றுள்ளன. அவற்றுள் 32 நாடுகள் ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளாகும். 15 நாடுகள் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளாகும். ஆகவே இதன் அங்கத்துவம் ஆசிய நாடுகளுக்கு வெளியேயும் பரவியுள்ளது.

## ஒழுங்கமைப்பின் பொறிமுறை

- இங்கு அதிபதி சபையொன்றும் பணிப்பாளர் சபையொன்றும் தலைவர் ஒருவரும் அடங்குவர்.
- அங்கத்துவ சபையினால் நியமிக்கப்படுகின்ற பிரதான அதிபதிகளினாலும் மேலதிக அதிபதிகளினாலும் அதிபதிகள் சபை உருவாகியுள்ளது. வருடத்திற்கொருமுறை இச்சபை கூடும். கூட்டங்களுக்கு நிதி அமைச்சர்கள், பிரதி நிதியமைச்சர்கள், மத்திய வங்கி ஆளுநர்கள் ஆகியோர் பங்குபற்றுவர். அங்கத்துவ நாடுகளின் பங்களிப்பிற்கேற்ப வாக்குப் பலம் அமையும்.
- பணிப்பாளர் சபை 12 அங்கத்தவர்களைக் கொண்டது.
  அதில் 8 பேர் பிராந்தியத்திலிருந்தும் ஏனைய 4 பேரும் வெளி அங்கத்தவர்களாவர். பதவிக்காலம் 2 ஆண்டுகளாகும். தேவைக்கேற்றவாறு கூட்டங்கள் நடைபெறும்.
- தலைவர்கள், அதிபதிகள் சபையினால் நியமிக்கப்படுவார். அதிபதிகள் சபையையோ, பணிப்பாளர் சபையையோ சேராத ஒருவர் நியமிக்கப்பட்டால் பதவி நிலை அடிப்படையில் குறித்த இரண்டு நிறுவனங்களினதும் பணிப்பாளர் சபையினதும் அங்கத்துவம் கிடைக்கும் பதவிக்காலம் 5 வருடங்களாகும்.

## ஆசிய அபிவிருத்தி வங்கியும் இலங்கையும்

- இலங்கையும் இதில் ஒரு அங்கத்துவ நாடாகும்.
- இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள உதவிகளுட் சில :
  1. போவன்தன்ன நீர்மின் உற்பத்தி நிலையம்
  2. சபுகஸ்கந்த யூரியா உர உற்பத்தி செயற்றிட்டம்
  3. இலங்கையின் மேற்குக் கடற்கரை மீன்பிடி தொழில் அபிவிருத்தி
  4. கிரிந்த ஓயா அபிவிருத்தித் திட்டம்
  5. செனகல, கல்ஓயா சீனி கைத்தொழில் அபிவிருத்தி
  6. மீன்பிடி துறைமுக அபிவிருத்தி
  7. பல்லாண்டு பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம்
  8. சுனாமி அனர்த்தத்திற்கு ஆளாகியோரை மீளக் குடியமர்த்தும் செயற்றிட்டத்துக்கு 157 மில்லியன் டொலரைப் பெற்றுக்கொடுத்தல்.
  9. வடக்கு, கிழக்கு மக்களை மீண்டும் கட்டியெழுப்பும் மற்றும் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம். இதனடிப்படையில் அவர்களை மீளக் குடியமர்த்தவும் அவர்களது அடிப்படை வசதிகளை நிறைவேற்றவும் உதவுதல். (North East Community Restoration and Development Project)

## ஐரோப்பிய பொருளாதார சமூகம்
(European Economic Community)

1952 இல் நிறுவப்பட்ட ஐரோப்பிய நிலக்கரி மற்றும் உருக்கு ஆணைக்குழு 1957 இல் ஏற்படுத்தப்பட்ட உரோமாபுரி ஒப்பந்தம், ஏனைய அமைப்புக்கள் ஒன்றுசேர்ந்து 1957 மார்ச் 22 ஆம் திகதி ஐரோப்பிய பொருளாதார சமூகம் நிறுவப்பட்டது. இதனைப் பொதுவாக ஐரோப்பிய பொருளாதார சமூகம் என அழைப்பர்.

**நோக்கம் :**

1. அங்கத்துவ நாடுகளிடையே பொதுச்சந்தையொன்றை ஏற்படுத்தல்.
2. அங்கத்துவ நாடுகளிடையே சமநிலையான அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
3. ஒப்பந்தத்தின் பிரகாரம் 10 ஆண்டுகளில் அங்கத்துவ நாடுகளிடையே ஏற்றுமதிஇறக்குமதிக்கான தீர்வையை நீக்குதல்.
4. வர்த்தக நடவடிக்கைகளின்போது அங்கத்துவ நாடுகள் ஒரே பொருளாதார வலயமாகச் செயற்படல்.
5. அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களின்போது அங்கத்துவ நாடுகளால் பொதுவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய நிபந்தனைகளும் தீர்வை முறையும் செயற்படல்.
6. அங்கத்துவ நாடுகளின் சென்மதி மீதிகளை செலுத்த உதவுதல்.
7. அங்கத்துவ நாடுகளுக்கிடையே சமநிலையான அபவிருத்தியை ஏற்படுத்தல்.

**அங்கத்துவம் :** பெல்ஜியம், பிரான்ஸ், இத்தாலி, லக்ஸம்பர்க், நெதர்லாந்து, மேற்கு ஜேர்மனி ஆகிய 6 நாடுகளும் ஆரம்ப அங்கத்துவ நாடுகளாகும்.

**கட்டமைப்புப் பொறிமுறை**

- இதன் தலைமையகம் பிரான்சிலுள்ளது.
- நான்கு பிரதான சபைகள் இவற்றை நிர்வகிக்கின்றன. இதன் பிரதான நிர்வாக நிறுவனம் ஆணைக்குழுவாகும்.

**அமைச்சர்களின் ஆணைக்குழு :**

கொள்கைகளைத் தீர்மானிப்பது இந்நிறுவனமாகும். அவ்வாறே சர்வதேச விடயங்கள் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கான அதிகாரமும் இதற்குண்டு.

ஐரோப்பிய பாராளுமன்றம் - அங்கத்துவ நாடுகளுக்கு 198 ஆசனங்கள் உண்டு. பொருளாதார சட்டங்களை உருவாக்குவது இதுவாகும்.

- சட்டம் தொடர்பான அதிகார சபை சுதந்திரமான நீதிபதிகளினால் ஆனது. இந்நிறுவனத்தின் மூலம் அரச மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான நெருக்கடிகள் தீர்க்கப்படுகின்றன.

## இலங்கையுடனான தொடர்பு

குடியேற்ற நாடாகவிருந்த காலத்திலிருந்தே இலங்கை பெரும்பாலும் பிரித்தானியாவுடனேயே பொருளாதார ரீதியில் தொடர்புகளைப் பேணி வந்தது. பிரித்தானியா, ஐரோப்பிய பொருளாதார சமூகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்ட பின்னர், ஏனைய ஐரோப்பிய நாடுகளுடனும் பொருளாதார தொடர்புகைள விருத்தி செய்ய நேரிட்டது. அவ்வாறான தொடர்புகள் சில பின்வருமாறு:

- பாரம்பரிய ஏற்றுமதிப் பொருட்களுக்கு மேலதிமாக தைக்கப்பட்ட ஆடைகள் போன்ற புதிய பொருட்கள் ஐரோப்பிய நாடுகளினால் விலை கொடுத்து வாங்குதல், இலங்கையின் பொருளாதாரத் திட்டங்களுக்கு உதவி வழங்குதல்.

  *உதாரணம் :* மகாவலி பிரதேசத்தின் நீர்வழி மற்றும் குடியிருப்பு வேலைகளுக்கு உதவி செய்தல்.

- 1975 இல் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தமொன்றின்படி இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு நிவாரணங்கள் வழங்குதல். (ஆண்டுதோறும் இது புதுப்பிக்கப்படுகின்றது.)

- டென்மார்க்கிலும் மேற்கு ஜேர்மனியிலும் இலங்கையின் வர்த்தக மையங்கள் இரண்டை நிறுவுதல்.

## அரசாங்க சார்பற்ற அமைப்புக்களின் ஆரம்பம், வளர்ச்சி மற்றும் விரிவு

அரசாங்க சார்பற்ற (Non-Governmental Organization) நிறுவனம் என்பது, பிரசைகளோ, பிரசைகள் குழுக்களோ மேற்படி இரு பிரிவுகளுமோ சர்வதேச மட்டத்தில் ஒத்துழைப்பை ஏற்படுத்திக்கொள்வதற்காக நிறுவப்பட்ட ஒருவகை அமைப்பு ஆகும். இவை அரசாங்கங்களால் வழிநடத்தப்படுபவையோ, நிறுவப்பட்டவையோ எவ்வழியிலாவது நிதி ஒதுக்கீடு வழங்கப்படுகின்றவையோ அல்ல, 1968 இல் ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக சபையின் மூலம் அனுமதிக்கப்பட்ட ஆலோசனையொன்றின்படியான, நாடுகளுக்கு இடையிலான அமைப்பு அரசாங்க சார்பற்ற அமைப்பாகும்.

இவை அரசியல் கருமங்களிலிருந்து ஒதுங்கியவையாகும். அரசியல் அதிகாரத்தை எதிர்நோக்கும் குழுவோ கட்சியோ அல்ல. எனினும் தமது முழு சமூகத்தினதும் அல்லது சமூகத்தின் ஒரு பகுதியினது சமூக பொருளாதாரத்தை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும். ஆகவே இவை தொழிற்சங்க அமைப்பிற்கு மாற்றமான இலாப நோக்கற்ற ஒருவகை அமைப்புக்களாகும். எனினும் அரசாங்க சார்பற்ற நிறுனங்களினால் அந்தந்த அரசுகளின் நிலைபேறான அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு, அவற்றை அடையமுடியுமென்பது இன்று ஏற்றுக்கொண்டுள்ள கொள்கையாகும். இவை நாடுகளுக்கிடையிலான ஒப்பந்த மட்டத்தில் அல்ல. நாடுகளுக்கிடையிலான நபர்களின் மட்டத்தில் நிறுவப்பட்டுள்ளது. அதாவது நாடுகளுக்கிடையிலான அரசுகள் தலையிட்டு இவை நிறுவப்படவில்லை.

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (International Committee of Red Cross - ICRC)

**ஆரம்பம் :** 1864 இல் ஏற்படுத்திக்கொண்ட ஜெனீவா உடன்படிக்கையின் பிரகாரம் செஞ்சிலுவைச் சங்கம் நிறுவப்பட்டது. இத்தாலிய நாட்டவரான ஹென்றி டுடான்ட் இதனை நிர்மானித்தார். 1859 இல் வட இத்தாலியில் நடைபெற்ற யுத்தத்தின்போது காயமுற்ற போர் வீரர்களின் துக்ககரமான நிலையைக் கண்ட இவர், அவ்வாறானவர்களுக்கு உதவும் முகமாக, மற்றும் நான்கு பேருடன் சேர்ந்து அதனை நிறுவினார்கள். 1864 இல் ஜெனிவா சம்மேளனத்தில் இது சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**நோக்கம் :**

1. எந்தவொரு இடத்திலும் மனித சமூகத்துக்கு நேருகின்ற துன்பகரமான நிகழ்வுகளைத் தவிர்ப்பதற்கு அல்லது குறைப்பதற்கு முயற்சி செய்தல்.
2. மனித சமூகத்தின் கௌரவத்தைப் பேணும் வகையில் செயற்படல்.
3. யாவரினது நம்பிக்கையையும் பெறக்கூடியவாறு வாத விவாதங்களைத் தவிர்த்து பக்கச்சார்பற்ற முறையில் நடந்துகொள்ளல்.
4. இலாப நோக்கற்ற முறையில் தொண்டர் அடிப்படையில் நிவாரணம் வழங்கல்.
5. ஒரு நாட்டில் ஒரு செஞ்சிலுவைச் சங்க கிளையொன்றை மாத்திரம் நிறுவுதல்.
6. செஞ்சிலுவை சங்கமானது நாட்டின் எல்லாப் பிரசைகளுக்கும் திறந்த ஒன்றாகும். நாட்டு எல்லையினுள் மனித இனத்தின் நன்மை கருதி செயற்படும்.
7. இன, மத. வகுப்பு பேதமின்றி நபர்களின் தேவைகளை நிறைவேற்றுதல்
8. அவ்வவ் நாடுகளின் சட்டதிட்டங்களுக்கும் செஞ்சிலுவைச் சங்கத்தின் கொள்கைகளுக்கும் அமைவாகச் செயற்படல்.

**அங்கத்துவம் :**

1863 இல் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமானது, சுவீடன் நாட்டு 25 அங்கத்தவர்களை உள்ளடக்கியது. எந்தவொரு நாட்டுக்கும் செஞ்சிலுவை சங்கமொன்றை நிறுவ முடியும். அச்சங்கத்தில் நாட்டின் எந்தவொரு பிரசைக்கும் அங்கத்துவம் பெறமுடியும். அங்கத்தவர்கள் நாட்டினதும் அமைப்பினதும் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டவராவர்.

அங்கத்தவர்கள் அமைப்பின் சட்டதிட்டங்களுக்கும் குறித்த நாட்டின் சட்டதிட்டங்களுக்கும் கீழ்ப்படிதல் அவசியமாகும். இன்று 300 மில்லியனுக்கும் கூடிய எண்ணிக்கையானோர் இதில் அங்கம் வகிக்கின்றனர். 146 நாடுகளில் செஞ்சிலுவை சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.

## ஒழுங்கமைப்பு

இதன் பிரதான நிறுவனங்கள் மூன்றாகும்.

i. சர்வதேச செஞ்சிலுவை சம்மேளனம்
ii. சர்வதேச செஞ்சிலுவை குழு
iii. தேசிய செஞ்சிலுவை சமூகம்

**சர்வதேச செஞ்சிலுவை சம்மேளனம்**

i. 1919 இல் ஆரம்பிக்கப்பட்டது. நான்கு வருடங்களுக்கு ஒருமுறை கூடும். தேசிய மட்ட செஞ்சிலுவை சங்கங்களை நிறுவி அவற்றிடையே அந்நியோன்னிய தொடர்பைப் பேண உதவுதலும் தேசிய சமூகங்களுக்கு அறிவுரை வழங்கலும், உதவி வழங்கலும்.

**சர்வதேச செஞ்சிலுவை குழு**

ii. 1863 இல் நிறுவப்பட்ட இதில் சுவீடன் தேசத்தின் 25 பேர் அங்கத்தவர்களாவர். சுவிட்சர்லாந்து தேச அரசும் அந்தந்த நாட்டின் தேசிய மட்ட செஞ்சிலுவை சங்கங்களும் உதவி வழங்கும். அமைப்பின் அடிப்படை கொள்கைகளைப் பேணல் அமைப்பின் பணியாகும். சேவைகளை விரிவுபடுத்தலும் புதிதாக உருவாக்கும் செஞ்சிலுவை சங்கங்களை ஏற்றுக்கொள்ளல் ஆகியனவாகும்.

**தேசிய செஞ்சிலுவை சமூகம்**

iii. அந்தந்த நாட்டில் நிறுவப்பட்ட செஞ்சிலுவை சங்கங்கள் இதிலடங்கும். நாட்டின் எந்தவொரு பிரசைக்கும் இதில் அங்கத்துவம் பெறமுடியும்.

## இலங்கையும் செஞ்சிலுவைச் சங்கமும்

1936 ஆம் ஆண்டு பிரித்தானிய செஞ்சிலுவை சங்கத்தின் ஒரு கிளையாக இது ஆரம்பிக்கப்பட்டது. 1947 இல் இது இலங்கை செஞ்சிலுவை சங்கமாக மாறியது. 1952 இல் இது சர்வதேச செஞ்சிலுவை குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1972 இல் இது இது இலங்கை செஞ்சிலுவை சமாசமாக (சமூகம்) மாறியது.

எந்தவொரு பிரசைக்கும் இதில் அங்கத்துவம் பெறமுடியும். அவர்கள் ஒன்றுசேர்ந்து நிறுவும் பொதுச்சபை மூலம் தீர்மானங்கள் எடுக்கப்படும். தலைமைக் காரியாலயம் கொழும்பில் நிறுவப்பட்டுள்ளது. கண்டியிலும் குருணாகலையிலும் கிளைக் காரியாலயங்கள் செயற்படுகின்றன.

இலங்கை செஞ்சிலுவை சமாசம் மூலம் பின்வரும் சேவைகள் நிறைவேற்றப்படுகின்றன.

1. முதலுதவிப் பயிற்சிகளும் சேவைகளும்.
2. ஆரம்ப சுகாதாரத்தைப் பேணல்.
3. வீட்டு தாதிச் சேவை.
4. பிணியாளர் போக்குவரத்து சேவை. (Ambulance)
5. இரத்த தானம் செய்பவர்களை சேர்த்துக்கொள்ளல்.
6. விபத்துக்குள்ளானவர்களை தேடிப் பார்த்து தகவல் வழங்குதல்.
7. இளைஞர் சேவை செயற்பாடுகள்.
8. போஷாக்கு சேவைகள்.
9. மக்கள் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்.

கடந்த காலங்களில் இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் நடைபெற்ற சிவில் யுத்தத்தின்போது செஞ்சிலுவைச் சமாசம் அரும் பணியாற்றியது. விசேடமாக LTTE யினரின் கீழ் இருந்த பிரதேச மக்களின் சுகாதார வசதிகள், விபத்துக்காளானோரின் தேவைகளை நிறைவேற்றல், பிரதானமாக அப்பிரதேசத்துக்கும் அரசுக்கும் இடையே தொடர்பைப் பேணல் உட்பட்ட பல்வேறு சேவைகள் ஆற்றப்பட்டன.

## சர்வதேச மன்னிப்புச் சபை
(Amnesty International)

**ஆரம்பம் :** 19651 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் பீட்டர் பென்சன், எரிக் பேகர் ஆகியோரினால் ஆரம்பிக்கப்பட்ட (Appeal for Amnesty) போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டு 1963 இல் செட்டெம்பர் 30 ஆம் திகதி சர்வதேச மன்னிப்புச் சபை நிறுவப்பட்டது. (Amnesty International).

**நோக்கம் :**

மனித உரிமைகள் மீறப்பட்ட ஒருவருக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுத்தல், மனித உரிமைகள் மீறப்படுவதை முடிவுக்குக் கொண்டு வரல், அதற்காக ஊடகங்களின் கவனத்தை ஈர்த்தல், நேரடியாக மறுபரிசீலனைக்கு மனுசெய்தல், அது தொடர்பாக தேடிப் பார்த்தல் ஆகியன இதன் ஆரம்ப நோக்கங்களாகும். இன்று அகதிகள், துயருக்கு ஆளானோர், பின்தங்கிய குலத்தவர், கோத்திரத்தினர், சமயத்தவர், இனங்கள் தொடர்பாகவும் பெண்களின் உரிமைக்காகவும் போராடி வருகின்றது. இதன்படி சர்வதேச மன்னிப்பு சபை பின்வரும் துறைகளில் செயற்படுகின்றது.

1. பெண்கள் உரிமைகள்
2. சிறுவர் உரிமைகள்
3. இம்சித்தலை முடிவுக்குக் கொண்டுவரல்
4. மரண தண்டனையை இல்லாதொழித்தல்
5. அகதிகளின் உரிமைகள்
6. சிறைக் கைதிகளின் உரிமை
7. மனிதனின் கௌரவத்தைப் பேணல் ஆகியனவாகும்.

**அங்கத்துவம் :** விரும்பிய ஒருவர் இதில் அங்கத்துவம் பெறலாம். இதன்படி தொண்டர் அடிப்படையில் செயற்படும் பெரும் எண்ணிக்கையான அங்கத்தவர்களையும் சம்பளம் பெறும் ஒரு சில ஊழியர்களையும் இச்சபை உள்ளடக்கும். இன்று இச்சபையுடன் இணைந்துள்ள அங்கத்தவர்களினதும் ஆதரவாளர்களினதும் எண்ணிக்கை 2.2 மில்லியனையும் தாண்டியுள்ளது.

**கட்டமைப்பு**

- அந்தந்த நாட்டின் அங்கத்தவர்கள் நிறுவும் அலகுகள் (Section) அடிமட்ட நிறுவனங்களாகும். சிறிய எண்ணிக்கையான அங்கத்தவர்கள் கொண்ட நாடுகளின் அத்தகைய அமைப்புக்கள், கட்டமைப்புக்கள் (Structure) எனப்படும்.

- இவ்வாறான அலகுகள், கட்டமைப்புகள் இல்லாத நாடுளின் மக்களும் சர்வதேச மன்னிப்புச் சபையில் சர்வதேச அங்கத்துவம் பெறமுடியும். (International Membership)

- அடிப்படை செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் இந்த நிறுவனங்களின் பணியாகும்.

- மேற்படி சர்வதேச கவுன்சிலினுள் (International Council) எல்லா அங்கத்தவர்களுக்கும் சர்வதேச தொகுதிகளுக்கும் அலகுகள், அமைப்புக்கள் ஆகியவற்றுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கின்ற போதிலும் வாக்குரிமை, அலகுகளுக்கும் கட்டமைப்புக்களுக்கும் மாத்திரமே உரிமையாகும்.

- சர்வதேச கவுன்சில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கூடும்.

- மேற்படி சர்வதேச கவுன்சிலினால் நியமிக்கப்படுகின்ற 8 அங்கத்தவர்களையும் ஒரு பொருளாளரையும் கொண்ட சர்வதேச செயற்குழு (International Executive Committee) சர்வதேச மன்னிப்புச் சபையின் மிக உயர்மட்ட நிறுவனமாகும்.

- சர்வதேச மன்னிப்புச் சபையின் நாளாந்த பணிகளை நிறைவேற்றும் பொறுப்பைக் கொண்டுள்ள சர்வதேச கவுன்சில், சர்வதேச குழுவும் வழிநடத்தும் சர்வதேச செயலகமும் (International Secrateriate) உம் செயலாளரும் உள்ளனர்.

- 2005 ஆம் ஆண்டளவில் 52 அலகுகளும் 23 கட்டமைப்புக்களையும் கொண்டதாக இது அமைந்திருந்தது.

## இலங்கையும் சர்வதேச மன்னிப்புச் சபையும்

தனது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள சர்வதேச மன்னிப்புச் சபை பின்பற்றும் பிரதான உயரிய மார்க்கமாக அமைவது உரிமைகள் மீறப்படல் தொடர்பாக மக்கள் கருத்தை உருவாக்குவதாகும். இதற்காக செய்தியாளர் மகாநாடுகள் நடத்தும் அவர்களது பிரதான உயரிய வழியாகும். 2005 ஆம் ஆண்டில் இலங்கை தொடர்பாக 52 அத்தகைய செய்தியாளர் மாநாடுகளை நடத்தியது.

# மனித உரிமைகளை விசாரணை செய்யும் அமைப்பு
# (Human Rights Watch)

**ஆரம்பம் :**

1975 இல் ஹெல்சிங்கியின் ஒப்பந்தத்திற்கேற்ப ஹெல்சின்கி விசாரணை (Helsinki Watch) அமைப்பின் ஆரம்பத்துடன் 1978 இல் இது ஆரம்பமாகியது.

1981 இல் அமெரிக்க விசாரணை சபையும் (American Watch) உம், 1985 இல் ஆசிய விசாரணை சபையும் 1988 இல் ஆபிரிக்க விசாரணை சபையும் 1989 இல் மத்திய கிழக்கு விசாரணை சபையும் ஆரம்பிக்கப்பட்டன. 1988 இல் இவை யாவும் ஒன்றிணைந்து மனித உரிமைகள் விசாரணை சபை (Human Rights Watch) உருவாகியது.

**கொள்கைகள்**

- உலக மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படல்.
- பக்கச் சார்பான நடவடிக்கைகளைத் தவிர்ப்பதற்கு அரசியல் சுதச்திரத்தைப் பாதுகாக்க, போர்களங்களில் நடைபெறும் மனிதத் தன்மையற்ற நடவடிக்கைகளிலிருந்து மக்களைப் பாதுகாத்தல், குற்றவாளிகளை சட்டத்திற்கு முன்னால் கொண்டுவரல், துன்பத்திற்கு ஆளானோருடன் எழுந்து நிற்றல் ஆகியன.
- மனித உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் அதற்குப் பொறுப்பு கூற வேண்டிய ஊழலில் ஈடுபடுபவர்களை / குற்றவாளிகளை சட்டத்திற்கு முன்னால் நிறுத்துதல், அதற்காக விசாரணை நடத்துதல், உரிமைகளை வெளிக்கொணரல் ஆகியன.
- உலகிலுள்ள எல்லா நாடுகளுக்கும் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கும் சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான சட்டத்திற்கு மதிப்பளிக்க வலியுறுத்தல்.

**செயற்பாடுகள்**

- 1975 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை மேற்படி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக, பரந்த வேலைத்திட்டமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. 1997 இல் அவர்கள் நடத்திய நிலக்கண்ணி வெடிகளை தடை செய்வதற்கான சர்வதேச போராட்டங்களுக்காகவும் ஆர்ப்பாட்டங்களுக்காகவும் நோபல் சமாதானப் பரிசு கிடைத்தது.
- இலங்கையில் வடக்கு கிழக்கில் நடைபெற்ற சிவில் யுத்தத்தின்போது மனித உரிமைகள் மீறப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக மேற்படி அமைப்பின் தலையீடு தொடர்பாக அவ்வமைப்பின் செயற்பாடுகள் பற்றி கற்பிக்க முடியும்.

# சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை

நவீன சர்வதேச சமூகத்தினுள் எந்தவொரு நாட்டுக்கும் சர்வதேச விவகாரங்களில் தலையிடாது இருக்க முடியாது. அதனை விசேடமான முறையில் கையாள வேண்டும். அதற்கான விசேடமான வெளிநாட்டுக் கொள்கை பின்பற்றப்பட வேண்டும்.

- நாடுகள் சர்வதேச சமூகத்தினுள் செயற்படும் விதம் வெளிநாட்டுக் கொள்கை மூலம் வெளிக் காட்டப்படுகின்றது.

- ஒரு நாடு ஏனைய நாடுகளுடன் பேணும் தொடர்புகள் மூலம் தமது அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ளல் தொடர்பாக எடுக்கும் முயற்சிகளின் சாராம்சத்தைக் காட்டும் வெளியீடு வெளிநாட்டுக் கொள்கை எனக் கருதப்படும். - நோர்மன் ஹில். (Norman Hill)

- வெளிநாட்டுக்கொள்கை என்பது ஒரு நாடு ஏனைய நாடுகளுடன் இடைத்தொடர்புகளைப் பேணும்போது பின்பற்றும் கோட்பாடுகளும் நடைமுறைகளும் உள்ளடங்கும் கூற்றாகும். (Rathnaswamy).

- இதன்படி ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை இரண்டு அடிப்படைப் பகுதிகளால் ஆனது. அவையாவன:

    1. ஒரு நாடு சர்வதேச சமூகத்தில் ஏனைய நாடுகளுடன் தொடர்புகளைப் பேணும்போது நிறைவேற்ற எதிர்பார்க்கின்ற தேசிய நோக்கங்களும் அபிலாஷைகளும் யாவை என்பதும்,

    2. அவற்றை நிறைவேற்றப் பின்பற்றும் நடைமுறை எதுவென்பதும் ஆகும்.

- ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்குதலுடன் தொடர்புடைய காரணிகளை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

    1. அகக் காரணிகள்
    2. புறக் காரணிகள்
    3. கொள்கை வகுக்கும் காரணிகள்

1. அகக் காரணிகள்

    - புவியியல் நிலைமைகள்
    - வரலாறு
    - நாட்டினால் செய்யக்கூடியவை (தேசிய இயலுமை)
    - மக்கள் கருத்து

2. புறக் காரணிகள்

- உலகின் தேசிய அரச முறைமையின் இன்றைய நிலையும் அதன் செயற்பாடும்.
- சர்வதேச சட்டங்களும் சர்வதேச நிறுவனங்களின் செயற்பாடுகளும்.
- சர்வதேச தொடர்புகளில் வளர்ச்சியடைந்துள்ள தொழினுட்ப மாற்றங்கள்.

**ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையின் நோக்கங்கள்**

1. பிரதான அல்லது அடிப்படை நோக்கம் (Core Values)

- நாட்டின் நிலவுகையை உறுதிசெய்துகொள்ளல்.
- பாதுகாப்பு தொடர்பாக முக்கியமான பிரதேசங்களையும் இடங்களையும் பாதுகாத்துக் கொள்ளல்.
- அரசியல் ரீதியான நிறுவனங்களையும் தேசிய ஒருமைப்பாட்டையும் பாதுகாத்தல்.
- பொருளாதார அபிவிருத்தி

**2. நடுத்தர அளவிலான நோக்கங்கள் (Middle cless Objectives)**

- வர்த்தகத்தை அபிவிருத்தி செய்துகொள்ளல்.
- வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்ளல்.
- வெளிநாட்டுச் சந்தையை விரிவுபடுத்தல்.
- நாட்டின் சமூக நலன்களை உயர்மட்டத்திற்குக் கொண்டுவருதல்.
- நாட்டின் கௌரவத்தை சர்வதேச சமூகத்தில் வளர்த்தல்.

3. அகில உலக - நீண்டகால நோக்கங்கள் (Universal Long Range Objevtives)

சர்வதேச சமூகத்தினுள் தமது நிலவுகையைப் பேண வேண்டுமென நாம் நம்பும் சமூக சூழலைக் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்ட நோக்கங்கள்.

1948 இலிருந்து 1971 வரையான காலப்பகுதியில் வெளிநாட்டுக் கொள்கையை முடிவுசெய்தலும் தீர்மானித்தலும் அதனைச் செயற்படுத்த முடிவு செய்ததும் தீர்மானித்ததும் அதனை செயற்படுத்த அதிகாரமளிக்கப்பட்டிருந்த பிரதமரினாலாகும். இலங்கையில் வெளிநாட்டுத் தொடர்புகளைப் பேண ஒரு அமைச்சு இருக்கவில்லை. அதற்காக பிரதம மந்திரியினால் நிருவகிக்கப்பட்ட திணைக்களம் ஒன்று மாத்திரமே இருந்தது.

1977 இல் வெளிநாட்டுக் கருமங்களை வழிநடத்த தனியான ஒரு அமைச்சும் அமைச்சர் ஒருவரும் நியமிக்கப்பட்டார்.

- சுதந்திரத்தின் பின்னர் ஆரம்ப காலத்தில் வெளிநாட்டுக் கொள்கை தொடர்ந்து மாற்றமடைந்து வந்தது. அரசாங்கங்கள் மாறும்போது கொள்கையும் மாறியது.

**1948 - 1956 வரை**

- இக்காலகட்டத்தில் ஐ.தே.க. அரசாங்கங்கள் ஆட்சியிலிருந்தது வெளிநாட்டுதவிகள் பெறும் போக்கு இக்காலப்பகுதியில் விருத்தியடைந்தது.
- இக்காலகட்டத்தில் பிரித்தானியாவிற்கும் மேற்கு நாடுகளுக்கும் சார்பானதும் ரஷ்யாவிற்கும் கம்யூனிஸ்ட் நாடுகளுக்கும் எதிரான கொள்கையை இலங்கை பின்பற்றியது. இதற்கான காரணிகள் வருமாறு
- சுதந்திரத்தின் பின்னரான ஆரம்ப காலகட்டத்தில் பிரித்தானியாவிற்கும் இலங்கைக்கும் இடையே நெருக்கமான உறவு நிலவியது.

- 150 வருடகாலம் பிரித்தானியாவின் குடியேற்ற நாடாக இருந்தமை.
- 1948 இல் இலங்கைக்கும் பிரித்தானியாவிற்கும் இடையே செய்யப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தம். இதன்படி கட்டுநாயக்க விமான நிலையத்திலும் திருகோணமலை துறைமுகத்திலும் படை முகாம்களை வைத்திருக்க பிரித்தானியாவிற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.
- சுதந்திரம் பெற்றவுடன் இலங்கைக்கு பொதுநலவாய சங்கத்தில் பூரண அங்கத்துவம் கிடைத்தமை.
- இலங்கைக்கும் பிரித்தானியாவிற்குமிடையே நிலவிய பொருளாதாரத் தொடர்புகள்.

இலங்கை 1948 இல் மே, டிசம்பர் மாதங்களிலும் 1949 செப்டெம்பரிலும்ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் கோரி விண்ணப்பித்தபோது ரஷ்யா தனது வீட்டோ அதிகாரத்தை உபயோகித்து அதனை எதிர்த்தது.
அவ்வாறு நிராகரித்தமைக்குக் காரணம் இலங்கை ஒரு பரிபூரண சுதந்திரமடைந்த நாடல்ல என்று ரஷ்ய வெளிநாட்டமைச்சர் கூறினார்.

இலங்கையில் அப்போது ஆட்சியிலிருந்த ஐ.தே.கட்சி கடும் கம்யூனிஸ்ட், சமசமாஜ, மார்க்ஸ்வாத எதிர்ப்பு கொள்கையைக் கொண்டிருந்தது. அதேபோன்று அன்று சோவியத் ரஷ்யா உட்பட்ட கம்யூனிஸ்ட் நாடுகளின் எழுச்சி பற்றி மேற்குலக நாடுகளும் அதற்கு சார்பான நாடுகளும் அச்சமடைந்திருந்தன. இந்தியத் தலைவரான பிரதமர் நேரு கம்யூனிஸத்தின் நோக்கம் ஜனநாயகத்தை அழிப்பது என்று கூறியிருந்தார்.

இந்நிலைமைகள் காரணமாக சுதந்திரமடைந்த ஆரம்ப காலத்தில், கம்யூனிஸத்திற்கு எதிரானதும் பிரித்தானியாவிற்கு சார்பானதுமான போக்கு இலங்கை வெளியுறவுக் கொள்கையில் காணப்பட்டது.
இதனால் கம்யூனிஸ்ட் நாடுகளுடன் எதுவித ராஜதந்திர தொடர்புகளும் பேணப்படவில்லை. அது மாத்திரமல்ல. எந்தவொரு கம்யூனிஸ்ட்வாதிக்கும் இந்நாட்டுக்கு வரவும் இடமளிக்கவில்லை.

*உதாரணம் :*

1. கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்த இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் 10 ஆது ஆண்டு விழாவிற்கு வருகை தரவிருந்த ரஷ்ய, சீன, பிரான்சு தேச தலைவர்களுக்கு இலங்கைக்கு வர விசா அனுமதி வழங்காமை.

2. கம்யூனிஸ்ட்வாதி எனக் கருதிய பிரித்தானிய சமாதானக் குழுவின் தலைவருக்கு இலங்கைக்கு விஜயம் செய்ய விசா மறுக்கப்பட்டமை.

3. கம்யூனிஸ்ட்வாதத்துடன் தொடர்புடைய நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவற்றை இலங்கைக்கு கொண்டுவருவதற்கு தடை விதித்தமை.

இக்கொள்கையை குறிப்பிட்டளவில் மாற்றியமைத்த இரண்டு சந்தர்ப்பங்களை இக்காலகட்டத்தில் காணமுடிகிறது.

1. சீன அரசை இராஜதந்திர ரீதியில் அங்கீகரித்தமை.
2. 1952 இல் சீனாவுக்கும் இலங்கைக்குமிடையில் ஏற்பட்ட இறப்பர் - அரிசி ஒப்பந்தம்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் உலக சந்தையில் ஏற்பட்ட பாரியளவான அரிசித் தட்டுப்பாடு காரணமாக இலங்கை பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியது. 1952 இன் நடுப்பகுதியில் இலங்கை அரசு அரசி கோரி உலக நாடுகளிடம் விண்ணப்பித்த போதிலும் அதனை எந்த உலக நாடும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதேசமயம் இறப்பர் விலை குறைந்தமையும் இலங்கைக்கு பெரும் பொருளாதார நெருக்கடியைத் தோற்றுவித்தது. இச்சமயத்தில் இலங்கை முகங்கொடுத்த நெருக்கடியிலிருந்து விடுபட மேற்படி இறப்பர் அரிசி ஒப்பந்தம் இலங்கைக்கு பெரிதும் உதவியது.
இதன் பின்னரும் கம்யூனிச நாடுகளுடன் எதுவித தொடர்பும் பேணப்படவில்லை. குறைந்த பட்சம் சீனாவுடன் கூட தூதுவர் மட்டத் தொடர்பு உருவாக்கப்படவில்லை.

இதன் பின்னரும் கூட இலங்கையின் கொள்கையில் மாற்றம் ஏற்படவில்லை என 1955 இல் பாண்டுங் மகாநாட்டில் இலங்கை பிரதமர் ஜோன் கொத்தலாவல ஆற்றிய உரையிலிருந்து தெளிவாகிறது.

**1956 - 1965 வரை**

1956 இல் நடைபெற்ற தேர்தலில் திரு.பண்டாரநாயக்கவின் இலங்கை சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தது. 1960 மார்ச், யூன் காலம் தவிர்ந்த 1965 வரையான காலத்தில் இலங்கை சுதந்திரக் கட்சியே பதவியிலிருந்தது.
இக்கட்சி இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தியது. இது தொடர்பில் செல்வாக்கு செலுத்திய வெளி/ உள் காரணிகள் பலவாகும்.

1. ஜோசப் ஸ்ராலினின் பின்னர், ரஷ்யாவின் ஆசியா தொடர்பான கொள்கை மாற்றமடைதல்.
2. கம்யூனிஸ்ட் நாடுகள் தொடர்பாக திரு. பண்டாரநாயக்காவின் மனப்பாங்கு.
3. 1956 இல் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியிலிருந்த அரசுடன் ஏற்படுத்திக் கொண்ட தொடர்பும் கம்யூனிஸ்ட் வாதம் தொடர்பாக மக்களின் மனப்பாங்கு மாற்றமடைந்தமையும் திரு.பண்டாரநாயக்கவின் முதலாவது உரையின்போது புதிய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை வெளியிடப்பட்டது.

- அதன் மூலம் அரசு, எந்தவொரு பிரிவினரையும் சாராது இருப்பதாகவும்
- கட்டுநாயக்க, திருகோணமலை முகாம்கள் திரும்பப் பெறப்படுமெனவும் அறிவித்தார்.
- 1958 இல் செக்கோஸ்லேவேக்கிய பிரதமர் இலங்கைக்கு விஜயம் செய்தார்.
- 1956 வரை பிரித்தானியாவுடனும் ஏனைய மேற்கு நாடுகளுடனும் பேணிய உறவு மாறாது பேணப்படல்.

- ரஷ்யா, ஹங்கேரிப் பிரச்சினையில் தலையிட்டபோது திரு. பண்டாரநாயக்க நடுநிலைமை வகித்தமை மூலம் அதுவரை பேணிய உறவு சீர்கெடாமல் பேணப்பட்டது.

- சீனப் பிரதமர் 1957 இல் இலங்கைக்கு விஜயம் செய்த சமயத்தில் வெளியிட்ட கூட்டறிக்கையில், பெரிய, சிறிய நாடுகள் யாவும் சமமானவை என்றும் எந்தவொரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டின் உள் விவகாரத்தில் தலையிடும் உரிமை இல்லை என்றும் நிராயுதக் கொள்கை மூலம் நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பிற்கான அடிப்படையை உருவாக்கல் பற்றியும் குறிப்பிடல்.

- சீன இந்திய எல்லைப் பிரச்சினையின்போது நடுநிலைமை வகித்தமையும் நடுநிலையான ஆசிய நாடுகளுடன் சேர்ந்து அதனை சமாதானப்படுத்த முயற்சி எடுத்தமையும்.

- சீனாவுடனும் இந்தியாவுடனும் கடல் வழி தொடர்புகளை மேம்படுத்தல்.
- இந்தியத் தோட்டத் தொழிலாளரின் (மலையகத் தமிழர்) பிரஜா உரிமைப் பிரச்சினயை பேச்சு வார்த்தை மூலம் தீர்த்தலும் இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை வளர்த்துக் கொள்ளல்.

**1963 இல் இலங்கைக்கும் ஒல்லாந்துக்கும் இடையிலான ஒப்பந்தம்**

இக்காலகட்டத்தில் கம்யூனிச நாடுகளுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தங்கள் மூலம் வர்த்தக, கைத்தொழில், விவசாய, நிதி உதவிகளைப் பெற்று இலங்கையின் மேற்படி துறைகளை வளர்த்தல்.

இவ்வாறு உருவாக்கிய வெளிநாட்டுக் கொள்கைகளில் இற்றைவரை நிலைத்திருக்கும் கொள்கையாவது,

- அணிசேராக் கொள்கை.
- அணு ஆயுத உற்பத்தி மற்றும் ஆராய்ச்சிகளுக்கு எதிரான கொள்கை.
- ஏனைய நாடுகளுடன் நெருக்கமான ஒத்துழைப்பைப் பேண நடவடிக்கை எடுத்தல் மற்றும் இலங்கை பிரதிநிதித்துவம் செய்யாத நாடுகளுடன் இராஜதந்திர உறவைப் பேண முயற்சி எடுத்தல்.

(i) இதற்கிணங்க, 1957 ஒக்டோபர் 15 ஆம் திகதி திருகோணமலை துறைமுகமும் 1957 நவம்பர் 01 ஆம் திகதி கட்டுநாயக்கவும் சட்டரீதியாக இலங்கையால் பொறுப்பேற்கப்பட்டதன் மூலம் முதல் நோக்கம் நிறைவேறியது.

(ii) 1957 இல் ரஷ்யாவுடனும் சீனாவுடனும் பொருளாதார, கலாசார, இராஜ தந்திர உபாய தொடர்பு ஒப்பந்தம் கைச்சாத்தாகியது.

- மார்க்ஸிசவாத சஞ்சிகைகள், பத்திரிகைகளுக்கான தடை நீக்கப்பட்டது.

- 1957 இல் சீன பிரதமருடன் அந்நாட்டு கலாசாரக் குழு இலங்கைக்கு விஜயம் செய்தது.

- 1964 இல் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் உரிய பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது மாத்திரமின்றி இரு நாடுகளுக்குமிடையிலான தொடர்பும் கருத்தாழமுள்ளதாகப் பேணப்பட்டது.

- 1963 - 1965 காலகட்டத்தில், இலங்கை ளிநாட்டுச் செலாவணி தொடர்பாக பெரும் பிரச்சினையை எதிர்நோக்கியது. இது தொடர்பாக பொருளாதார நிபுணர்கள் இரண்டு தீர்வுகளை முன்வைத்தனர். பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வெளிநாட்டு உதவி தேவையென தர்க்கிக்கப்பட்டது. அதன்படி முதன்முதலாக 1965 இல் வெளிநாட்டுச் செலாவணி, வெளிநாட்டுக் கொள்கையைத் தீர்மானிக்கும் பிரதான காரணியாக மாறியது. இதனைத் தீர்க்க இலங்கை சுதந்திரக் கட்சி - சமசமாஜ கூட்டரசாங்கம் மேற்கு நாடுகளின் உதவியை நாடியது. இதன் பயனாக இலங்கையின் பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வுகாண உலக வங்கி நிபுணர் குழுவொன்று இலங்கைக்கு அனுப்பப்பட்டது.

1965 இல் பதவிக்கு வந்த அரசாங்கம், மேற்படி கொள்கைகளை முன்னெடுத்துச் சென்றது. அதனை உறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுத்தது. இதற்காகப் பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்பட்டன.

1. பொருளாதார உதவி பெறத் தேவையான நிறுவனக் கட்டமைப்பை உருவாக்கல். *உதாரணம் :-* திட்ட உருவாக்கத்துக்கான அமைச்சொன்றை ஏற்படுத்தல்.

2. உலக வங்கியினால் ஏற்றுக்கொள்ளக்கூடியவாறான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையை மேற்குலக பலமிக்க நாடுகளினால் ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு வடிவமைத்தல்.

3. இவ்வரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படமாட்டாதென அறிவிக்கப்பட்ட போதிலும் அந்நாடுகளுடன் இராஜ தந்திர தொடர்புகள் மாற்றப்படவில்லை.

4. 1965 - 1970 ஆண்டுகளின் நாட்டின் வெளிநாட்டுக்கொள்கை பிரதானமாக வெளிநாட்டுதவி பெறுவது தொடர்பானதாகவே இருந்தது.

1970 இல் ஐக்கிய முன்னணி அரசு தேர்தலுக்கு முன்னர், தாம் பதவிக்கு வந்தவுடன், மேற்படி கொள்கைகள் மாற்றமடையுமென அறிவித்தபோதிலும் அவ்வாறு மாற்றப்படவில்லை.

1965 இன் பின்னர், சர்வதேச மட்டத்தில் நடந்த முக்கிய மாற்றம்

- இந்தியா, தெற்காசியாவின் மிகப் பலமான நாடாக மாற்றமடைதல்.

- சோவியத் ரஷ்யா தெற்காசியாவுக்கு வெளியிலுள்ள மிகவும் பலம் வாய்ந்த நாடாக மாறுதல்.

இது தொடர்பான 1970 பதவிக்கு வந்த அரசின் கொள்கை பின்வருமாறு:

1. இந்தியாவிடமிருந்தும் ரஷ்யாவிடமிருந்தும் விலகியிருக்க முயற்சி செய்தல்.
2. அவற்றுக்கு எதிராக அமெரிக்காவுடனும் சீனாவுடனும் நெருக்கமான தொடர்பைப் பேணல்.

- 1971 ஏப்ரலில் சீனாவுடனான தொடர்புகள் பலவீனமடைந்ததன் விளைவாக அமெரிக்காவுடனான தொடர்புகள் அதிகரித்தன.

- 1976 இல் அணிசேரா நாடுகளின் சம்மேளனத்தை இலங்கையில் நடத்தியதன் மூலம் இலங்கையின் நடுநிலைமைக் கொள்கை அதிகரித்தது.

- 1964 இல் ஏற்படுத்திய சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் இந்நிலை மேலும் உறுதியடைந்தது. இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியுடன் கொண்டிருந்த தனிப்பட்ட தொடர்பை உபயோகித்து இந்தியாவுடன் சிறந்த நட்புறவைப் பேண இலங்கைப் பிரதமரினால் முடிந்தது.

- 1977 இல் பதவிக்கு வந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன தனது வெளிநாட்டுக் கொள்கை பற்றிய ஆரம்ப உரையின்போது அணிசேராமை தனது ளெிநாட்டுக் கொள்கை எனக் கூறினார்.

- இந்திய பிரமர் இந்திரா காந்தியின் தலைமையில் 1983 இல் புதுடில்லியில் நடந்த அணிசேரா நாடுகள் சம்மேளனத்தின் மூன்றாம் உலக நாடுகளில் நிலவும் ஏழ்மை நிலை பற்றி அபிவிருத்தியடைந்த நாடுகளின் கவனத்தை ஈர்க்க முயற்சிக்கப்பட்டது.

- 1985 இல் சார்க் அமைய உடன்படிக்கையில் ஒப்பமிட்டு பிராந்திய ஒற்றுமைக்கான அடித்தளமிடல்.

- இவ்வாறு இந்தியாவுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தபோதிலும் இலங்கையானது பாகிஸ்தானுடனும் அமெரிக்காவுடனும் நெருக்கமான தொடர்பைப் பேணி வந்தது.

- இச்சமயத்தில் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையைத் தீர்மானிக்கும் பிரதான காரணியாக அமைந்தது. LTTE யுடன் இலங்கை அரசு கொண்டிருந்த மோதலாகும். இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இலங்கை அரசு மேற்குல உதவியை நாடியதனால் இந்திய உறவு சீர்குலைந்தது. இலங்கை அரசு இவ்வமைப்பிற்கு இந்தியா உதவுவதாக குற்றஞ் சாட்டியது. இதனால் இரு நாடுகளுக்கிடையிலான உறவில் குறிப்பிடத்தக்களவு விரிசல் ஏற்பட்டது. ஒரு கட்டத்தில் LTTE யினரை வெற்றிகொள்ள இருந்தபோது இந்தியா விமான வழியாக உணவுப் பொட்டலங்களை வீசி அவ்வெற்றியைத் தடுத்தது.

- இந்த நிகழ்வின் பின்னர் இலங்கையுடன் நெருங்கிய தொடர்பைப் பேணிய பாகிஸ்தான், அமெரிக்கா ஆகிய நாடுகள் பாராமுகமாயின. இதனால் இந்திய உதவி தவிர்க்க முடியாததாயிற்று. இதன் விளைவாக 1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகியது.

- LTTE அமைப்பு ஒப்புகொண்ட மாதிரி செயற்படாமையால் இந்தியா சமாதானப் படையை இலங்கைக்கு அனுப்பியது. இது நாடுகளுக்கிடையிலான உறவை மேலும் விரிசலடையச் செய்தது.

- ஜனாதிபதி பிரேமதாச இநதிய சமாதானப் படையை திரும்பியனுப்பிய போதிலும் இந்தியாவுடன் முன்னர் இருந்த (1970 களில்) உறவு புத்துயிர்பெறவில்லை.

- ஜனாதிபதி ஜயவர்தன, ஜனாதிபதி பிரேமதாச ஆகியோரின் பதவிக்காலம் பூராவும் இலங்கை மேற்குலகுடன் நெருக்கமான உறவைப் பேணி வந்தது. இதில் 1977 இல் செயற்படுத்திய திறந்த பொருளாதாரக் கொள்கை அதிக செல்வாக்கைக் கொண்டிருந்தது.

- 1994 இல் பதவிக்கு வந்த பொது சன ஐக்கிய முன்னணி அரசு, இந்திய - இலங்கை உறவை சீர்செய்தது.

- இலங்கை இந்தியாவை ஒரு பலமான நாடாக ஏற்றுக்கொண்டது. இந்தியா - இலங்கையின் இனப் பிரச்சினையை ஒரு உள்நாட்டுப் பிரச்சினையாக ஏற்றுக்கொண்டது. இதுவரை இந்தியா இவ்விடயத்தில் நேரடியாகவோ மறைமுகமாகவோ தலையிடவில்லை.

- இவ்வாறு இந்தியாவுடன் நல்லுறவைப் பேணிய அதேசமயம் மேற்கு நாடுகளுடனும் நெருங்கிய தொடர்பு பேணப்பட்டது.

- 2000 ஆம் அண்டு பதவிக்கு வந்த அரசின் வெளிநாட்டுக் கொள்கையைத் தீர்மானிக்கும் காரணி இனப்பிரச்சினையாகும்.

- பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினயைத் தீர்த்துக்கொள்ளுமாறு மேற்கு நாடுகளினால் அரசுக்கு ஏற்படுத்திய அழுத்தத்தை மறுத்த அரசு அதற்கான போர் நடவடிக்கையை கையாண்டது. இது இலங்கையின் சர்வதேச, வெளிநாட்டுக் கொள்கைகளை மாற்றியது.

- மேற்கு நாடுகளுடனான நட்புறவான வெளிநாட்டுக் கொள்கையை இலங்கை பின்பற்றிய போதிலும் அந்நாடுகள் இலங்கையுடன் இணக்கமற்ற கொள்கையை கையாண்டபடியால் இலங்கை அரசு ஈரான், லிபியா, மியன்மார் போன்ற நாடுகளுடன் தனதுறவை வலுப்படுத்தியது.

  இவ்வாறு அந்தந்த காலகட்டத்தில் வெளிநாட்டுக் கொள்கை மாற்றமடைந்த முறையின் அம்மாற்றங்களை ஏற்படுத்துவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகளும் வெளிக்கொணரக்கூடியவாறு இப்பாடம் கட்டியெழுப்பப்பட வேண்டும். அவ்வாறே மேலே விவரிக்கப்பட்டவாறு இன்று இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை எத்திசையில் பயணிக்கும் போக்கைக் கொண்டிருக்கின்றது என்பதும் விளக்கப்பட வேண்டும்.

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடு

### சுய ஆக்கமாக சஞ்சிகையொன்று தயாரித்தல்

இலங்கையின் பூகோள மற்றும் பிராந்திய சூழலை இனம் காண்பதற்கு சுய ஆக்கமாக சஞ்சிகை ஒன்றினைத் தயாரித்தல்.

- செயற்பாட்டுக்குப் பொருத்தமான தகவல்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றினூடாகப் பெற்றுக்கொள்க.
- தென் ஆசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பு. (சார்க்)
- தென்கிழக்கு ஆசிய நாடுகளின் அமையம் (ஆசியான்)
- பிரித்தானிய பொதுநலவாய அமைப்பு
- ஐக்கிய நாடுகள் தாபனம்
- தெரிவுசெய்யப்பட்ட பல்தரப்பு சர்வதேச அமைப்புகள்

  ***உதாரணம் :*** உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், முக்கிய மனித உரிமைகள் அமைப்புகளான சர்வதேச மன்னிப்பு சபை, மனித உரிமைகள் விசாரணை அமையம்.

- மேலே குறிப்பிடப்பட்ட தலைப்புக்களைப் பொருத்தமான விதத்தில் வழங்குக.
- ஒவ்வொரு மாணவரும் தயாரித்த சுய ஆக்கத்தை ஒன்றுதிரட்டி சஞ்சிகையைத் தயாரிக்குக.
- பொருத்தமான விதத்தில் மதிப்பீட்டுக்கு உட்படுத்துக.

## பாத்திரமேற்று நடித்தல்

- மாணவர்களைப் பொருத்தமான விதத்தில் குழுக்களாக்குக.

- பின்வரும் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் நிறுவனங்களைக் குழுக்களுக்கிடையே பகிர்ந்து அளிக்குக.
  1. பொதுச்சபை
  2. பாதுகாப்புச் சபை
  3. பொருளாதார சமூக சபை
  4. நம்பிக்கை பொறுப்புச் சபை
  5. சர்வதேச நீதிமன்றம்
  6. செயலகம்

ஒவ்வொரு குழுவும் பெற்றுக்கொண்ட தலைப்புக்குப் பொருத்தமான தகவல்களைத் திரட்ட மாணவர்களை ஈடுபடுத்துக.

***உதாரணம் :***
- அதிகாரிகளைத் தெரிவுசெய்து நியமிக்கும் முறை
- உத்தியோகபூர்வ தேர்தல்
- ஆலோசனைகளுக்கு அங்கீகாரம் வழங்குதல்
- தலைமைத்துவம்
- பொறுப்புக் கூறுதல்

- மாணவர்கள் தேவையான தகவல்களைச் சேகரிக்க மூலங்களை வழங்குதல்.
- தேவையான சந்தர்ப்பங்களில் ஆசிரியர் உதவியை வழங்குக.
- ஒவ்வொரு குழுவையும் பொருத்தமான விதத்தில் மதிப்பீட்டுக்கு உட்படுத்துக.

**உசாத்துணை**


1. Website www.amnesty.org http//www.adb.org
2. Basic fact about UN.
3. Wikipedia. The free encyclopedia.

# பாடசாலை மட்டக் கணிப்பீடு

## அறிமுகம்

கற்றல், கற்பித்தல், மதிப்பீடு என்பன கல்விச் செயலொழுங்கின் முக்கிய மூன்று கூறுகள் என்பதும் கற்றல், கற்பித்தலின் முன்னேற்றத்தை அறிந்துகொள்ள மதிப்பீட்டைப் பயன்படுத்த வேண்டும் என்பதும் அனைத்து ஆசிரியர்களும் தெரிந்து வைத்திருக்க வேண்டிய ஒரு விடயம். அவற்றை பரஸ்பரச் செல்வாக்குடன் நடைமுறைப்படுத்துவது பற்றியும் ஒவ்வொன்றின் விருத்தியிலும் அவ்வக் கூறுகள் செல்வாக்குச் செலுத்துவது பற்றியும் ஆசிரியர்கள் அறிவர். தொடர் மதிப்பீட்டு (தொடராக நடைபெறுவது) கோட்பாடுகளின் படி அது நடைபெற வேண்டியது கற்றல், கற்பித்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதாகும். இது கற்றல், கற்பித்தலின் ஆரம்பத்தில், இடையில், முடிவில் எந்த நேரமும் நிகழ முடியும் என்பதை ஆசிரியர் விளங்கியிருக்க வேண்டும். அதே போன்று தம் மாணவர்கள் முன்னேற்றத்தை மதிப்பிட எதிர்பார்க்கும் ஓர் ஆசிரியர் கற்றல், கற்பித்தல் மற்றும் மதிப்பீடு தொடர்பான ஒழுங்கமைக்கப்பட்ட திட்டமிடலுடன் இருப்பது அவசியம்.

பாடசாலையை மையமாகக் கொண்ட மதிப்பீட்டு வேலைத்திட்டம் ஒரு பரீட்சை முறையோ அல்லது பரீட்சை நடத்துவதோ அல்ல. மாணவரின் கற்றலையும் ஆசிரியரின் கற்பித்தலையும் மேம்படுத்தும் ஒரு ஈடுபாடாகவே இது கருதப்படுகின்றது. மாணவர்களை நெருங்கி அவர்கள் பலம், பலவீனங்களை இனங்கண்டு அவற்றுக்குப் பரிகாரம் கண்டு மாணவர்களின் உச்சவிருத்தியை அடைவதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு வேலைத்திட்டமாகும்.

கற்றல்-கற்பித்தல் செயற்பாடு மூலம் கண்டறிதற் செயலொழுங்கின்பால் மாணவர்கள் வழிப்படுத்தப்படுவதுடன் ஆசிரியர் மாணவர்களிடையே நடமாடி அவர்கள் ஈடுபட்டுள்ள வேலைகளை அவதானித்து வழிகாட்டல்களை வழங்கிக் கருமமாற்றுவதே பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத்திட்டத்தினூடாக எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு மாணவர் தொடர்ந்து மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட வேண்டியதுடன் மாணவரின் ஆற்றல், விருத்தி எதிர்பார்ப்பு மட்டத்தில் நடைபெறுகின்றதா என்பதை ஆசிரியர் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது.

கற்றல்-கற்பித்தல் ஊடாக நடைபெற வேண்டியது மாணவர்களுக்கு உரிய அனுபவங்களை வழங்கி அவற்றை மாணவர்கள் உரிய முறையில் உள்வாங்கிக் கொண்டுள்ளனரா என்பதை உறுதிப்படுத்துவதாகும். அதற்கான வழிகாட்டலை வழங்குவதாகும். மதிப்பீட்டில் (கணிப்பீட்டில்) ஈடுபட்டுள்ள ஆசிரியர் தம் மாணவர்களுக்கு இருவிதமான வழிகாட்டல்களை வழங்கலாம். அவை பொதுவாக முன்னூட்டல், பின்னூட்டல் (Feed-back, Feed forward) எனப்படும். மாணவர்களின் பலங்களும் பலவீனங்களும் இனங்காணப்படும்போது அவர்களின் பலவீனங்களைப் போக்குவதற்கும் பலங்களை மெருகூட்டுவதற்கும் இப்பின்னூட்டலும் முன்னூட்டலும் உதவும்.

கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கின் வெற்றிக்காக பாடசாலையின் நோக்கங்களில் எந்த நோக்கத்தை எந்த மட்டத்தில் அடையப் பெற்றுள்ளனரென்பதை அறிந்துகொள்வதும் மாணவர்களுக்குத் தேவையானதாகும். மதிப்பீட்டு வேலைத்திட்டங்கள் மூலம் மாணவர்கள் அடைந்துகொண்ட பாண்டித்திய மட்டத்தை நிச்சயப்படுத்ததல் இதன் மூலம் ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கப்படுவதுடன் மாணவர்களுடன் தொடர்பாடுவதற்கு ஆசிரியர்கள் முன்வர வேண்டும். இதற்காகப் பயன்படுத்தக்கூடிய மிகச் சிறந்த வழிமுறை பாடசாலை மட்டக் கணிப்பீடாகும்.

மேற்படி நோக்கத்துடன் கருமமாற்றும் ஆசிரியர்களினால் தம் கற்பித்தல் செயலொழுங்கும் மாணவர்கள் கற்றல் செயலொழுங்கும் மேலும் விளைத்திறனுள்ளதாக அமைய வினைத்திறனுடனான கற்றல் - கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டு முறைகள் பயன்படுத்தப்பட வேண்டும். இதற்கென ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்தக்கூடிய வழிமுறைகள் சில கீழே தரப்படுகின்றன. இவை நீண்ட காலமாக பரீட்சைகள் திணைக்களத்தினூடாக தேசிய கல்வி நிறுவகத்தினூடாக அறிமுகப்படுத்தப்பட்ட முறைகளாகும். அவை பற்றி ஏலவே பாடசாலைத் தொகுதியில் ஆசிரியர்கள் அறிந்திருக்கிறார்கள் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

**அவ்வழிமுறைகள் வருமாறு:**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒப்படை | 2. | செயற்றிட்டம் |
| 3. | தொகை மதிப்பீடு | 4. | தேடல் |
| 5. | அவதானிப்பு | 6. | கண்காட்சி – முன்வைப்பு |
| 7. | களப் பிரயாணம் | 8. | சிறு எழுத்துப் பரீட்சை |
| 9. | கட்டமைப்புக் கட்டுரை | 10. | திறந்த நூற்பரீட்சை |
| 11. | ஆக்கச் செயற்பாடுகள் | 12. | கேட்டற் பரீட்சை |
| 13. | செய்முறைச் செயற்பாடு | 14. | பேச்சு |
| 15. | சுய ஆக்கம் | 16. | குழுச் செயற்பாடு |
| 17. | எண்ணக்கருப்படம் | 18. | இரட்டைப் பதிவேடு |
| 19. | சுவர்ப்பத்திரிகை | 20. | வினாவிடைப் போட்டி |
| 21. | வினாவிடைப் புத்தகம் | 22. | விவாதம் |
| 23. | கலந்துரையாடல் அமர்வு | 24. | கருத்தரங்கு |
| 25. | உடன் பேச்சு | 26. | வகிபாகமேற்றல் |

அறிமுகம் செய்யப்பட்டுள்ள இக்கற்றல்-கற்பித்தல் முறைகள் அனைத்தும் எல்லாப் பாடங்களின்போதும் எப்போதும் பயன்படுத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதல்ல. தமது பாடத்துக்கு, பாட அலகிற்குப் பொருத்தமான ஒன்றைத் தெரிவு செய்து கொள்வதில் ஆசிரியர்கள் ஆர்வம் காட்ட வேண்டும்.

இவ்வாசிரியர் வழிகாட்டற் கோவையில் ஆசிரியர்கள் தம் மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்தைக் கணிப்பிடுவதற்காகப் பயன்படுத்தக்கூடிய கற்றல் - கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டுத் தெரிவுகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை ஆசிரியர்கள் பொருத்தமான தம் வகுப்பு மாணவர்களின் முன்னேற்றத்தை கணிப்பீடு செய்யப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அவற்றைப் பயன்படுத்துவதில் இருந்து விலகுவது மாணவர்கள் தம் அறிவுசார் ஆற்றலையும் உளவியக்கப் பண்புகளையும் மனப்பாங்குகளையும் விருத்தி செய்து கொள்வதில் இருந்தும் அவற்றை வெளிக்காட்டுவதில் இருந்தும் தூரப்படுத்தும்.

## தவணை I

### மதிப்பீட்டுத் திட்டம் - 01

நலன்புரி அரசு முறையின் விருத்தியுடன் அரசின் முக்கிய பொறுப்பாக கொள்கைகளை உருவாக்குதல் அமைகிறது. அவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்ட அரச கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல் அரச நிர்வாகம் (பொது நிர்வாகம்) எனப்படும். இதற்கேற்ப அடிப்படையில் அரச கொள்கைகளை உருவாக்குதல் அவற்றை நடைமுறைப்படுத்தும் முறைகள், அது தொடர்பான நிறுவன தொகுதிகள் என்பன பற்றிய மாணவர்களின் செயன்முறை அறிவை மதிப்பிடவே இம்மதிப்பீட்டினூடாக எதிர்பார்க்கப்படுகிறது.

உங்கள் பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்துக்கு அருகிலுள்ள பிரதேச செயலாளர் அலுவலகம், மாவட்ட செயலாளர் அலுவலகம் அல்லது வேறு யாதாயினும் அரச நிறுவனம் ஒன்றைத் தெரிவுசெய்து அந்நிறுவனத்தைப் பார்வையிடுவதற்கு களச் சுற்றுலா ஒன்றை ஏற்பாடு செய்க.

அந்த அவதானிப்பு மூலம் பின்வரும் துறைகள் பற்றிய விடயங்களைத் திரட்டி அறிக்கை ஒன்றை ஒழுங்குபடுத்துக. பொருத்தமான நியதிகளைப் பயன்படுத்தி மதிப்பீட்டுக்கு உட்படுத்துக.

- பதவி அடுக்கமைப்பு (படிநிலையமைப்பு)
- பணிக்குழு ஆட்சி
- அந்நிறுவனத்தால் நிறைவேற்றப்படுபவை
- அரச கொள்கைகள் நிறைவேற்றப்படும் விதம்
- அரச கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படும்போது அதனுடன் தொடர்பான வேறு நிறுவனங்கள்
- நிறுவனமொன்றின் முகாமைத்துவமும் அதன் சிறப்பியல்புகளும்

### மதிப்பீட்டுத் திட்டம் - 02

மனித இனத்தின் தொடக்க காலம் தொட்டு இன்றுவரை மோதல்கள் என்பது அவர்களின் நிலவுகையுடன் கட்டுண்டு இடம்பெறுவதொன்று என்பதை அரசியல் விஞ்ஞானத்தைக் கற்கும் மாணவர் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். இந்நிலைமையை கருப்பொருளாகக் கொண்டு தேவையாயின், ஆக்கபூர்வமான படங்கள், நிறங்கள் என்பவற்றைப் பயன்படுத்தி (கீழே தரப்பட்டுள்ள தலைப்புக்களை மாணவர் குழுக்களிடையே பகிர்ந்தளித்து) கூட்டாகச் சுவர்ப்பத்திரிகை ஒன்றைத் தயாரிப்பதில் மாணவர்களை ஈடுபடுத்துக.

- மோதல் - வரைவிலக்கணம்
  மோதல் மூலம்
  மோதல்களும் அவற்றின் தொழிற்பாடுகளும

மோதல்களும் வன்முறைகளும்
மோதல்களும் அஹிம்சையும்
மோதல்களைத் தீர்க்கக்கூடிய முறைகள்

இவற்றின்போது பின்வரும் விடயங்கள் பற்றியும் கவனம் செலுத்துக.

i. எல்லா மாணவர்களும் குழுக்களில் இடம்பெறுதல்.
ii. குழுவுக்கான தலைப்பு பற்றி ஆரம்ப கலந்துரையாடலுக்கும் திட்டமிடுவதற்கும் சந்தர்ப்பம் வழங்குக.
iii. எல்லா மாணவர்களும் குழுச் செயற்பாட்டில் ஈடுபட வழிப்படுத்துக.
iv. நேர முகாமைத்துவம்.
v. இறுதியான கூட்டு ஆக்கத்தை மாணவர்கள் பார்வையிடக்கூடியவாறு காட்சிப்படுத்துக.

## மதிப்பீட்டுத் திட்டம் - 03

தேசிய அரசியல் நிலைமைகளை மேவிச் செல்லும் சமூகத்தில் வாழவேண்டிய நிலைமைகளில் இன்றைய குடிமக்களுக்கு மாறுபடும் சர்வதேச நிலைமைகள் பற்றி விளங்கிக் கொள்ளுதல் இன்றைய தேவையாக உள்ளது. இதற்கேற்ப அரசியல் விஞ்ஞானத்தைக் கற்கும் மாணவர்களிடையே வளர்க்க வேண்டிய அறிவாக ஆய்வு ரீதியில் கட்டமைப்புடைய கட்டுரைகளை எழுதும் திறனை மாணவர்களிடையே உருவாக்குதல் வேண்டும்.

பின்வரும் பிரிவுகள் பற்றிய சமகால அரசியல் நிலைமைகளை மாணவர்கள் அவதானிக்கச் செய்க.

i. சர்வதேச அரசியலை இனங்காணுதல். (சர்வதேச அரசியல் என்றால் என்ன? அதன் தேவைப்பாடுகள் யாவை?)
ii. சர்வதேச உறவுகளின் இயல்புகள்.
iii. சர்வதேச உறவுகள் தற்போது உருப்பெற்றுள்ள விதம்.
iv. சர்வதேச செல்வாக்கினை சமப்படுத்தக்கூடிய உத்திகள்.
    - கூட்டுப் பாதுகாப்பு / வலுச் சமநிலை
    - சர்வதேச சட்டம்
    - ஆயுதப் பரிகரணம்
    - உலக அரசாங்கத்தை உருவாக்குதல்
v. இறுதி முடிவுகளையும் முன்மொழிவுகளையும் முன்வைத்தல்.
vi. ஆக்கபூர்வமான தலைப்பினைப் பயன்படுத்துதல்.

## தவணை II

### மதிப்பீடு 01

பொருத்தமான நிர்வாக முறையை உருவாக்குவதற்கு கருத்துள்ள அரசியல், சமூக, பல்வகைப்பட்ட அரசியலமைப்பு மாதிரிகளைப் பயன்படுத்துதல் வேண்டும். இதற்கேற்ப ஒவ்வொரு சமூகத்தினதும் தேவைகளின் இயல்புகளும் போக்குகளும் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருக்க முடியும். எனினும் அம்மாதிரிகள் பற்றி ஒப்பீட்டு ரீதியில் அறிதல் இவ்விடயத்தைக் கற்றலின் மூலம் ஏற்படுதல் வேண்டும். இதனால் தெரிவுசெய்யப்பட்ட ஐந்து நாடுகளின் அரசியலமைப்பு பற்றிய அறிவை உறுதிப்படுத்தும் விதத்தில்,

i. எண்ணக்கருப் படத்தை உருவாக்குவதற்கு மாணவர்களைக் குழுக்களாக்குக.
ii. தெரிவுசெய்யப்பட்ட ஐந்து நாடுகளினதும் 'அரசியலமைப்பு இயல்புகள்' எனும் தலைப்பை குழுக்களுக்கு வழங்குக.
iii. விரிவான தலைப்புக்கள் தொடக்கம் உப தலைப்புக்கள் வரை அப்பாட விடயங்கள் குறிப்பிடப்பட்டு பாடப்பரப்பு முழுமையாகப் பகிரப்படக்கூடிய விதத்தில் உள்ளதா எனப் பார்க்கவும்.
iv. ஒவ்வொரு குழுவினாலும் தயாரிக்கப்பட்ட பாடத்துக்கான படத்தை மதிப்பீடு செய்யப் பொருத்தமான நியதிகளைப் பயன்படுத்துக.

## தவணை II

### மதிப்பீட்டுத் திட்டம் - 02

சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியலமைப்பிலுள்ள சிறப்பியல்புகள், விதிமுறைகள், விசேட அரசியலமைப்பு நிறுவனங்கள் என்பன பற்றிய விளக்கத்தைப் பெறும் பொருட்டு இரட்டைப் பதிவுக் குறிப்பேடு தயாரிக்குக.

பின்வரும் விடயங்கள் பற்றிக் கவனம் செலுத்துக.

i. கருப்பொருளுக்கு ஏற்ற தகவல்களைத் திரட்டுதல்.
ii. கருத்தமைவும் தர்க்கரீதியிலானதுமான விளைவுகளை எடுத்துக் காட்டுதல்.
iii. தெரிவுசெய்யப்பட்ட தகவல்கள், துலங்கல்கள் என்பவற்றின் மூலம் அனைத்து விடயங்களையும் உள்ளடக்குதல்.
iv. சரியான தகவல்களைச் சேகரித்தல்.

## தவணை II

### மதிப்பீடு - 03

1978 ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு மூலம் அறிமுகஞ் செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க புதிய அம்சம் நிறைவேற்று ஜனாதிபதி முறையாகும். இதற்றேப சனாதிபதியின் அதிகாரமும் பணிகளும் பற்றி மாணவர்களின் அறிவை கணிப்பிடுவதே எதிர்பார்க்கப்படுகிறது.

- பின்வரும் தலைப்புகளுக்குப் பொருத்தமாக வகுப்பிலுள்ள மாணவர்களை பொருத்தமான விதத்தில் குழுக்களாக்கி ஒவ்வொரு குழுவுக்கும் தலைப்புக்களை வழங்குக.

    - ஜனாதிபதியும் அமைச்சரவையும்
    - ஜனாதிபதியும் சட்டவாக்கத்துறையும்
    - ஜனாதிபதியும் நீதித்துறையும்
    - ஜனாதிபதியும் அரச சேவையும்

- ஒவ்வொரு தலைப்புக்கும் பொருத்தமான 5 வினாக்களையும் அவற்றுக்குரிய விடைகளையும் தயாரித்து பாட அலகுக்கான வினாக்கொத்து நூலினை ஆக்குக.

- பொருத்தமான நியதிகளைக் கொண்டு மதிப்பீடு செய்க.

## தவணை III

### மதிப்பீடு - 01

நவீன இலங்கையின் அரசியல் செயன்முறையில் பின்வரும் சக்திகள் செயற்படும் விதம் பற்றி திறந்த நூல் பரீட்சையினை ஒழுங்குபடுத்துக.

- இந்நாட்டின் அரசியல் கட்சிகளும் கட்சிமுறையும்
- அழுக்கக் குழுக்கள்
- மக்கள் கருத்து
- வெகுசன ஊடகங்களும் அரசியலும்

மாணவர்களுடன் கலந்துரையாடி தேவையான நூல்கள், கட்டுரைகள் என்பவற்றைத் தயார்ப்படுத்துக. பரீட்சையை குழுச் செயற்பாடாக ஒழுங்குபடுத்துக. பின்வரும் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பதை ஆராய்க.

1. தலைப்புக்கள், பாட விடயங்கள் இடையேயான தொடர்புகள்.
2. தகவல் திரட்டுவதற்காக நூல்களைப் பயன்படுத்துதல்.
3. தகவல்களின் உண்மைத் தன்மையும் முக்கியத்துவமும்
4. ஒழுங்கு முறையாகத் தகவல்களைத் திரட்டுதல்.
5. தீர்வுகளையும் காரணங்களையும் கருத்துள்ள விதத்தில் எடுத்துக்காட்டுதல்.

## தவணை III

### மதிப்பீடு - 02

தெரிவுசெய்யப்பட்ட பிராந்திய மற்றும் பல்பக்க உலகளாவிய நிறுவனங்களுடன் இலங்கையின் வகிபாகத்தை ஆராய்ந்து செயற்றிட்ட அறிக்கை ஒன்றைத் தயாரிக்க மாணவர்களை ஒழுங்கமைக்குக.

பின்வரும் தலைப்புகளை இதற்காகப் பயன்படுத்துக.

- இலங்கையும் தென் ஆசிய பிராந்திய ஒத்துழைப்பு அமையமும்
- தென்கிழக்காசிய நாடுகளின் அமையமும், ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் சமகாலப்போக்கும்
- பொதுநலவாய அமைப்புக்களின் தற்போதைய நிலைமையும் எதிர்காலமும்
- ஐக்கிய நாடுகள் தாபனத்தின் கடமைகளும் இலங்கையும்
- தற்போதைய சர்வதேச நாடுகளில் அரசு சாரா நிறுவனங்களின் செயற்பாடுகள்

கணிப்பீட்டின்போது பின்வரும் விடயங்களைக் கவனத்திற்கொள்க.

1. தலைப்புக்குப் பொருத்தமான சரியான விடயங்களைத் திரட்டுதல்.
2. எல்லாப் பிரிவுகளுக்கும் உரிய விடயங்களை உள்ளடக்கும் விதத்தில் தகவல்களைத் திரட்டுதல்.
3. உரிய காலத்தினுள் பூரணப்படுத்துதல்.
4. விடயங்களை ஒழுங்குபடுத்துதலும் ஆக்கத்திறன் வெளிப்பாடும்.

## தவணை III

### மதிப்பீடு - 03

இலங்கையின் வெளியுறவுக் கொள்கையை வடிவமைப்பதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் பல உள்ளன. அவற்றைப் பகுப்பாய்வு செய்து சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் இயல்புகளையும் புதிய போக்குகளையும் நுணுகி ஆராய்ந்து கையேடு ஒன்றைத் தயாரித்தல். இதைத் தனியாள் ஒப்படையாக ஒழுங்குபடுத்துக.

- கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் :

i. பாடத்தின் அனைத்து பிரிவுகளும் உள்ளடங்கும் விதத்தில் விடயங்களை முன்வைத்தல்.
ii. சரியான, தர்க்க ரீதியான விடயங்களைத் திரட்டுதல்.
iii. விடயங்களைத் தேடியறிவதற்கு நூல்களைப் பயன்படுத்துதல்.
iv. ஆக்கத்திறன் வெளிப்படும் விதத்தில் பொருத்தமான விடயங்களை முன்வைத்தல்.